# HARTI



# වාර්ෂික වාර්තාව
# வருடாந்த அறிக்கை
# ANNUAL REPORT
# 2017

හෙක්ටර් කොබ්බෑකඩුව ගොවිකටයුතු පර්යේෂණ හා පුහුණු කිරීමේ ආයතනය
ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகம்
Hector Kobbekaduwa Agrarian Research and Training Institute

## உள்ளடக்கம்

**பக்கம்**


| | |
|---|---|
| தாபிப்பு | 1 |
| நிருவாகிகள் சபை | 3 |
| கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு | 5 |
| பொதுவான கண்ணோட்டம் | 6 |
| விவசாயக் கொள்கை மற்றும் கருத்திட்ட மதிப்பீட்டுப் பிரிவு | 10 |
| விவசாய வளங்கள் முகாமைத்துவப் பிரிவு | 17 |
| சுற்றாடல் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவப் பிரிவு | 24 |
| உணவு சந்தைப்படுத்தல் கொள்கை மற்றும் விவசாய வர்த்தகப் பிரிவு | 37 |
| மனித வளங்கள் மற்றும் நிறுவன அபிவிருத்திப் பிரிவு | 45 |
| ஏனைய செயற்பாடுகள் | 53 |
| புள்ளிவிபரங்கள் மற்றும் தரவுகள் படிமுறைப்படுத்தல் பிரிவு | 57 |
| நூலகம் | 62 |
| வெளியீட்டுப் பிரிவு | 65 |
| 2017 திசம்பர் 31 ஆம் திகதியிலுள்ள பதவியணி நிலை பற்றிய விபரம் | 68 |
| ஊழியர் அபிவிருத்தி | |
| கணக்குகள் | 74 |
| கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை - 14 (2 இ) | 93 |
| பதில் - கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை | 103 |

# தாபிப்பு

ஹெக்டெர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகம் (HARTI) 1972 இன் 5 ஆம் இலக்க விவசாய ஆராய்ச்சி பயிற்சி நிறுவக சட்டத்தின் கீழ் 1972 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டது. இந்த நிறுவகம் கமத்தொழில் அமைச்சின் கீழ் ஒரு நியதிச்சட்ட சபையாக தொழிற்படுகின்றது. இந்த நிறுவகம் பிரதானமாக விவசாயத் துறையினதும் மற்றும் கிராமியத் துறையினதும் பயிற்சி சார்ந்த தேவைகளை அடையாளப்படுத்துகின்ற கொள்கை அடிப்படையிலான ஆராய்ச்சிகளை ஊக்குவிப்பதற்காக தாபிக்கப்பட்டது. நாட்டில் விவசாய ஆராய்ச்சியில் முதன்நிலை வகிக்கும் இந்த HARTI நிறுவகம் அது தாபிப்பு பெற்ற நாளிலிருந்து விவசாயத் துறையின் அபிவிருத்தி சார்ந்த கொள்கைகளை வகுத்தமைப்பதற்கான தகவல்களை வழங்கியும் மற்றும் சமூகப் பொருளாதார ஆராய்ச்சி மற்றும் பயிற்சி ஆகியவற்றை நடத்தியும் 40 வருடங்களுக்கும் அதிக கால அனுபவத்தைக் கொண்டுள்ளது.

## கட்டாய குறிக்கோள்கள்

மேற்குறித்த சட்டத்தின் 3 (1) ஆம் பிரிவினது ஏற்பாடுகளின் கீழ், நிறுவகத்தின் பொதுவான கட்டாய குறிக்கோள்கள் பின்வருமாறு:

i. கமநல ஆராய்ச்சியை வளர்த்தல், அதற்கு உதவுதல், அதனை ஊக்குவித்தல், மற்றும் அதில் கூட்டுறவுடன் தொழிற்படுதல்.

ii. அரசாங்க திணைக்களங்கள், உள்ளூராட்சி மன்றங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்கள் என்பவற்றின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற கமநல ஆராய்ச்சி சார்ந்த செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல்.

iii. விவசாயத்தின் அபிவிருத்தியை பாதிக்கின்ற நிறுவனம் சார்ந்த காரணிகள் தொடர்பான ஆராய்ச்சிகளையும் மற்றும் ஆய்வுகளையும் மேற்கொள்ளல்.

iv. விவசாய நோக்கங்களுக்கான நிலத்தின் பொருளாதார ரீதியான பாவனையுடன் தொடர்புடைய ஆராய்ச்சிகளையும் மற்றும் ஆய்வுகளையும் மேற்கொள்ளல்.

v. விவசாயம் மற்றும் கிராமிய அபிவிருத்தி ஆகியவற்றுடன் தொடர்புடைய சமூகப் பொருளாதார ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல்.

vi. தனியாக அல்லது இலங்கையிலுள்ள அல்லது வெளிநாடுகளிலுள்ள ஏனைய நிறுவனங்களுடன் இணைந்து டிப்ளோமாக்கள், பட்டங்கள், பரிசில்கள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய நன்மதிப்புகள் என்பவற்றை பெற்றுக்கொடுக்கும் வகையில் கமநல ஆராய்ச்சி தொடர்பான பயிற்சி சார்ந்த செயற்பாடுகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றை செயற்படுத்துதல், மேற்கொள்ளல் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய வசதிகளைப் பெற்றுக்கொடுத்தல்.

vii. உள்நாட்டு, பிராந்திய மற்றும் சர்வதேச மட்டங்களில் மாநாடுகள், கருத்தரங்குகள் மற்றும் வேலையரங்குகள் என்பவற்றை நடத்துதல் மற்றும் அத்தகையவற்றுக்கு அனுசரணை வழங்குதல்.

viii. சிய பிராந்திய நாடுகளுடன் கூட்டிணைந்து அவற்றின் பிராந்திய ரீதியான தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு விவசாய கட்டமைப்பின் பிரச்சினைகள் தொடர்பான அத்தகைய ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல் மற்றும் விவசாயம் சம்பந்தப்பட்ட விடயங்கள் தொடர்பான தகவல்களை சேகரிப்பதற்கும் மற்றும் பரம்பல்செய்வதற்குமான ஒரு நிலைய வசதியை ஏற்பாடு செய்து வழங்குதல்.

ix. பொதுவாக இலங்கைக்கும் மற்றும் ஏனைய ஆசிய பிராந்திய நாடுகளுக்கும் விஷேட குறிப்புடன் விவசாய அபிவிருத்தி மற்றும் நவீனப்படுத்தல் ஆகியவற்றுடன் தொடர்புடைய பிரச்சினைகளுடன் அத்தகைய ஆராய்ச்சிகளை தொடர்புபடுத்துதல்.

### தூரநோக்கு

நிலையான கமநலத்திற்கும் கிராமிய அபிவிருத்திற்குமான அறிவு உருவாக்கத்திலும் மற்றும் அறிவு பரம்பலிலும் முதன்னிலை வகித்தல்.

### செயற்பணி

ஆராய்ச்சி மற்றும் பயிற்சி சார்ந்த செயற்பாடுகளை மேற்கொள்வதனூடாக கமநலத் துறையையும் மற்றும் கிராமியத் துறையையும் வலுப்படுத்துதல்.

### குறிக்கோள்கள்

i. விவசாய விடங்களில் சமூகப் பொருளாதார ஆராய்ச்சியில் சிறந்த ஒரு நிலையமாக விளங்குதல்.
ii. அரசாங்க நிறுவனங்களிலும், வியாபாரத் துறையிலும் திட்டமிடுபவர்களுடனும் கொள்கை ஆக்குநர்களுடனும் மற்றும் ஆராய்ச்சி சமூகங்களுடனும் நெருங்கிய தொடர்பை பேணுதல்.
iii. அறிவு உருவாக்கம் மற்றும் உரிய காலத்திற்கு அத்தகைய அறிவை பரம்பல்செய்தல் ஆகியவற்றினூடாக கொள்கை வகுத்தமைப்பையும் செயற்படுத்துகை நடபடிமுறையையும் மிகவும் பயனுள்ளதாக மாற்றியமைத்தல்.
iv. தேசிய கொள்கை விடயங்களில் சுயாதீன மதிப்பீட்டு வாய்ப்புகளை வழங்குவதன் மூலமாக பொதுமக்களை அறியப்படுத்துதல்.
v. நிறுவகத்தின் அறிவுத் தளத்தினதும் மற்றும் ஊழியர்களினதும் ஆற்றல்களில் முதலீடு செய்வதனூடாக சமூகப் பொருளாதார கொள்கைப் பகுப்பாய்வுக்கான ஆற்றலை வலுப்படுத்துதல்.
vi. கிராமிய அபிவிருத்தியில் அக்கறையுடைய தரப்புகளின் ஆற்றலை பயிற்சியினூடாக அதிகரித்தல்.

# நிருவாகிகள் சபை

| | | |
|---|---|---|
| திரு பீ. விஜேரத்ன, தலைவர் | - | செயலாளர், கமத்தொழில் அமைச்சு, நிருவாகிகள் சபையின் தலைவர் |
| திரு ஹப்புதந்திரி தர்மசேன | - | பணிப்பாளர்/பி.நி.அ. (கடந்த செப்டம்பர் வரை) |
| திரு கே.டப்ளியூ.இ. கறலியத்த | - | பணிப்பாளர்/பி.நி.அ. (செப்டம்பர் 22 ஆம் திகதி முதல்) |
| திரு என்.பி.வி.சி. பியதிலக்க | - | சபை உறுப்பினர், மேலதிக செயலாளர் (நிருவாகம்) கமத்தொழில் அமைச்சு (யூன் மாதம் வரை) |
| கலாநிதி டப்ளியூ.எம்.டப்ளியூ. வீரகோன் | - | சபை உறுப்பினர், மேலதிக செயலாளர் (கமத்தொழில் அமைச்சு) (விவசாய அபிவிருத்தி) (யூலை மாதம் முதல்) |
| திரு எல்.பீ.எஸ்.பீ. தயாரத்ன | - | சபை உறுப்பினர், மேலதிக செயலாளர் (காணிகள்), காணிகள் அமைச்சு |
| திரு எம்.ஆர்.வி.ஆர். மீபுற | - | சபை உறுப்பினர், பணிப்பாளர், பொதுத் தொழில்முயற்சிகள் திணைக்களம், நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு |
| திரு யூ.ஜி. ரத்னஸ்ரீ | - | சபை உறுப்பினர், மேலதிக செயலாளர் (பொருளாதார விவகாரங்கள்), தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சு |
| திருமதி கே. பியரத்ன | - | சபை உறுப்பினர், மேலதிக செயலாளர் (மறுசீரமைப்பு), கைத்தொழில்கள் மற்றும் வர்த்தக அமைச்சு |
| திருமதி கே.என்.கே. சோமரத்ன | - | சபை உறுப்பினர், மேலதிக செயலாளர் (நிருவாகம்), பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சு (யூலை மாதம் வரை) |
| திருமதி பீ.எல்.டீ. பாளசூரிய | - | சபை உறுப்பினர், கல்விப் பணிப்பாளர் (விவசாயம் மற்றும் சுற்றாடல் கல்வி பிரிவு), கல்வி அமைச்சு |
| திரு எஸ். சேனாநாயக்க | - | சபை உறுப்பினர், மேலதிக செயலாளர் (அபிவிருத்தி மற்றும் திட்டமிடல்), கிராமிய பொருளாதார அமைச்சு |
| கலாநிதி (திருமதி) வை.எம். இந்திரரத்ன | - | சபை உறுப்பினர், பணிப்பாளர், பொருளாதார ஆராய்ச்சிப் பிரிவு, இலங்கை மத்திய வங்கி |
| கலாநிதி ஆர்.ஆர்.ஏ. விஜேகோன் | - | சபை உறுப்பினர், விவசாய பணிப்பாளர் நாயகம் |

| | | |
|---|---|---|
| திருமதி ஆர்.எம்.சி.எச். ஹேரத் | - | சபை உறுப்பினர், காணிகள் ஆணையாளர் நாயகம் |
| திரு டீ.வி. பந்துலசேன | - | சபை உறுப்பினர், பதில் கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் |
| திரு எஸ். மோகனராஜா | - | சபை உறுப்பினர், நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகம் |
| திரு எஸ்.எல். நசீர் | - | சபை உறுப்பினர், கூட்டுறவுத் திணைக்கள ஆணையாளர் |
| திரு ஜே.ஜே.எஸ். ஜயமான்ன | - | சபை உறுப்பினர், பதில் செயலாளர், நிருவாகிகள் சபை (ஒற்றோபர் மாதம் முதல்) |

## நிருவாகிகள் சபைக் கூட்டங்கள்

| கூட்டங்கள் நடைபெற்ற திகதிகள் | கலந்துகொண்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை |
|---|---|
| 1. 2017 பெப்ருவரி 16 | 10 |
| 2. 2017 மார்ச் மாதம் 16 | 10 |
| 3. 2017 மே மாதம் 18 | 06 |
| 4. 2017 யூன் 28 | 09 |
| 5. 2017 யூலை 20 | 11 |
| 6. 2017 நவம்பர் 20 | 13 |
| 7. 2017 திசம்பர் 29 | 10 |

## கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

திரு எம்.ஆர்.வி.ஆர். மீபுற (தலைவர்) - பணிப்பாளர், பொதுத் தொழில்முயற்சிகள் திணைக்களம், நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு

1. திரு ஏ.எம்.எச்.எல். அம்பன்வெல (அவதானிப்பாளர்) - பிரதி கணக்காய்வாளர் அதிபதி, கணக்காய்வாளர் அதிபதியின் திணைக்களம்
2. திரு என்.பி.வி.சி. பியதிலக்க (உறுப்பினர்) - மேலதிக செயலாளர் (நிருவாகம்), கமத்தொழில் அமைச்சு
3. திருமதி கே.என்.கே. சோமரத்ன (உறுப்பினர்) - மேலதிக செயலாளர் (நிருவாகம்), பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சு
4. திருமதி ஜி.எச்.ஐ. விந்தியா (அவதானிப்பாளர்) - கணக்காய்வு அத்தியட்சகர், கணக்காய்வாளர் அதிபதியின் திணைக்களம்
5. திரு பி.எல். நாமசேன (அவதானிப்பாளர்) - பிரதான உள்ளகக் கணக்காய்வாளர், கமத்தொழில் அமைச்சு
6. திருமதி என்.சி. ஏக்கநாயக்க (ஏற்பாட்டாளர்) - உள்ளகக் கணக்காய்வாளர், HARTI நிறுவகம்

## கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள்

### கூட்டங்கள் நடைபெற்ற திகதிகள்

2017 சனவரி 30
2017 நவம்பர் 6
2017 திசம்பர்11

## பொதுவான கண்ணோட்டம்

ஹெக்டெர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகம் 2015 ஆம் ஆண்டில் ஆட்சிக்கு வந்த தற்போதைய அரசாங்கத்தின் தேர்தலின் பின்னர் செயற்படுத்திய விவசாய கிராமிய அபிவிருத்திக் கொள்கைகளை அனுசரித்து தனது சமூகப் பொருளாதார ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக் கொள்கைகளையும் மற்றும் திட்டங்களையும் செயற்படுத்தியது. அதற்கு இணங்க, ஆரம்பித்த பல சமூகப் பொருளாதார ஆராய்ச்சிகளை 2017 ஆம் ஆண்டில் நிறைவு செய்ய முடிந்தது. பொருத்தமான கொள்கைகளினதும் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களினதும் அடிப்படையில் பல வகையான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களும் நிறைவு செய்யப்பட்டன. ஆகையால், பல வகை அடிப்படை சமூகப் பொருளாதார ஆராய்ச்சிகள் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டு, அவற்றின் முடிவுகளை எமது நிறுவகம் வெளியிட்டுள்ளது. உணவு உற்பத்தி தேசிய நிகழ்ச்சித் திட்டம் 2016-18, நச்சு நீங்கிய விவசாய உற்பத்திகள் நிகழ்ச்சித் திட்டம், பசளைப் பண மாணிய நிகழ்ச்சித் திட்டம் என்பன அடங்கலாக அரசாங்கம் செயற்படுத்திய பல நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பான கொள்கைகளை ஆக்குவதற்கு இத்தகைய ஆராய்ச்சிகளின் முடிவுகள் அவசியமாகும். இதே நேரம், கமத்தொழில் அமைச்சு, விவசாயத் திணைக்களம் ஆகியன உள்ளடங்கலாக பல அரசாங்க நிறுவனங்களின் சார்பாக, மேற்குறித்த நிகழ்ச்சித் திட்டங்களுக்கு பொருத்தமான பல வகை விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களும் செயற்படுத்தப்பட்டன. வெளிநாட்டு உதவிகளின் அடிப்படையில் ஏனைய பல ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களும் நடத்தப்பட்டன.

அதற்கு இணங்க, யாழ்ப்பாணம் நுவரெலியா ஆகிய மாவட்டங்களின் விவசாயிகளினது மரக்கறி உற்பத்திகள் மற்றும் சந்தைப்படுத்தல் ஆகிய செயற்பாடுகள் தொடர்பில் அந்த விவசாயிகளுக்கு இருக்கின்ற தடைகள், செயலாற்றுகை (திறமுறைகள்) முதலிய விடயங்களை இனங்காணும் நிமித்தம் எமது நிறுவகத்தின் விவசாயக் கொள்கை மற்றும் கருத்திட்டப் மதிப்பீட்டுப் பிரிவினால் ஒரு சமூகப் பொருளாதார ஆராச்சி மேற்கொள்ளப் பட்டது. அந்த ஆராய்ச்சி பற்றிய அறிக்கை 2017 ஆம் ஆண்டில் வெளியிடப் பட்டது.

இரண்டு ஆய்வுகளினதும் சகல செயற்பாடுகள்: உணவுகளின் பாதுகாப்பு நிமித்தம் இலங்கையின் வீட்டுத் தோட்டப் பயிர்ச் செய்கையையும் மற்றும் சுதேசிய அறிவின் (சு.அ.) முக்கியத்துவத்தையும் நிர்ணயிக்கும் காரணி: இந்தப் பிரிவு ஆரம்பித்த பயிர்ச் செய்கைச் செயற்பாடுகள் தற்பொழுது நிறைவு செய்யப்பட்டுள்ளன. வெளியிடும் நிமித்தம் ஆய்வு அறிக்கைகள் தயாராகவுள்ளன.

எமது நிறுவகத்தின் விவசாய வள முகாமைத்துவப் பிரிவு தற்போதைய அரசாங்கம் செயற்படுத்திய '2016-2018 உணவு உற்பத்தித் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின்' நிரலில் 2017 ஆம் ஆண்டில் நான்கு சமூகப் பொருளாதார ஆராய்ச்சிகளை வெற்றிகரமாக நிறைவு செய்து அவற்றின் முடிவுகளை வெளியிட்டுள்ளது. அதற்கிணங்க, கீழே குறிப்பிடப்பட்டிருக்கின்ற சமூகப் பொருளாதார ஆராய்ச்சிகள் நிறைவு செய்யப்பட்டு, அவற்றின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

- இலங்கையின் தென் கிழக்குப் பிரதேச சோள உற்பத்தி முறைமை: நிலைபெறுதகுதன்மையிலுள்ள மட்டுப்பாடுகளும் அதிகரிப்பிலுள்ள சாத்தியங்களும்
- மொனராகல மாவட்டத்தின் தெலுள்ள சின்ன வெங்காயப் பயிர்ச் செய்கை முறைமையின் நிலைபெறுதகுதன்மை
- குறிப்பாக நிலக்கடலை, பாசிப் பயறு மற்றும் கரும்பு முதலிய உற்பத்திகளுக்கு விஷேட கவனத்துடன் இலங்கையின் தென் கிழக்கு உலர் வலய முக்கியமான உணவுப் பயிர் உற்பத்தி முறைமைகளின் நிலைபெறுதகுதன்மை
- பூகோள மாற்றமும் மற்றும் நிலைபெறுதகுதன்மையும் தொடர்பான இலங்கையிலுள்ள விவசாய ஆராய்ச்சிக் கொள்கை தொழில்நுட்ப நபர்களின் ஆற்றல் அபிவிருத்தி

எமது நிறுவகத்தின் சுற்றாடல் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவப் பிரிவு விவசாய மற்றும் கிராமிய அபிவிருத்திக் கொள்கையுடன் தொடர்புடைய தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சித் திட்டம் அடங்கலாக 2017 ஆம் ஆண்டில் ஐந்து சமூகப் பொருளாதார ஆராய்ச்சிகளை மேற்கொண்டு அவற்றின் முடிவுகளை வெளியிட்டுள்ளது. இன்னும் ஒரு ஆராய்ச்சி நிறைவு செய்யப் படவுள்ளது. இதே நேரம் பின்வரும் ஆராய்ச்சி அறிக்கைகள் நிறைவு செய்யப் பட்டு வெளியிடப்பட்டுள்ளன.

- 2016-2018 தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சித் திட்ட அடிப்படை ஆய்வு
- குளப் படுக்கைகளிலுள்ள அதிக வண்டல் மண் மீதான மனிதனின் செயற்பாடுகளும் விவசாயத்தின் மீது அவற்றின் தாக்கங்களும் பற்றிய ஆய்வு
- இலங்கையின் விவசாயத்திலுள்ள உயிரியல் பூச்சிகொல்லிகளின் சாத்தியங்களும் மற்றும் மட்டுப்பாடுகளும் மற்றும் உயிரியல் பசளைப் பாவனையும் உற்பத்தியும்
- விவசாயப் பட்டதாரிகளையும் விவசாய டிப்ளோமா தாரிகளையும் இலங்கையின் விவசாயத் துறையினுள் உள்ளீர்த்தல் பற்றிய ஆய்வு: தற்போதைய நிலையும் தடைகளும்
- ஒன்றிணைந்த நீர் வள முகாமைத்துவ எண்ணக்கரு அபிவிருத்திற்கு இலங்கையின் புராதண நீர் முகாமைத்துவ நுட்பங்களிலிருந்து கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்கள் பற்றிய ஆய்வு

மேற்குறித்த ஆராய்ச்சி அறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன. இலங்கையின் உலர் வலயத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட உணவு உற்பத்தி முறைமைகளின் காலநிலை மாற்றங்களின் தாக்கம் பற்றிய ஆய்வு இறுதிக் கட்டத்திலுள்ளது.

உணவு சந்தைப்படுத்தல் கொள்கை மற்றும் வியாபாரப் பிரிவு 2017 ஆம் ஆண்டில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள சமூகப் பொருளாதார ஆராய்ச்சிகளை மேற்கொண்டு நிறைவு செய்து அவற்றின் முடிவுகளை வெளியிட்டுள்ளது.

- இலங்கையில் பழ வர்க்க மற்றும் மரக்கறி வகைச் சங்கிலிகளிலுள்ள தரமும் பாதுகாப்பும் சார்ந்த அம்சங்கள்: ஓர் மீளாய்வு

- இலங்கையின் பசளைப் பண மானிய நிகழ்ச்சித் திட்டம்: ஓர் சமூகப் பொருளாதார மீளாய்வு
- இலங்கையில் நெல் சந்தைப்படுத்தல் மீதான அரச தனியார் துறை தலையீட்டு நடவடிக்கையில் விவசாயிகளின் தற்போதைய நிலை பற்றிய கண்ணோட்டமும் எதிர்கால வழிகாட்டலும்

எமது நிறுவகத்தின் மனித வளங்கள் மற்றும் நிறுவனப் பிரிவு 2017 ஆம் ஆண்டில் கமநல அபிவிருத்தித் திணைக்களம் அடங்கலாக அரச மற்றும் அரச சாரா நிறுவனங்களுக்காக பல தலைப்புகளின் கீழ் ஒன்பது பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தியது. அதற்கிணங்க, குறித்த அந்த நிகழ்ச்சித் திட்டங்கள் பின்வருமாறு:

- கமக்காரர் அமைப்பு ஊக்குவிப்பு பற்றிய பயிற்சி நிகழச்சித் திட்டம்
- ஆரோக்கியமான பரம்பரையினருக்கான விவசாயம் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்
- தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் நிரலில் விவசாயத் தலைவர்களை ஊக்குவிப்பதற்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்
- 2017 ஆம் ஆண்டிற்கான பட்டினி ஒழிப்பு ஆண்டுகள் நிரலில் 'பெண் விவசாயிகளை ஊக்குவிப்பதன் மூலம் விவசாயக் குடும்பங்களை ஊக்குவித்தல்' பற்றிய ஒரு நாள் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்
- சமூக ஊக்குவிப்பு பற்றிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்
- விவசாய வியாபார சந்தைப்படுத்தல் விரிவாக்கல்களின் பிரயோகம் பற்றிய இரண்டு நாள் பயிற்சி வேலையரங்கு
- பொலிதீன் பொருட்களின் பாவனையும் மற்றும் அழியக் கூடிய உயிரியல் மாற்றீடுகளை பாவிப்பதன் சாத்தியமும் பற்றிய ஒரு நாள் வேலையரங்கு
- சாதக மானபாவங்கள் விருத்தி பற்றிய வேலையரங்கு
- எமது நிறுவகத்தின் புதிதாக ஆட்சேர்த்துக் கொள்ளப்பட்ட அராய்ச்சி ஊழியர்களுக்கான தொழில் வழிகாட்டல் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்

இந்த வேலையரங்குகளுக்கும் மற்றும் பயிற்சி நிகழச்சித் திட்டங்களுக்கும் மேலதிகமாக, இந்தப் பிரிவு ஏனைய நிறுவனங்களுக்கு பயிற்சி சார்ந்த நிபுணத்துவத்தை வழங்கும் நிமித்தம் நடவடிக்கைகளை மேற்கொண்டது. எமது நிறுவகத்தின் ஆராய்ச்சிப் பிரிவு 2017 ஆம் ஆண்டில் நிறைவு செய்து முடிவுகளை வெளியிட்ட மேற்குறித்த சமூகப் பொருளாதார ஆராய்ச்சி மற்றும் இந்தப் பிரிவு நடத்திய பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் என்பவற்றுக்கு மேலதிகமாக, ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் 2017 ஆம் ஆண்டில் உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியில் ஒன்பது ஆராய்ச்சி ஆவணங்களை வெளியிட்டனர்.

ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் உள்நாட்டு மற்றும் சர்வதேச வெளியீடுகள் (இதழ்கள், சஞ்சிகைகள்) நிமித்தம் இரண்டு கட்டுரைகளை வழங்கினார்கள். ஆராய்ச்சி உத்தியோகத்தர்களும் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களும் இணைந்து 11 விடயங்களின் கீழ் குழுக்கள், வேலையரங்குகள் மற்றும் உச்சி மாநாடுகள் என்பவற்றைப் பிரதிநிதிப்படுத்தியுள்ளனர்.

எமது நிறுவகத்தின் ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் இரண்டு தடவைகளில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக தமது பங்களிப்பை நல்கியுள்ளனர்.

எமது நிறுவகத்தின் பிரதான குறிக்கோளாக விளங்கும் சமூகப் பொருளாதார ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொள்ளும் பணி தவிர,

புள்ளிவிபரவியல் மற்றும் தரவுகள் படிமுறைப்படுத்தும் பிரிவும் மற்றும் நூலகமும் இணைந்து 2017 ஆம் ஆண்டில் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி துறைக்கு அதிகளவில் பங்களிப்புச் செய்துள்ளன.

ஆராய்ச்சிப் பிரிவுகளின் நிறைவு செய்யப்பட்ட ஆராய்ச்சி அறிக்கைகள் அடங்கலாக சகல வெளியீட்டுப் பொறுப்புகளும் ஒப்படைக்கப்பட்டுள்ள நிறுவகத்தின் வெளியீட்டு பிரிவு பின்வரும் அறிக்கைகளை பிரசுரித்துள்ளது.

ஆங்கில மொழியில் எட்டு ஆராய்ச்சி அறிக்கைகள்
சிங்கள மொழியில் நான்கு ஆராய்ச்சி அறிக்கைகள்
மூன்று பணி ஆவணங்கள்
ஒரு வேலையரங்கு நடபடிமுறை
இரண்டு சஞ்சிகைகள் (ஒவ்வொன்றும் ஆங்கிலம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில்)
நான்கு இதழ்கள்
ஐந்து செய்தி ஆவணங்கள் (ஆங்கில மொழியில் இரண்டு மற்றும் சிங்கள மொழியில் மூன்று) மற்றும் மேலும் 2017 ஆம் ஆண்டில் வெளியிட்ட வெளியீடு மற்றும் நான்கு வகை பிற பங்களிப்புகளையும் நல்கியுள்ளது.

**கே.டப்ளியூ.இ. கறலியத்த**
**பணிப்பாளர்**

## விவசாயக் கொள்கை மற்றும் கருத்திட்டங்கள் மதிப்பீட்டுப் பிரிவு

### நிறைவு செய்யப்பட்ட ஆய்வுகள்

**01. இலங்கையில் மரக்கறி வகைகளை சந்தைப்படுத்துவதிலுள்ள பிரச்சினைகளுக்கு பரிகாரமளிக்கும் பொருட்டு விவசாயிகளின் பரஸ்பர செயற்பாடு தொடர்பான சாத்தியங்கள்**

**ஆராய்ச்சிக் குழு :**கலாநிதி டப்ளியூ.ஏ.ஆர். விக்ரமசிங்க - ஒருங்கிணைப்பாளர்

**நிதியிடும் மூலம்:** திரட்டு நிதியம்

**நோக்கெல்லையும் குறிக்கோள்களும்:**

மரக்கறிப் பயிர் பெறுமான சங்கிலியின் அதிகமான பிரச்சினைகள் சந்தைப்படுத்தலில் ஒருமுகப்பட்டிருப்பதால், மரக்கறி வகைகளை சந்தைப்படும் விடயம் இலங்கையின் மரக்கறிப் பயிர் உற்பத்திப் பிரிவில் முக்கியமான ஒரு இடத்தைப் பிடித்துள்ளது. மரக்கறி வகைகளுக்கு குறைந்தளவான விலைகள் கிடைப்பதால் விற்பனை செய்ய முடியாமல் மரக்கறிப் பயிர் உற்பத்தியில் மிகை ஏற்படுவது விவசாயிகள் எதிர்நோக்கும் ஒரு முக்கிய பிரச்சினையாகும். மரக்கறி வகை விநியோக சங்கிலியில் அக்கறையுடைய தரப்புகளுக்கான சந்தை எல்லையை அதிகரிக்கும் நோக்கில் இலங்கையின் மரக்கறி வகைகளின் விநியோக சங்கியிலியில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டாலும், சந்தைப்படுத்தல் தொடர்பான பிரச்சினைகள் இன்றும் காணப்படுகின்றன.

மரக்கறி வகைகளின் விநியோக சங்கிலியில் ஏற்படுத்தப்பட்ட அண்மை கால மாற்றங்கள் மரக்கறி வகைகளின் ஏற்றுமதியில் மிகவும் வெளிப்படையானதாகும். இது வளர்ந்து வருகின்ற ஒரு போக்காகவும் (சுபாஷினி et. al, 2015) மற்றும் மரக்கறி வகைகளின் சங்கிலியில் நுழைவதற்கான சுப்பர் மார்கெட்டு வாய்ப்புகளாகவும் (பெரேரா et al, 2004) காணப்படுகின்றது. மரக்கறி வகைகளின் சந்தைப்படுத்தல் சங்கிலிகளின் விஸ்தரிப்பு தவிர, மரக்கறிப் பயிர்களை பயிரிடும் விவசாயிகளில், மரக்கறி வகைகளின் விநியோக சங்கிலிகளில் நுழைகின்ற சுப்பர் மார்கெட்டு வசதிகளினால் கடுமையான மாற்றம் ஏதும் நிகழவில்லை (பெரேரா et al, 2004). ஆகையால், மரக்கறி வகைகளின் விநியோக சங்கிலியின் இந்த மாற்றங்கள் மரக்கறிச் சந்தையின் தெளிவுக்கு ஆதரவளிப்பதாகவில்லை. மேலும், இந்த நிலையில், சந்தை விலையை ஒரு சில கொள்வனவுத் தரப்புகள் நிர்ணயிக்கின்ற பலவுரிமை சந்தையின் ஆதிக்கம் விலை நிர்ணயத்திலும் மற்றும் மரக்கறிப் பயிர்களை பயிரிடும் விவசாயிகளின் பொருளாதாரப் பிரச்சினைகளை உக்கிரமடையச் செய்வதிலும் செல்வாக்கு செலுத்துகின்றது. வர்த்தகர்களுக்கான கடன் பொறுப்பு மற்றும் விவசாயிகள் ஒழுங்கமையாதிருக்கின்றமை, சந்தைத் தகவலின்மை என்பவற்றின் காரணமாக பேரம்பேசும் வலிமை இல்லாதிருப்பதால், மரக்கறிப் பயிர்களை பயிரிடும் விவசாயி, விலையை பெறுபவராக மாறியுள்ளார் (ரூபசேன, 1999).

ஒரு தனியான மரக்கறி இனத்தின் மேலதிக உற்பத்தியை கட்டுப்படுத்துவதனூடாக மரக்கறிக்கான கேள்வியைப் பேணுவது மரக்கறி வகைகளை சந்தைப்படுத்துவதிலுள்ள பிரச்சினைகளுக்கான தீர்வுகளில் ஒரு தீர்வாக அமையும். மரக்கறிப் பயிர்களைப் பயிரிடும் விவசாயிகளுக்கு மத்தியில், ஒவ்வொரு விவசாயின் மரக்கறிப் பயிர்ச் செய்கை தொடர்பான தகவல்கள் பற்றிய விழிப்புணர்வையும் மற்றும் ஒவ்வொரு மரக்கறி வகையினதும் தேவையான உற்பத்தியையும் ஒருங்கிணைப்பது அவசியமாகும். ஆகையால், ஒவ்வொரு விவசாயினாலும் சந்தைப் பங்கை பேணிக்கொள்ளலாம். மரக்கறிப் பயிர்களின் உற்பத்தி தொடர்பில் விவசாயிகளினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் மற்றும் திறமுறைத்திட்டங்கள் என்பன தொடர்பான தகவல்களை மரக்கறிப் பயிர்களை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு மத்தியில் ஒழுங்கமைத்து ஒருங்கிணைந்த ஒரு பொறிமுறைத்திட்டத்தைத் தயாரித்தல் அவசியமாகும். இலங்கையில் மரக்கறி வகைகளின் விநியோக சங்கிலி மற்றும் சந்தைப்படுத்தல் ஆகியன தொடர்பில் பல ஆய்வுகள் (இஸ்ஹாம் மற்றும் உஷாமி, 2005; இஸ்ஹாம் et al. 2006; ரூபசேன, 1999; விக்ரமஆராச்சி, 2004; பெரேரா et al, 2004; சுபாஷினி et. al, 2015) மேற்கொள்ளப்பட்டிருந்தாலும், இலங்கையில் மரக்கறிப் பயிர்களை பயிரிடும் விவசாயிகளின் திறமுறை சார்ந்த நடத்தை தொடர்பில் எந்தவிதான ஒரு ஆய்வும் மேற்கொள்ளப்படவில்லை. ஆகையால், இந்த ஆய்வு மரக்கறிப் பயிர்களை பயிரிடும் விவசாயிகளின் திறமுறை சார்ந்த செயற்பாடுகள், இந்த செயற்பாடுகளுக்கு காரணமாக அமைகின்ற காரணிகள், ஒருங்கிணைந்த அல்லது கூட்டுறவு செயற்பாடுகளில் மாறிவருகின்ற அந்த விவசாயிகளின் சாத்தியங்கள் என்பன பற்றி ஆராய்வதில் ஒருமுகப்படுகின்றது.

மரக்கறிப் பயிர்களின் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் ஆகியன தொடர்பில், மரக்கறிப் பயிர்களை உற்பத்தி செய்கின்ற விவசாயிகளின் ஏற்கெனவேயிருந்து வருகின்ற செயற்பாடுகளையும் (திறமுறைத்திட்டங்கள்) மற்றும் அந்த செயற்பாடுகள் தொடர்பான பிரச்சினைகளையும் அறிந்துகொள்வது இந்த ஆய்வின் முக்கிய குறிக்கோளாகும். ஆகையால், மரக்கறி வகைகளை சந்தைப்படுத்துவதிலுள்ள பிரச்சினைகளுக்கு பரிகாரமாக விவசாயிகளினது கூட்டுச்செயற்பாடுகளின் சாத்தியங்கள் இனங்காணப்படுகின்றன. பின்வரும் விஷேட குறிக்கோள்களை செயற்படுத்துவதன் மூலமாக ஆய்வின் முக்கிய குறிக்கோள் அடையப்படுகின்றது. 1. தற்போது மரக்கறிப் பயிர்களின் உற்பத்தியியிலும் மற்றும் சந்தைப்படுத்தலிலும் மரக்கறி விவசாயிகளினால் செயற்படுத்தப்படும் செயற்பாடுகளையும் (திறமுறைத்திட்டங்கள்) இந்த செயற்பாடுகளிலிருந்து கிடைக்கும் நன்மைகளையும் ஆராய்தல், 2. மரக்கறிப் பயிர்களின் உற்பத்தியிலும் மற்றும் சந்தைப்படுத்தலிலும் மரக்கறி விவசாயிகளினால் செயற்படுத்தப்படும் இந்த செயற்பாடுகளை நிர்ணயிக்கின்ற காரணிகளை இனங்காணுதல் மற்றும் 3. மரக்கறி வகைகளை சந்தைப்படுத்துவதிலுள்ள பிரச்சினைகளை தீர்ப்பதற்கான விவசாயிகளின் பரஸ்பர செயற்பாடுகள் தொடர்பான சாத்தியங்களை கண்டறிதல்.

**முடிவுகள்:**

யாழ்ப்பாண மாவட்டத்தில் பதினைந்து வகையான மரக்கறிப் பயிர் இனங்கள் பயிரிடப்படுகின்றன. நுவரெலியா மாவட்டத்தில் ஏழு வகையான மக்கறிப் பயிர் இனங்கள் பயிரிடப்படுகின்றன. யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள அநேகமான விவசாயிகள் பீட்றூட்டு, கரெட்டு, கோவா போன்ற வெளிநாட்டுப் மரக்கறிப் பயிர் இனங்களையும் மற்றும் நீளவரை, கத்தரிக்காய், பாகற்காய், ஒக்ரா, வட்டக்காய், புடோலங்காய், வெள்ளிரிக்காய் போன்ற உள்நாட்டுப் பயிர் இனங்களையும் பயிரிடுகின்றனர். நுவரெலியா மாவட்டத்திலுள்ள அநேகமான விவசாயிகள் கரெட்டு, லீக்ஸ், கோவா, தக்காளி மற்றும் கத்தரிக்காய் போன்ற மரக்கறிப் பயிர்களை பயிரிடுகின்றனர். நுவரெலியா மாவட்டத்திலுள்ள விவசாயிகளுடன் ஒப்பிடும் போது யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள விவசாயிகளின் நிலங்கள் அதிகளவில் கைமாற்றக்கூடியதாக இருப்பதால், ஒவ்வொரு விவசாயிக்கும் என ஒதுக்கக்கூடிய சராசரி நில அளவு நுவரெலியா மாவட்டத்திலுள்ள அத்தகைய சராசரி நில அளவு அதிகளவில் காணப்படுகின்றது.

நுவரெலியா மாவட்டத்தில் பண்ணை மட்டத்தில் அதிகமான மரக்கறி வகைகள் விற்பனை செய்யப்படுவதால், ஒரு போட்டி விலையில் ஒப்பிடும் போது, யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள அதிகமான விவசாயிகள் மரக்கறி வகைகள் விற்பனை செய்யப்படுகின்ற சந்தைகளில் தமது மரக்கறி வகைகளை விற்பனை செய்கின்றனர். ஆகையால், இந்த இரண்டு மாவட்டங்களிலும் மரக்கறிக்கான சந்தைகள் ஏகபோகவுரிமை அல்லது பலவுரிமை நிலைகளில் காணப்படுகின்றன.

நேர்காணப்பட்ட விவசாயிகள் 1, 2, 3 மற்றும் 4 என நான்கு வகையான திறமுறைத்திட்டங்களைக் கொண்டுள்ளனர். யாழ்ப்பாண மாவட்டத்தில் நேர்காணப்பட்ட பெரும்பான்மையான விவசாயிகள் (39.47%) 2-வது திறமுறைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றன. இது ஆண்டொன்றுக்கு இரண்டு வகையான மரக்கறிப் பயிர் இனங்கள் பயிரிடப்படுகின்றன என்பதை சுட்டிக்காட்டுகின்றது. இந்த 2-வது திறமுறைத்திட்டத்தில் சராசரி கிடைப்பனவு 364,740/= ரூபாவாகும். 1-வது, 3-வது மற்றும் 4-வது திறமுறைத்திட்டங்களில் அத்தகைய சராசரி கிடைப்பனவு முறையே 456,913/=, 419,150/= மற்றும் 564,230/= ரூபா என்ற அளவுகளில் காணப்படுகின்றன. யாழ்ப்பாண மாவட்டத்தில் நேர்காணப்பட்ட ஒவ்வொரு விவசாயியும் பிரதான திறமுறைத்திட்டத்தில் ஈடுபடுகின்றனர். இந்த விவசாயிகள் அத்தகைய திறமுறைத்திட்டங்களை ‘நாஷ்’ சமநிலையில் பின்பற்றுகின்றனர்.

நுவரெலியா மாவட்டத்தில், நேர்காணப்பட்ட சம அளவான விவசாயிகள் முறையே 2-வது, 3-வது திறமுறைத்திட்டங்களில் ஈடுபடுகின்றனர். 2-வது திறமுறைத்திட்டத்தில் ஈடுபடும் விவசாயிகளின் வீதம் 39.56% ஆகும். 3-வது திறமுறைத்திட்டத்தில் ஈடுபடும் அத்தகைய விவசாயிகளின் வீதம் 41.76% ஆகும். முதலாவது திறமுறைத்திட்டத்திற்கான சராசரி கிடைப்பனவு 131,319/= ரூபாவாகும். இரண்டாவது திறமுறைத்திட்டத்திற்கான சராசரி கிடைப்பனவு 146,478/= ரூபாவாகும். மூன்றாவது திறமுறைத்திட்டத்திற்கான அத்தகைய சராசரி கிடைப்பனவு 255,820/= ரூபாவாகும். நான்காவது திறமுறைத்திட்டத்திற்கான அத்தகைய சராசரி கிடைப்பனவு 15,100/= ரூபாவாகும். நுவரெலியா மாவட்டத்தில் நேர்காணப்பட்ட விவசாயிகளில் ஒவ்வொரு விவசாயியும் பிரதான

திறமுறைத்திட்டத்தில் ஈடுபடுகின்றனர். ஏனைய விவசாயிகளினால் நடைமுறைப்படுத்தப்பட்ட திறமுறைத்திட்டங்களை ஏற்கெனவேயிருக்கின்ற மரக்கறி உற்பத்தித் திறமுறைத்திட்டத்திற்கு எந்தவொரு விவசாயியும் மாறுவதாகவில்லை. ஆகையால், இந்த விவசாயிகள் அத்தகைய திறமுறைத்திட்டங்களை 'நாஷ்' சமநிலையில் பின்பற்றுகின்றனர்.

நேர்காணப்பட்ட விவசாயிகளில் பெரும்பான்மையான விவசாயிகள் மரக்கறிப் பயிர் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் தொடர்பில் கூட்டாக செயல்படுவதில்லை.

தமது விவசாயப் பயிர்ச் செய்கையை விஸ்தரிக்க தேவையான விவசாயிகள் நிலங்களை வாடகைக்கு பெற்றுக்கொண்டு, வருமானத்தை அதிகரிக்கும் நிமித்தம் மரக்கறிப் பயிர்களை அத்தகைய நிலங்களில் பயிரிடுகின்றனர். விவசாயிகள் அதிகளவான நிலப் பரப்புகளில் மரக்கறிப் பயிர்களை பயிரிடும் போது, விவசாயிகள் அதிகளவு முதலிடுவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. ஆகையால், கடன் வசதிகள் கிடைப்பதால், விவசாயிகள் அதிகளவான நிலப் பரப்புகளில் மரக்கரிப் பயிர்களை பயிரிட்டு, அதிக இலாபத்தைப் பெறுகின்றனர்.

நேர்காணப்பட்ட விவசாயிகளில் சில விவசாயிகள், அவர்கள் மரக்கறிப் பயிர்களை பயிரிடுவது தொடர்பான தீர்மானங்களை எடுக்கும் போது, ஏனைய விவசாயிகளின் மரக்கறிப் பயிர்ச் செய்கையை கருத்திற்கொள்வதாக குறிப்பிட்டனர். மரக்கறிப் பயிர்களை பயிரிடும் விவசாயிகள் மரக்கறிப் பயிர்ச் செய்கை மற்றும் சந்தைப்படுத்தல் ஆகியன தொடர்பான தமது பிரச்சினைகளை இந்தப் பிரச்சினைகள் தொடர்பான தகவல்களை பகிர்ந்துகொள்வதனூடாக தீர்த்துக்கொள்ளலாம். ஒழுங்கமைப்புக்கான தடைகள் வெற்றிகொள்ளப்படுகின்ற போது, விவசாயிகளின் கூட்டுச்செயல் சாத்தியமாகும்.

## சிபாரிசுகள்

இரண்டு மாவட்டங்களினதும் மரக்கறிப் பயிர் உற்பத்தி சமநிலை ஒரு ஆண்டை கருத்திற்கொள்கின்ற போது, ஒரு திடமான போட்டியாக காணப்படுகின்றது. இத்தகைய போட்டி பல காலங்களாக உருவாகியிருக்குமாயின், சமநிலை மாற்றமடைந்திருக்கும். ஆகையால், எல்லையற்ற ஒரு போட்டிப் பகுப்பாய்வை உருவாக்குவதற்கான ஒரு ஆய்வு மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

மரக்கறிப் பயிர் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் உற்பத்தி தொடர்பில் கூட்டாக திரண்டு செயல்படும் வகையில் விவசாயிகளை ஊக்குவிப்பது மரக்கறிப் பயிர் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் ஆகியன தொடர்பில் காணப்படுகின்ற பிரச்சினைகளை தீர்ப்பதற்கு மிகவும் முக்கியமாகும்.

## நிகழ்ந்து வரும் ஆய்வுகள்

### 1. இலங்கையின் வீட்டுத் தோட்டங்களில் பழப் பயிர்ச் செய்கையை நிர்ணயிக்கின்ற காரணிகள்

**ஆராய்ச்சிக் குழு :** திருமதி யூ.டீ.ஆர். உதாரி - ஒருங்கிணைப்பாளர்
கலாநிதி டப்ளியூ.ஏ.ஆர். விக்ரமசிங்க - துணை ஆராய்ச்சியாளர்
திருமதி திலினி பெரேரா - துணை ஆராய்ச்சியாளர்

**நிதியிடும் மூலம் :** திரட்டு நிதியம்

**ஆய்வின் நோக்கெல்லையும் குறிக்கோள்களும்**:

அரசாங்கத்தின் தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சித்திட்டம் (2016-2018) பழப் பயிர்ச் செய்கையின் அபிவிருத்தியையும் வீட்டுத் தோட்டங்களில் பயிர்ச் செய்கையை மேற்கொள்வதையும் தெளிவாக முக்கியமான ஒரு முந்துரிமை பிரவாக இனங்கண்டுள்ளது. வீட்டுத் தோட்டங்களில் பழப் பயிர்ச் செய்கையின் சமூகப் பொருளாதார அம்சங்கள் பற்றிய ஆராய்ச்சி முயற்சியும் மட்டுப்பட்டுள்ளது. அதிகமான குடும்பங்கள் தமது வீட்டுத் தோட்டங்களில் மரங்களை நடுவதில் ஆர்வங்கொண்டுள்ளன. மேலும், மரங்கள் வளர்ப்பதை பாதிக்கின்ற காரணிகளை இனங்காணுவது> வீட்டுத் தோட்டங்களில் பழப் பயிர்ச் செய்கையை ஊக்குவிப்பதில் இலக்குக்கொள்கின்ற கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் ஒரு அடிப்படை கட்டமாக விளங்குகின்றது.

பழப் பயிர்ச் செய்கை தொடர்பாக மக்களிடம் காணப்படும் பொதுவான உணர்வு தெளிவற்றது. மக்களின் அத்தகைய உணர்வு முழுமையான சிபாரிசுகளை முன்வைப்பதற்கு முன்னர், கொள்கைகளை ஆக்குவதற்கு மிகவும் இன்றியமையாததாகும். ஆகையால், இந்த ஆய்வு இலங்கையில் சகல காலநிலை வலயங்களிலும் (உலர் வலயம், ஈர வலயம், இடை வெப்ப வலயம்) வீட்டுத் தோட்டப் பழப் பயிர்ச் செய்கையை நிர்ணயிக்கின்ற சமூகப் பொருளாதார காரணிகளை இனங்காணுவதில் இலக்குக்கொள்கின்றது. ஆய்வின் முடிவுகள் நாடு முழுதிலும் வீட்டுத் தோட்டங்களில் பழப் பயிர்ச் செய்கையை அதிகரிப்பதற்கான ஸ்தலம் குறித்த செயற்பாடு சார்ந்த கொள்கைகளை ஆக்குவதற்கு, கொள்கை ஆக்குநர்களுக்கு உதவும்.

1. வீட்டுத் தோட்டங்களில் பழப் பயிர்ச் செய்கை மற்றும் பழ உற்பத்தி ஆகியவற்றுடன் தொடர்புடைய தடைகளை கண்டறிந்து வீட்டுத் தோட்டங்களில் பழ உற்பத்தியை விஸ்தரிப்பதற்கான திறமுறைத்திட்டங்களை வகுத்தமைத்தல்.

2. வீட்டுத் தோட்டங்களில் ஏற்கெனவே காணப்படுகின்ற பழப் பயிர்ச் செய்கையையும் பழ உற்பத்தியையும் பற்றி அறிந்துகொள்ளல்.

3. வீட்டுத் தோட்டங்களில், பழப் பயிர்ச் செய்கைக்கான சாத்தியங்களையும் தடைகளையும் கண்டறிதல்.

4. வீட்டுத் தோட்டங்களில், பழப் பயிர்ச் செய்கையை நிர்ணயிக்கின்ற காரணிகளை இனங்காணுதல். .

5. வீட்டுத் தோட்டங்களில், பழப் பயிர்ச் செய்கையையும் பழ உற்பத்தியையும் விஸ்தரிப்பதற்கான நடவடிக்கைகளை முன்மொழிதல்.

**தற்போதைய முன்னேற்றம்:**

17 மாவட்டங்களை பிரதிநிதிப்படுத்திய 1517 விவசாய குடும்பங்களிலிருந்து தரவுகள் சேகரிக்கும் (வினாகொத்து மதிப்பாய்வு, ஒருமுகக் குழுக் கலந்துரையாடல்கள் மற்றும் முக்கிய தகவல் வழங்குநர் நேர்காணல்கள்) பணி நிறைவு செய்யப்பட்டுள்ளது. தரவுகள் சேகரிப்பும் மற்றும் அறிக்கை தயாரித்தலும் நிகழ்ந்து வருகின்றன.



தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சித்திட்டத்தினூடாக பழ நடுகைக்கன்றுகளை பெற்ற பயன்னுகரிகள் பற்றிய கள ரீதியான மதிப்பீடு



நிகழ்ச்சித்திட்டம் 2016- 2018, களுத்துறை மாவட்டம் - மத்துகம கிராம உத்தியோகத்தர் பிரிவு

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர்பற்று பிரதேச செயலகப் பிரிவில் நடத்தப்பட்ட வினாகொத்து அடிப்படையிலான மதிப்பாய்வு

## 2. உணவுப் பாதுகாப்புக்கு சுதேசிய அறிவின் (சு.அ.) முக்கியத்துவம்: பயிர்ச் செய்கை தொடர்பாக

**ஆராய்ச்சிக் குழு :**
திரு ஆர்.எல்.என். ஜயதிஸ்ஸ - ஒருங்கிணைப்பாளர்
திருமதி ஏ.கே.ஏ. திஸாநாயக்க - துணை ஆராய்ச்சியாளர்
திருமதி திலினி பெரேரா - துணை ஆராய்ச்சியாளர்
திருமதி எஸ். லூர்து - துணை ஆராய்ச்சியாளர்
திருமதி எஸ். ஹிட்டிஹமு - துணை ஆராய்ச்சியாளர்

**நிதியிடும் மூலம்**: திரட்டடு நிதியம்

**ஆய்வின் நோக்கெல்லையும் குறிக்கோள்களும்:**

சு.அ. என்பது ஆகுசெலவு பயனுள்ள நிலையான வழிகளில் விவசாய உற்பத்திற்கு உதவக்கூடிய பெறுமதி வாய்ந்த ஒரு தேசிய வளமாகும். ஆகையால், விஞ்ஞான தொழில் நுட்பத்திலிருந்தும் மற்றும் சுதேசிய அறிவிலிருந்தும் (சு.அ.) கலந்திருக்கின்ற அணுகுமுறைகளும் முறையியல்களும் இலங்கையில் நிலையான விவசாய அபிவிருத்திற்கு தாரளமான வழிமுறைகளை காட்டுகின்றன. மேலும், தற்போதுள்ள அரசாங்கம் தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் (2016-2018) விவசாயத்தை நவீனமயப்படுத்துவதிலான சுதேசிய அறிவையும் மற்றும் செயன்முறைகளையும் பயன்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஆகையால், நவீனமயமான உலகில் மிக முக்கியமாக இருக்கக்கூடிய சுதேசிய அறிவின் விழிப்புணர்வாக, கிடைக்கக்கூடிய சுதேசிய அறிவு எந்தளவுக்கு விவசாயிகளுக்கு மத்தியில் செயன்முறை ரீதியாக பிரயோகிக்கப்படுகின்றது மற்றும் அத்தகைய செயன்முறைகளின் பொருளாதாரப் பெறுமானம் எந்தளவில் காணப்படுகின்றது என்பதை கண்டறிவது காலத்திற்கேற்ற தேவையாகும். அதனையடுத்து, இந்த ஆய்வு பயிர்ச் செய்கையிலுள்ள சுதேசிய அறிவு செயன்முறைகளின் முக்கியத்துவத்தை இனங்காணுவதில் ஒருமுகப்படுகின்றது. ஆய்வின் முடிவுகள் இலங்கையின் நிலையான விவசாய அபிவிருத்திற்கு தேவையான கொள்கைகளை ஆக்குவதில் கொள்கை ஆக்குநர்களுக்கு உதவும்.

- பயிர்ச் செய்கையிலுள்ள IK அறிவு செயன்முறைகளை இனங்காணுதல்.
- IK அறிவை பயன்படுத்துவதிலுள்ள தடைகளையும் மட்டுப்பாடுகளையும் இனங்காணுதல்.
- பயிர்ச் செய்கையிலுள்ள IK அறிவு செயன்முறைகளின் தாக்கங்களை மதிப்பீடு செய்தல்.
- பயிர்ச் செய்கையில் IK அறிவின் பிரயோகம் தொடர்பான சிபாரிசுகளை முன்வைத்தல்.

**தற்போதைய முன்னேற்றம்:** 13 மாவட்டங்களை பிரதிநிதிப்படுத்திய 60 விவசாயிகளிடமிருந்து தரவுகள் சேகரிக்கும் (வினாகொத்து மதிப்பாய்வு, ஒருமுகக் குழுக் கலந்துரையாடல்கள் மற்றும் முக்கிய தகவல் வழங்குநர் நேர்காணல்கள்) பணி நிறைவு செய்யப்பட்டுள்ளது. தரவுகள் சேகரிப்பும் மற்றும் அறிக்கை தயாரித்தலும் நிகழ்ந்து வருகின்றன.

## விவசாய வளங்கள் முகாமைத்துவப் பிரிவு

## நிறைவு செய்யப்பட்ட ஆய்வுகள்

### 1. இலங்கையின் தென் கிழக்கு உலர் வலய சோள உற்பத்தி முறைமையின் நிலைபெறுதகுதன்மை

திருமதி பி.ஆர். வீரக்கொடி - ஒருங்கிணைப்பாளர்

**நிதியிடும் மூலம்:** பூகோள மாற்ற ஆராய்ச்சிக்கான ஆசிய பசுபிக் பிராந்திய வலையமைப்பு மற்றும் திரட்டு நிதியம்

#### நோக்கெல்லையும் குறிக்கோள்களும்

சோளத்தை தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சித்திட்டத்தில் (2016-2018) சுயதேவைப் பூர்த்தியை அடைவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றதும் மற்றும் இலங்கையில் வித்தியாசமான பல பயிர்ச் செய்கை முறைமைகளுக்கு இடையில் அண்மை கால வரலாற்றில் கணிசமான முன்னேற்றங்களை கண்டுள்ளதுமான ஒரு ஆரம்ப களப் பயிராக இனங்காண முடியும். பொருளாதாரம், சமூகம் மற்றும் சுற்றாடல் முதலிய மூன்று பிரதான அம்சங்களின் அடிப்படையில் அதிகரித்து வருகின்ற காலநிலை மாற்றங்களின் மூலமாக சவாலுக்கு உட்படுத்தப்படுகின்ற சோளப் பயிர் உற்பத்தியின் (MFS) நிலைபெறுதகுதன்மையை இனங்காணும் பொருட்டு இந்த ஆய்வு திட்டமிடப்பட்டது. ஆகக்குறைந்த நிலைபெறுதகுதன்மையின் அளவு பூச்சியம் என்றளவிலும் மற்றும் ஆகக்கூடிய நிலைபெறுதகுதன்மையின் அளவு ஒன்று என்ற அளவிலும் சுற்றாடல் (ENSI), சமூக (SOSI), மற்றும் பொருளாதார (ECSI) போன்ற உப சுட்டிகளின் தொகுப்புகளை உள்ளடக்கிய ஒன்றிணைந்த ஒரு நிலைபெறுதகு சுட்டியின் (CSI) மூலமாக, நிலைபெறுதகுதன்மை மதிப்பிடப்பட்டது. அதற்கிணங்க, பயிரின் பாரம்பரிய பொருளாதார கண்ணோட்டம் மற்றும் முழு விவசாய முறைமையினதும் அபிவிருத்திற்கான சிபாரிசுகளை முன்வைத்தல் ஆகியன தவிர, பயிர் சமூகப் பொருளாதார தாக்கத்தின் அடிப்படையிலுள்ள நிலைபெறுதகு பயிர் உற்பத்தி முறைமைக்கான அளவை இனங்காணுவது இந்த ஆய்வின் நோக்கமாகும்.

#### ஆய்வின் முடிவுகள்

சோளப் பயிர்ச் செய்கை ஏனைய பயிர்ச் செய்கைகளுடன் ஒப்பிடும் போது பொருளாதார ரீதியில் மிகவும் இலாபகரமான பயிர்ச் செய்கையாகும். இளைஞர்களிடம் அதிகளவு அக்கறை இருந்தாலும், அதிகாரமற்ற பிரதேசங்களில் இந்த நிலைமையின் பயனாக, 77% வீதத்திற்கும் அதிகமான விவசாயிகள் இந்தப் பயிர்ச் செய்கையில் ஈடுபடுகின்றனர். பயிர்ச் செய்கைக்கு இரசாயனப் பதார்த்தங்களும் மற்றும் மூலிகை ரீதியான பூச்சிகொல்லிகளும் அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றன. பூச்சிநாசினிகளின் பாவனை குறைந்த ஒரு அளவில் காணப்படுகின்றது. க்லைபோசெட் தடைசெய்யப்பட்டதையடுத்து விவசாயிகளின், தொழிலாளர் மற்றும் இயந்திர ஆகுசெலவுகள் அதிகரித்திருந்தாலும், பயிர் செய்யப்பட்ட பிரதேச அளவு அவ்வளவு

அவதானிக்கக்கூடியதாகவில்லை. தனியார் துறை மற்றும் வளர்ந்து வருகின்ற கட்டமைப்புகள் என்பவற்றினூடாக, சோளப் பயிர்ச் செய்கை ஒப்பீட்டளவில் வருமானம் தரக்கூடியதாக காணப்படுகின்றது. மூலப்பொருட்களை வழங்குவதை விடவும் இந்த சோளப் பயிர்ச் செய்கைக்கு கடன் வசதிகளும் வழங்கப்படுகின்றன. 83% வீதமான விவசாயிகள் சோளப் பயிர்ச் செய்கை முறைமையில் திருப்தியடைந்தனர். MFS கள் SOCI சராசரி அளவு (0.518), ECSI சராசரி அளவுக்கு குறைந்த அளவு (0.316) முதலிய அளவுகளில் நிலைப்படுத்தப்பட்டன. எனினும், ENSI இன் கீழ் நிலைபெறுதகு அளவில் (-0.211) ஏதும் நிலைப்படுத்தப்படவில்லை. அதற்கிணங்க, MFS சராசரிக்கு குறைந்த அளவான CSI (0.2223) அளவினுள் தரப்படுத்தப்பட்டுள்ளது.

### சிபாரிசுகள்

விவசாய இரசாயனப் பதார்த்தங்களின் பிரயோகங்களில் பொருத்தமான வினைத்திறன் வாய்ந்த நுட்பங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம், MFS இன் சுற்றாடல் நிலைபெறுதகுதன்மையை மேம்படுத்துவதற்கு முந்துரிமை அளிக்கப்படுதல் வேண்டும். MFS இன் பொருளாதார ரீதியான நிலைபெறுதகுதன்மை சராசரி அளவுக்கு குறைவாக காணப்படுகின்றது. ஆகையால், இயந்திரமயப்படுத்துதல், அறுவடைகளை களஞ்சியப்படுத்துதல் மற்றும் விவசாயிகளின் பேரம்பேசும் சக்தியை மேம்படுத்தும் பொருட்டு விவசாயிகளுக்கு கடன் வசதிகளை வழங்குதல் போன்ற பயனுள்ள உள்ளீடு ரீதியான கையாளுகை சார்ந்த செயற்பாடுகளை அறிமுகப்படுத்துவதனூடக, MFS இன் இலாப எல்லையை அதிகரிப்பது முக்கியமானதாகும். சமூக ரீதியில் நிலைபெறுதகுதன்மையை உத்தரவாதப்படுத்தும் பொருட்டு தனியார் துறையினரின் பங்களிப்புடன், MFS இன் வளர்ந்து வருகின்ற கட்டமைப்பை ஒழுங்குறுத்துவது பொருத்தம் என ஆலோசனை வழங்கப்படுகின்றது. இறுதியாக, சோள உற்பத்தி முறைமையின் திறந்த தாராளமான சந்தைக் கட்டமைப்பின் ஒத்தீட்டு நன்மைகளை பெற்றுக் கொள்வதற்கு வாய்ப்புகளை அளிக்கின்ற சுயாதீனத்தன்மையை அதிகரிப்பதற்கான நெகிழ்தன்மை வாய்ந்த கடன் வசதிகளைப் பயன்படுத்தி, விவசாயத் தொழில்முயற்சி ஊக்குவிக்கப்படுதல் வேண்டும்.

## 2. மொனராகல் மாவட்ட தெலுள்ள சின்ன வெங்காய உற்பத்தி முறைமையின் நிலைபெறுதகுதன்மை

**ஆராய்ச்சிக் குழு:** திருமதி எம்.டீ. சுசிலா லுர்து - ஒருங்கிணைப்பாளர்
திருமதி பி.ஆர். வீரக்கொடி - துணை ஆராய்ச்சியாளர்
திரு எஸ். ஏபாசிங்க - துணை ஆராய்ச்சியாளர்

**நிதியிடும் மூலம்:** பூகோள மாற்ற ஆராய்ச்சிக்கான ஆசிய பசுபிக் பிராந்திய வலையமைப்பு (APN)

### ஆய்வின் நோக்கெல்லையும் குறிக்கோள்களும்

விவசாயிகளின் நலன்களுக்கு உத்தரவாதமளிப்பதற்கும், காலநிலை மாற்றம் மற்றும் உணவுப் பாதுகாப்பு ஆகியன தொடர்பான சவால்களுக்கு முகம்கொடுப்பதற்கும் தற்பொழுது முன்மாதிரியான நகார்வு விவசாயத் துறையில் தேவைப்படுகின்றது. ஆகையால், ஒவ்வொரு விவசாய முறைமையினதும் நிலைபெறுதகுதன்மையை நிர்ணயிக்கின்ற சமூகப் பொருளாதார, சுற்றாடல் அம்சங்களை இனங்காணுவதற்கான ஒரு தேவையும் இருக்கின்றது. தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சித்திட்டம் (2016 - 2018) இலங்கையில் ஏனைய களப் பயிர் (ஏ.க.ப.) உற்பத்திகளுக்கு விஷேட கவனத்தை செலுத்தியுள்ளது. ஆகையால், இந்த ஆய்வு பிரதானமாக மொனராகல் மாவட்டத்தில் 'சிறு யாழ்ப்பாணம்' என்றழைக்கப்படும் தெலுள்ள பிரதேச சின்ன வெங்காய உற்பத்தி முறைமையின் நிலைபெறுதகுதன்மையில் ஒருமுகப்படுகின்றது. சின்ன வெங்காய உற்பத்தி முறைமையின் செயல் திறனின் தற்போதைய அளவை நிருவகிக்கின்ற பல வகையான காரணிகளை நிர்ணயிப்பதற்கும் அதே நேரம் இந்த உற்பத்தி முறைமையை மேம்படுத்துவதற்கான கொள்கை சார்ந்த சிபாரிசுகளை வழங்குவதற்கும் சின்ன வெங்காயத்தின் சமூகப் பொருளாதார, சுற்றாடல் பரிமாணங்களை வெளிப்படுத்துவது இந்த ஆராய்ச்சியின் முக்கிய குறிக்கோளாக விளங்கியது.

### ஆய்வின் முடிவுகள்

யுத்தத்தின் காரணமாக, 1980 ஆம் ஆண்டு முதல் 1990 ஆம் ஆண்டு வரை, வட மாகாணத்தின் சின்ன வெங்காய உற்பத்தி படிப்படியாக வீழ்ச்சியடைந்திருந்தது. எனினும், அதனையடுத்து, சந்தைத் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய அளவில் தமது உற்பத்திகளுக்கு மொனராகல் மாவட்டத்தின் தெலுள்ள பிரதேச விவசாயிகளுக்கு, இது ஒரு பொன்னான வாய்ப்பாக மாறியது. அப்போது, இந்த விவசாயிகள் தமது பிரதேசத்திற்குரிய பிரத்தியேகமான சின்ன வெங்காய இனத்தின் கீழ் தமது உற்பத்தியை விஸ்தரித்தனர். எனினும், அந்த நேரத்தில் இந்த உணவு உற்பத்தி முறைமை இந்தப் பிரதேச மக்களுக்கு பிரதானமான ஒரு ஜீவனோபாயமாக விளங்கினாலும், இன்று படிப்படியாக வீழ்ச்சியடைந்துள்ளது. முறைமையின் சமூகப் பொருளாதார மற்றும் சுற்றாடல் நிலைபெறுதகு சுட்டிகளின் நிலை, 0.123 என்ற ஒரு ஒட்டுமொத்த நிலைபெறுதகு சுட்டிப் பெறுமானத்துடன் ஒப்பிடும் போது, முறையே 0.448, -0.337 மற்றும் 0.223 ஆகிய அளவுகளில் இருந்ததாக நிலைபெறுதகு பற்றிய மதிப்பீட்டின் ஆய்வு முடிவுகள் சுட்டிக்காட்டின. சின்ன வெங்காயம் தொழில் வாய்ப்பை உருவாக்குவதற்கு பங்களிக்கின்ற தொழிலாளருக்கான அதிகரித்த தேவையின் காரணமாக அதிக சமூக அங்கீகாரம் பெற்ற ஒரு உணவு முறமையாகும். எனினும், இந்த முறைமை பசளையினதும் மற்றும் பூச்சிநாசினிகளினதும் அதிகரித்த பாவனையினால், சுற்றாடல் ரீதியான ஒரு அழிவு முறைமையாக காணப்படுகின்றது. இதன் தரமும், உற்பத்தித்திறனும், விலைகளும் குறைந்தளவில் காணப்படுகின்றன. ஈட்டப்பட்ட வருமானம் குறைவானதாகும். இந்த உற்பத்தி இனங்கள் அதிக தரமான யாழ்ப்பாண உற்பத்திகளுக்கு நிகராக இருக்கவில்லை. ஆகையால், இந்த உணவு உற்பத்தி முறைமை பொருளாதார அடிப்படையில் குறைந்தளவு

சாத்தியமுடையதாக காணப்படுகின்றது. ஏனைய பயிர்களினுள் பல்லினத்துவம் அடையும் போக்கும் அவதானிக்கப்படுகின்றது.

**சிபாரிசுகள்**

இந்த ஆய்வு மண் வளம் மற்றும் வினைத்திறன் வாய்ந்த நீர் முகாமைத்துவ செயன்முறை ஆகியவற்றினூடாக உற்பத்தித்திறன் மேம்பாட்டை முன்மொழிகின்றது. மேம்பட்ட இனங்களின் உற்பத்தியைக்கொண்டு இந்த உணவு முறைமையில் கட்டுப்பாடுடைய பூச்சிநாசினிகளின் பாவனையை உருவாக்கக்கூடிய உயர் சந்தைக் கேள்வி முன்மொழியப்படுகின்றது. இந்த உணவு முறைமையின் நிலைபெறுதகுதன்மையை நிர்ணயிக்கும் சமூகப் பொருளாதார, சுற்றாடல் பரிமாணங்களில் ஒருமுகப்படுவதன் மூலமாக, இந்த ஆய்வுப் பிரதேசத்தில் சின்ன வெங்காய உற்பத்தியை அதிகரிப்பதற்கான நடவடிக்கையை எடுக்கவும் இந்த ஆய்வு மேலும் முன்மொழிகின்றது.

**03. நிலக்கடலை, பாசிப்பயறு மற்றும் கரும்பு உற்பத்திற்கு விஷேட குறிப்புடன் கூடிய இலங்கையின் தென் கிழக்கு உலர் வலயத்தில் முக்கியமான உணவுப் பயிர்கள் உற்பத்தி முறைமைகளின் நிலைபெறுதகுதன்மை**

**ஆராய்ச்சிக் குழு :** திரு ஐ.பி.பி.எம். விஜேசிங்க - ஒருங்கிணைப்பாளர்
திரு எச்.ஜே.சி. ஜயசூரிய - துணை ஆராய்ச்சியாளர்
திருமதி எஸ்.கே. குமார - துணை ஆராய்ச்சியாளர்
திருமதி ஆர்.டீ. விஜேசிங்க - துணை ஆராய்ச்சியாளர்

**நிதியிடும் மூலம்:** திரட்டு நிதியம்

**நோக்கெல்லையும் குறிக்கோள்களும்:**

இந்த ஆய்வு தென் கிழக்கு உலர் வலயத்தில் முக்கியமான பயிர் உற்பத்தி முறைமைகளின் நிலைபெறுதகு அளவை இனங்காணுவதற்கு முயற்சிக்கின்றது. இலங்கையின் தென் கிழக்கு உலர் வலயத்தில் முக்கிய உணவுப் பயிர்கள் உற்பத்தி முறைமைகளின் சமூகப் பொருளாதார, சுற்றாடல் பரிமாணங்களை வெளிப்படுத்துவது இந்த ஆய்வின் ஒட்டுமொத்தக் குறிக்கோளாக விளங்கியது. (i) நிதி சார்ந்த இலாபத்தை மதிப்பிடுதல், (ii) சுற்றாடல் ரீதியான விளைவுகளை புரிந்துகொள்ளல், (iii) சமூகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும் தன்மையை இனங்காணுதல், (iv) தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு உணவுப் பயிர் உற்பத்தி முறைமையினதும் ஒட்டுமொத்த சமூகப் பொருளாதார, சுற்றாடல் நிலைபெறுதகுதன்மையை மதிப்பிடுதல் என்பன இந்த ஆய்வின் விஷேட குறிக்கோள்களாக விளங்கின.

**முக்கியமான முடிவுகள்**

1. பயிர் நிலைபெறுதகுதன்மை தொடர்பான சுட்டிற்கு இணங்க, கரும்பு உற்பத்தி முறைமை (0.15), நிலக்கடலை உற்பத்தி முறைம (0.14) மற்றும் பாசிப்பயறு உற்பத்தி முறைமை (0.09) 'ஆகக்குறைந்த நிலைபெறுதகுதன்மை' அளவு என (இந்த ஆய்வில் பிரயோகிக்கப்பட்ட கொள்கை ரீதியான தகவுதிறன்களுக்கு இணங்க) கணிப்பிட முடியும்.

2. இந்த மூன்று உற்பத்தி முறைமைகளிலும், கரும்பு உற்பத்தி முறைமையிலேயே மிகவும் அதிக சமூகப் பொருளாதார ஏற்கையும் மற்றும் பொருளாதார சாத்தியமும் பதிவாகியிருந்த வேளையில் நிலக்கடலை உற்பத்தி மிகவும் சுற்றாடல்நேயமான உற்பத்தி முறைமையாகவும் பதிவாகியிருந்தது.

3. ஏனைய இரண்டு பிரிவுகளுடனும் ஒப்பிடும் போது, சமூக ரீதியான நிலைபெறுதகுதன்மை இந்த மூன்று உற்பத்தி முறைமைகளிலும் 'போட்டித்தன்மையினால்' *(சரிசம விலைக்கும் உண்மையான விலைக்கும் இடையிலுள்ள வித்தியாசம்)* கிடைக்கும் சமூக நிலைபெறுதகுதன்மை சுட்டியை தயாரிப்பதற்கான பாரிய பங்களிப்பு, பயிர் நிலைபெறுதகு சுட்டியாக உருவாகுவதில் பாரிய பங்களிப்பு காரணியாக விளங்கியது சமூக நிலைபெறுதன்மையாகும்.

4. 'இரசாயனப் பசளைப் பிரயோகத்தினால்' *(இரசாயப் பசளைப் பிரயோகத்தின் கடும்தன்மை)* சுற்றாடல் நிலைபெறுதகு சுட்டியை தயாரிப்பதற்கான பாரிய பங்களிப்பு நல்கப்பட்டது.

5. 'ஒத்தீட்டு பொருளாதார முக்கியத்துவத்தினால்' *(பயிர் உற்பத்தியிலிருந்து மொத்தக் குடும்ப வருமானத்திற்கான பங்களிப்பு)* பொருளாதார நிலைபெறுதகு சுட்டியை தயாரிப்பதற்கான பங்களிப்பு நல்கப்பட்டது.

6. அம்பாறை மற்றும் மொனராகல் மாவட்டங்களின் நிலக்கடலை உற்பத்தி முறைமையில் அல்லது அம்பாந்தோட்டை மற்றும் மொனராகல் மாவட்டங்களின் பாசிப்பயறு உற்பத்தி முறைமையில், ஒட்டுமொத்த நிலைபெறுதகுதன்மையில் குறிப்பிடத்தக்களவு வித்தியாசத்தை அவதானிக்க முடியவில்லை.

## சிபாரிசுகள்

1. அந்தந்த விவசாயிகளின் பொருளாதார சிறப்பை உறுதிசெய்யும் பொருட்டு, SEDS இல் காணப்படுகின்ற சகல மூன்று வகையான உணவு உற்பத்தி முறைமைகளின் ஒட்டுமொத்த நிலைபெறுதகுதன்மை கணிசமானளவில் மேம்படுத்தப்படுதல் வேண்டும்.

2. சகல FCPS களினதும் பொருளாதார நிலைபெறுதகுதன்மை, உற்பத்தித்திறன் என்பவற்றை மேம்படுத்தும் பொருட்டு, பின்வருவனவற்றினூடாக இலாபத்தன்மை அதிகரிக்கப்படுதல் வேண்டும்.

    a. பாசிப்பயறு மற்றும் நிலக்கடலை ஆகியவற்றை பொறுத்த வரையில், SEDZ தொடர்பான அதிகளவு விளைச்சல் சாத்தியமுடைய கிடைக்கக்கூடிய தரமான விதைகளை அதிகரித்தல்.

    b. SEDZ இல் கரும்பு உற்பத்தித்திறனை அதிகரிக்கும் பொருட்டு அதிகளவு விளைச்சளை தருகின்ற புதிய கரும்பு இனங்களையும் மற்றும் அதிகளவான ரட்டூன்களையும் அறிமுகப்படுத்துதல்.

3. பின்வரும் வழிகளில் குடும்பத்தின் தொழிலுக்கான தேறிய வருமானத்தை அதிகரிப்பதன் மூலமாக சகல FCPS சமூக நிலைபெறுதகுதன்மை அதிகரிக்கப்படக்கூடும்.

    a. இயந்திர ரீதியிலான அறுவடையை இலகுபடுத்துவதற்கும் அதன் நிமித்தம் பொருத்தமான இயந்திராதிகளை உற்பத்தி செய்வதற்கும் ஒரு கால முதிர்ச்சி சிறப்பம்சமுடைய பாசிப்பயறு இனத்தை அறிமுகப்படுத்துதல்.

    b. அறுவடை செய்வதற்கும் பதனிடுவதற்கும் பொருத்தமான இயந்திரங்களை (விதைகளை பிரித்தெடுத்தல் மற்றும் உமி வேறாக்கல்) அறிமுகப்படுத்துதல்.

    c. ஏற்கெனவேயிருக்கின்ற கள நிலைமைகளில் பயன்படுத்தக்கூடிய கரும்பு அறுவடைக்கு பொருத்தமான இயந்திரங்களை அறிமுகப்படுத்துதல்.

    d. பண்ணை மட்டத்தில் அல்லது கொத்தணி மட்டத்தில் மின்சார வேலியை அமைப்பதற்கு (காட்டு யானை) தேவையான உதவியை செய்து அதன் மூலமாக SEDZ இல் காணப்படுகின்ற சகல FCPS களிலும் பயிர்களை பாதுகாப்பதற்கான தொழிலாளர்களை பயன்படுத்துவதை குறைக்கும் வகையில் விவசாயிகளுக்கு உதவுதல்

4. பின்வருவனவற்றினூடாக நிலக்கடலை மற்றும் பாசிப்பயறு உற்பத்தி முறைமைகளின் இலாபத்தை அதிகரித்தல்.

    a. நிலக்கடலை உற்பத்தியிலிருந்து அதிக காலத்தை பெறும் பொருட்டு (உ+ம்: ஜம்போ பீனெட் உற்பத்திகளுக்கு பொருத்தமான இனங்களை பயன்படுத்தக்கூடிய) விஷேட தேவை சிறப்பம்சங்களையுடைய இனங்களை ஊக்குவித்தல்.

    b. பாசிப்பயறு மற்றும் நிலக்கடலை ஆகியவற்றில் பெறுமதி சேர்க்கும் வகையில் விவசாயிகளை ஊக்குவித்தல் மற்றும் தொழில்நுட்ப, உட்கட்டமைப்பு வசதிகள் உதவி என்பவற்றை வழங்குதல்.

## 04. பூகோள மாற்றமும் மற்றும் நிலைபெறுதகுதன்மையும் தொடர்பாக இலங்கையில் ஆராய்ச்சிக் கொள்கை தொழில்நுட்ப ஆளணியின் ஆற்றல் அபிவிருத்தி

**ஆராய்ச்சிக் குழு:**

திருமதி ரேனுகா வீரக்கொடி - கருத்திட்டத் தலைவர்
திருமதி சர்மினி குமார - துணை ஆராய்ச்சியாளர்
திரு எஸ். ஏபாசிங்க - துணை ஆராய்ச்சியாளர்
திரு பிரசன்ன விஜேசிங்க - துணை ஆராய்ச்சியாளர்
திருமதி ரஷிகா விஜேசிங்க - துணை ஆராய்ச்சியாளர்
திருமதி சுசிலா லூர்து - துணை ஆராய்ச்சியாளர்
திரு சிந்தக்க ஜயசூரிய - துணை ஆராய்ச்சியாளர்

**நிதியிடும் மூலம்:** பூகோள மாற்ற ஆராய்ச்சிக்கான ஆசிய பசுபிக் பிராந்திய வலையமைப்பு (APN)

**நோக்கெல்லையும் குறிக்கோள்களும்:**

இந்தக் கருத்திட்டம் ஆராய்ச்சியாளர்கள், கொள்கை ஆக்குநர்கள், விஸ்தரிப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாயிகள் ஆகியோருக்கு மத்தியில் விவசாய நிலைபெறுதகுதன்மையில் பொருத்தமான அறிவை மேம்படுத்துவதில் இலக்குக்கொள்ளப்பட்டிருந்தது. பூகோள மாற்ற ஆராய்ச்சிக்கான ஆசிய பசுபிக் பிராந்திய வலையமைப்பிலிருந்து கிடைக்கும் நிதி உதவியைக் கொண்டு, மேற்குறித்த அக்கறையுடைய தரப்புகளின் பங்குபற்றலில் பல ஆற்றல் கட்டியெழுப்பல் வேலையரங்குகளும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களும் நடத்தப்பட்டன. HARTI நிறுவகத்தின் ஆராய்ச்சியாளர்களுக்காக நடத்தப்பட்ட மூன்று நாள் பயிற்சி வேலையரங்கில் அந்த ஆராய்ச்சியாளர்களின் ஆற்றல்கள் விவசாய நிலைபெறுதகுதன்மையை மதிப்பிடுவதற்கான முறையியல்களில் கட்டியெழுப்பப்பட்டன. விவசாய கொள்கை ஆக்குநர்களுக்காக பயிற்றப்பட்ட HARTI நிறுவக ஆராய்ச்சியாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி பிரிவின் முடிவுகளை பரம்பல்செய்யும் பொருட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஒரு நாள் விஞ்ஞான கொள்கை சம்பாஷணை இந்தத் தொடர்களின் இரண்டாம் இடத்தை வகித்தது. இந்த கூட்டுறவு நிகழ்ச்சியை தொடர்ந்து, 30 விஸ்தரிப்பு உத்தியோகத்தர்கள் விவசாயிகளுக்கான பயிற்றுவிப்பாளர்களாக மாறும் வகையில் பயிற்றுவிக்கப்பட்டனர். அந்தப் பயிற்றுவிப்பாளர்கள் ஆற்றல் கட்டியெழுப்பல் தொடர்பான பயிற்சியின் கீழ் உத்தேசிக்கப்பட்ட இறுதிப் பயிற்சி நிகழ்வாக ஆய்வு ஸ்தலத்தில் 900 விவசாயிகளுக்கான ஆற்றல் கட்டியெழுப்பல் தொடர்பான பயிற்சி அமர்வுகளை வெற்றிகரமான நிறைவு செய்தனர்.

## சுற்றாடல் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவப் பிரிவு

### நிறைவு செய்யப்பட்ட ஆய்வுகள்

### 1. தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சித்திட்டம் 2016 - 2018 அடிப்படை ஆய்வு

**ஆராய்ச்சிக் குழு :** திரு எம்.ஏ.சி.எஸ். பண்டார - ஒருங்கிணைப்பாளர்
திருமதி ரீ.பி. முணவீரகே - துணை ஆராய்ச்சியாளர்
திருமதி ஜே.ஏ.யூ.பி. ஜயசிங்க - துணை ஆராய்ச்சியாளர்

**நிதியிடும் மூலம்:** திரட்டு நிதியம்

**நோக்கெல்லையும் குறிக்கோள்களும்:**

2016 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்ட தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கான (NFPP) (2016 -2018) ஒரு அடிப்படை ஆய்வாக இந்த ஆய்வு, கம்தொழில் அமைச்சுக்கான செயலாளர் விடுத்த வேண்டுகோளின் பேரில் திட்டமிடப்பட்டுள்ளது. NFPP செயற்படுத்தப்படுகின்ற பிரதேசங்களின் நிலை பற்றிய குறுக்குவெட்டுமுக விரிவான கனிய மற்றும் தர ரீதியான தகவல்களை சேரிப்பது இந்த ஆய்வின் நோக்கமாகும். இந்த அடிப்படை ஆய்வு நிகழ்ச்சித்திட்டத்தின் பயனாக நிகழும் மாற்றங்களின் தகவுதிறன்களை இயலச்செய்து, குறித்த முன்னேற்றத்தை மேலும் திட்டமிட்டு கண்காணிக்கும் வகையில் உரிய அதிகாரிகளுக்கு அறியப்படுத்த உதவும்.

இந்த அடிப்படை ஆய்வு 17 பயிரினங்களை உள்ளடக்கி 20 மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வில் மொத்தமாக 2554 மாதிரிகள் உள்ளடக்கப்பட்டன. உள்ளீடுகளினதும் வெளியீடுகளினதும் தரம், பொருத்தமான விலைகள், இலக்குக்கொள்ளப்பட்ட சமுதாயங்களில் நிலவுகின்ற அறிவும் மற்றும் மனோபாவங்களும், விவசாயிகள் சமூகப் பௌதீக மூலதனம் போன்ற ஆறு பிரதான வகுதிகளின் கீழ் இந்த ஆய்வின் மூலமாக தகவல்கள் சேகரிக்கப்பட்டன. உணவு உற்பத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் பிரேரணையிலிருந்து பெறப்பட்ட விளைவு சுட்டிகளைப் பயன்படுத்தி, அத்தகைய சுட்டிகள் தொடர்பில் கிராமங்களின் அடிப்படை நிலையை ஆவணப்படுத்துவதிலும் மற்றும் நிகழ்ச்சித்திட்டம் கிராமங்களில் ஒருமுகப்படுவதிலும் இலக்குக்கொள்கின்ற இந்த அடிப்படை ஆய்வு திட்டமிடப்பட்டாலும், இன்னும் இது மேற்கொள்ளப்படவில்லை. NFP நிகழ்ச்சித்திட்டத்தின் வெற்றிக்கான பாரிய நீண்டகால சுட்டிகளின் முதலாவது அளவீட்டு மதிப்பீட்டை மேற்கொள்வது இந்த NFPP அடிப்படை ஆய்வின் பொதுவான குறிக்கோளாகும்.

### முக்கியமான முடிவுகள்

1. தேசிய விவசாயத் திடட்டத்தின் நிரலில் ஆய்வு செய்யப்பட்ட அதிகமான பிரிவுகளில், செயற்படுத்துகைக் கட்டத்தில் NFPP செயற்பாடுகள் ஏற்கெனவே காணப்படுவதாக, ஆய்வின் போது அவதானிக்கப்பட்டது.

2. கள மட்டத்தில், NFPP செயற்படுத்துகையில் பின்வரும் பின்னடைவுகள் ஆய்வில் இனங்காணப்பட்டன.
    a. சில மாவட்டங்களில், NFPP இல் நேரடியாக சம்பந்தப்படுகின்ற வித்தியாசமான அக்கறையுடைய தரப்புகளுக்கு இடையிலான எளிய ஒருங்கிணைப்பு.
    b. NFPP செயற்பாடுகளில், கள மட்டத்தில், ஆரம்ப மட்ட உத்தியோகத்தர்களின் விழிப்புணர்வை அதிகரிப்பதற்கான ஒரு தேவை காணப்படுகின்றமை.
    c. சில மாவட்டங்களில், நிதி விடுவிப்பு தொடர்பான தாமதங்கள் அவதானிக்கப்பட்டமை.
    d. *பயிர்ச்செய்கை போக* கூட்டங்களின் திகதிகளுக்கும் மற்றும் கருத்திட்ட செயற்படுத்துகைத் திகதிகளுக்கும் இடையிலான பொருத்தமின்மைகள், சில பிரதேசங்களுக்கு அறிமுகப்படுத்த தவறுதல், பயிர்ச்செய்கையின் அளவு அதிகரித்தல் போன்ற சில செயற்பாடுகளுடன் தொடர்புடைய திட்டமிடல் சார்ந்த பிரச்சினைகள் அவதானிக்கப்பட்டமை.

3. இலங்கையில் விவசாயத் துறையின் சிறந்த செயலாற்றுகைக்கு தடையாக அமைகின்ற பல பிரச்சினை விடயங்கள் இனங்காணப்பட்டன. சகல மாவட்டங்களுக்கும் பொதுவான பாரிய சில பிரச்சினைகள் கீழே பட்டியல்படுத்தப்பட்டுள்ளன.

    a. தரத்தில் சிறந்த நடுகை மூலப்பொருட்கள் பற்றாக்குறை
    b. விவசாய உள்ளீடுகளின் அதிக விலை
    c. அதிக தொழிலாளர் செலவு மற்றும் தொழிலாளர் பற்றாக்குறை
    d. பாதிப்பை ஏற்படுத்தும் பூச்சிகள் மற்றும் பீடைகள் பரவுதல்
    e. நீர் பற்றாக்குறை

**சிபாரிசுகள்**

1. பல காலமாக இருந்து வருகின்ற நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றத்தையும் மற்றும் சாதனைகளையும் மதிப்பிடுவதற்கான சுட்டிகளை உருவாக்கும் பொருட்டு தரவுகளை சேகரிப்பது NFPP தொடர்பில் அடிப்படை ஆய்வை நடத்துவதன் நோக்கமாகும். ஆகையால், குறித்த அடிப்படை ஆய்வின் முடிவுகளை பயன்படுத்தி, NFPP தொடர்பான முன்னேற்றத்தை மதிப்பிடுவதன் தேவை வலியுறுத்தப்படுகின்றது.

2. எதிர்காலத்தில் சிறந்த பெறுபேறுகளை அடைவதற்காக குறித்த ஆய்வின் போது இனங்காணப்பட்ட பிரச்சினைகளை தீர்ப்பதற்கு எதிர்கால NFPP செயற்பாடுகள் அடங்கலாக கொள்கைகளையும் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களையும் செயற்படுத்துவது மிகவும் முக்கியமானதாகும்.

## 2. மானிட செயற்பாடுகளினால் குளப் படுக்கைகளில் அதிகளவு வண்டல்மண் படிவதும் மற்றும் விவசாயத்தின் அதன் தாக்கமும் பற்றிய ஆய்வு

**ஆராய்ச்சிக் குழு:** திரு டப்ளியூ.எச்.ஏ. சாந்த - ஒருங்கிணைப்பாளர்
திரு கே.ஏ.பீ.எஸ். ரூபசிங்க - துணை ஆராய்ச்சியாளர்
திரு டீ.டீ. பிரபாத் விதாரன - துணை ஆராய்ச்சியாளர்
திரு ஜீ.ஜீ. த எல்.டப்ளியூ. சமரசிங்க - துணை ஆராய்ச்சியாளர்
திரு பீ.ஏ.ஜீ. அளுத்கம - துணை ஆராய்ச்சியாளர்

**நிதியிடும் மூலம்:** திரட்டு நிதியம்

**நோக்கெல்லையும் குறிக்கோள்களும்**

வண்டல்மண் படிவு காரணமாக உலர் வலயத்திலுள்ள குளங்களின் நீரை சேமித்துவைக்கும் கொள்ளளவு அந்தந்த அதிகாரப் பிரதேசங்களிலுள்ள தாழ்நிலப் பயிர்ச்செய்கை முறைமையில், கணிசமானளவு உற்பத்தி இழப்புக்கு வழிவகுத்துள்ளது. நீரேந்துபரப்புகளில் காணப்படும் பொருத்தமற்ற விவசாய செயன்முறைகளுக்கு புறம்பாக, கைத்தொழில், நிர்மாணம், சற்றுலா மற்றும் வதிவிடப் பகுதிகள் போன்றவற்றுடன் தொடர்புடைய ஏனைய செயற்பாடுகள், ஒரு அச்சுறுத்தும் அளவில் மண்ணரிப்புக்கு அதிகளவில் பங்களித்துள்ளன. நாட்டின் மேல் நீரேந்துபரப்புகளில் அமைந்துள்ள பாரிய நீர்த்தேக்கங்களின் வண்டல்மண் படிவும் மற்றும் பொருளாதாரத்தின் வித்தியாசமான பிரிவுகளில் அதன் தாக்கமும் பற்றிய அதிக பல ஆராய்ச்சி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டாலும், நாட்டின் வரண்ட பகுதிகளில் காணப்படும் சிறு குளங்களுக்கும் மற்றும் ஏனைய நீர்த்தேக்கங்களுக்கும் உரிய கவனம் செலுத்தப்படவில்லை. ஆகையால், இலங்கையில் உலர் வலயப் பிரதேசங்களிலுள்ள சிறு குளங்களின் வண்டல்மண் படிவு அளவுகளையும் மற்றும் பாதிக்கப்படும் அத்தகைய பிரதேசங்களிலுள்ள விவசாயிகளின் வாழ்வாதாரத்தில் அதன் தாக்கத்தையும் இனங்காணுவது இந்த ஆய்வின் அடிப்படைக் குறிக்கோளாகும்.

ஆய்வின் விஷேட குறிக்கோள்கள் பின்வருமாறு:

1. குறிப்பாக சிறு குளங்கள் காணப்படுகின்ற நீரேந்துபரப்புகளிலுள்ள குள ஒதுக்கப் பகுதிகளில் நிகழும் அத்துமீறல்களின் அளவையும் மற்றும் அத்தகைய அத்துமீறும் வழிகளையும் இனங்கண்டு, அத்தகைய அத்துமீறல்களின் அளவை பதிதல்.

2. பல காலமாக குளங்களின் நீரை சேமித்துவைக்கும் கொள்ளளவு குறைதல், வண்டல்மண் படிவு வீதம் மற்றும் அதற்கான காரணங்கள் என்பவற்றை இனங்கண்டு மதிப்பிடுதல்.

3. குறைந்த நீர் சேமித்தல் கொள்ளளவினால் பயிர் உற்பத்தி முறைமையில் ஏற்படும் தாக்கங்கள் பற்றி ஆராய்தல்.

4. பயிர் உற்பத்திற்கு பொருத்தமான குள முறைமைகள் தொடர்பான கொள்கை சார்ந்த சிபாரிசுகளை முன்வைத்தல்.

## சாதனங்களும் முறையியல்களும்

### ஆய்வுப் பிரதேசம்

கமநல அபிவிருத்தித் திணைக்களத்துடன் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டு அதன் ஆலோசனைகள் பெறப்பட்டதன் பின்னர் ஆய்வு ஸ்தலங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. விவசாயிகளின் வாழ்வாதாரத்தை பாதித்து வருகின்ற வண்டல்மண் படிவுகளையுடைய சிறு குளங்கள் அடங்குகின்ற மீ-ஓயா மற்றும் மல்வத்து ஓயா ஆகிய ஆற்றுப்படுக்கைப் பிரதேசங்களிலுள்ள இரண்டு நீர்த்தேக்கங்கள் முறையே குருனாகல் மற்றும் அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களிலிருந்து ஆய்வுப் பிரதேசமாக தேர்ந்தெடுக்கப்பட்டன.

ஆரம்பத் தரவுகள் சேகரிப்பு பணி பிரதானமாக குருனாகல் எஹெட்டுவெவ கமநல சேவை நிலைய (க.சே.நி.) பிரிவிலுள்ள மகாமெருவ நீர்த்தேக்கத்தினதும் மற்றும் அனுராதபுர மெதவாச்சி கமநல சேவை நிலைய (க.சே.நி.) பிரிவிலுள்ள வல்பொல கிராமிய குள நீர்த்தேக்கத்தினதும் நீர்ப்பாசன வசதிகளின் கீழ் பயிர்ச்செய்கையை மேற்கொள்கின்ற விவசாய குடும்பங்கள் தொடர்பான ஒரு கணக்கெடுப்பை (ஒரு குடும்ப மதிப்பாய்வை மேற்கொள்வதற்கு பதிலாக) நிருவகிப்பதன் மூலமாக மேற்கொள்ளப்பட்டது. 11 கிராம உத்தியோகத்தர் (கி.உ.) பிரிவுகளில் ஏழு கமக்காரர் அமைப்புகளை பிரதிநிதிப்படுத்துகின்ற மொத்தம் 312 விவசாயக் குடும்பங்கள் சமூகப் பொருளாதார தரவுகள் மற்றும் தகவல்கள் சேகரிப்பிலான கணக்கெடுப்பு ஆய்வில் நேர்காணப்பட்டன. குடும்ப கணக்கெடுப்பு ஆய்வுக்கு புறம்பாக, ஆரம்பத் தரவுகளையும் மற்றும் தகவல்களையும் சேகரிக்கும் நிமித்தம், ஒருமுகக் குழுக் கலந்துரையாடல்களும் மற்றும் முக்கியமான தகவல் வழங்கும் நேர்காணல்களும் நடத்தப்பட்டன. கள மட்டத்திலான தரவுகளை சேகரிப்பது மிகவும் சிக்கல்வாய்ந்ததாக மற்றும் நம்பத்தகாததாக இருந்தமையால், புவியியல் குறிப்பு தகவல்களை பயன்படுத்தி, மேற்கொள்ளப்படும் நிமித்தம் குள நீரேந்துபரப்பிலும் மற்றும் அதிகாரப் பிரதேசத்திலும் நிலப் பாவனை மாதிரியிலுள்ள மாற்றங்கள் மற்றும் குளங்கள் அத்துமீறப்படும் அளவும் பற்றிய ஆய்வு திட்டமிடப்பட்டது. நிதி நெருக்கடிகளின் விளைவாக, பொறியியலும் மற்றும் மண் பற்றிய மதிப்பாய்வும் குறித்த ஆய்விலிருந்து நீக்கப்பட வேண்டியிருந்தன.

### முக்கியமான முடிவுகள்

1. அதிகாரப் பிரதேசத்தில் அண்மித்த வன நிலங்களும் மற்றும் ஏனைய பகுதிகளும் வயல் நிலங்களாக மாற்றியமைக்கப்படுவதனூடாக குறிப்பிடத்தக்களவுக்கு மானிட செயற்பாடுகள் அதிகரித்துள்ள அதே வேளையில், மனிதனின் முறையற்ற செயற்பாடுகளின் காரமாண கிராமிய நீரேந்துபரப்புகள் படிப்படையாக குறைவடைந்துள்ளன.

2. குறிப்பாக புனர்நிர்மாணம் மற்றும் கண்காணிப்பு ஆகிய அம்சங்களில் கிராமிய குளங்கள் நீண்டகாலமாக பாராதீனப்படுத்தப்பட்டு வருகின்றமையும் மற்றும் அத்தகைய கிராமிய குளங்களுக்கான கவனக் குறைவும் அத்தகைய கிராமிய குளங்களின் அழிந்து செல்லும் நீர்ப்பாசன வினைத்திறனை மேலும் துரிதமாக உக்கிரமடையச்செய்துள்ளன.

3. நிலத்தின் சராசரி தலா பரிமாண அளவு மிகவும் குறைவடைந்து வருகின்றது. ஆகையால், உணவுப் பாதுகாப்பையும் மற்றும் குடும்ப

வருமானத்தையும் பெற்றுக்கொடுப்பதற்கான அத்தகைய நிலங்களின் பொருளாதார ஆற்றலும் மிகவும் குறைவடைந்து வருகின்றது.

4. நீரை தேற்கிவைக்கக்கூடிய ஆற்றல் குறைவாகவிருப்பதால், அதிகாரப் பிரதேசத்திலுள்ள நீர்ப்பாசனம் செய்யக்கூடிய பகுதியும் நீர் மற்றும் நிலப் பகிர்வு செயன்முறைகளை *(பெத்ம, கட்டி மாறு முதலியன)* பின்பற்றுவதற்கு விவசாயிகளை நிர்ப்பந்திக்கும் அளவுக்கு குறைவடைந்துள்ளது.

5. நிலகீழ் நீர் மட்டம் குறைந்து செய்வதற்கு வழிவகுக்கின்ற குள வண்டல் மண்படிவும், விவசாயக் கிணறுகளிலிருந்து கிடைக்கும் நீர்ப்பாசன வசதிகளைக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்ற பயிர் உற்பத்தி முறைமைகளையும் பாதித்துள்ளது.

**சிபாரிசுகள்**

1. காலநிலை மாற்றங்களின் தாக்கங்களை எதிர்கொள்வதற்கான ஒரு வழிமுறையாக, சிறு மற்றும் நடுத்தர அளவான கிராமிய குளங்கள் உள்ளடங்கிய பரந்த குள நீர்த்தேக்க வசதிகளை பயன்படுத்தி மழை நீரை சேமிக்கும் செயன்முறை ஊக்குவிக்கப்படுதல் வேண்டும்.

2. புனர்நிர்மாணத்தின் நிமித்தம் கிராமிய குளங்களுக்கு முந்துரிமை அளிப்பதில் ஒரு தகவுதிறன் இல்லாமையானது நாட்டின் வரண்ட பாகங்களில், நீர்ப்பாசனத்திலும் மற்றும் நீர் முகாமைத்துவத்திலும் நிலைமபெறுதகுமன்மையை அடைவதற்கு கடும் பாதிப்பாக இருந்துள்ளது. ஆகையால், கிராமிய குளங்களை புனர்நிர்மாணத்தின் நிமித்தம் தேர்ந்தெடுப்பதற்கு பொருத்தமான ஒரு தகவுதிறனை உருவாக்குவதற்கு சிபாரிசு செய்யப்படுகின்றது.

3. குள புனர்நிர்மாண செயற்பாடுகளை மேற்கொள்ளும் பொருட்டு, ஆற்றல் கட்டியெழுப்பல், பௌதீக மற்றும் நிதி சார்ந்த வசதிகளைக் கொண்டும், அதனையடுத்து கண்காணிப்பு மற்றும் இயக்கச்செயற்பாட்டுக் கட்டங்களிலும், கமக்காரர் அமைப்புகள் வலுப்படுத்தப்படுதல் வேண்டும்.

4. பாதகமான காலநிலை மாற்றத்தின் தாக்கங்களை எதிர்கொள்ளக்கூடிய வகையில் விவசாயிகளை வலுவூட்டும் பொருட்டு, பயிர் பல்லினத்துவமும் மற்றும் காலநிலை நேர்த்தி விவசாயமும் பற்றி அந்த விவசாயிகள் விழிப்பூட்டப்படுதல் வேண்டும்.

## 3. இலங்கையின் விவசாயத் துறையில் உயிரியல் பசளைகளினதும் மற்றும் உயிரியல் பூச்சிகொல்லிகளினதும் உற்பத்தி மற்றும் பாவனை ஆகியவற்றின் சாத்தியங்களும் மற்றும் வரையறைகளும்

**ஆராய்ச்சிக் குழு** : திருமதி ரீ.பி. முணவீரகே - ஒருங்கிணைப்பாளர்
திருமதி ஜி.ஜி. த எல்.டப்ளியூ. சமரசிங்க - துணை ஆராய்ச்சியாளர்

**நிதியிடும் மூலம்:** திரட்டு நிதியம்

**நோக்கெல்லையும் குறிக்கோள்களும்:**

இரசாயனப் பசளைகள் மற்றும் பூச்சிநாசினிகள் ஆகியவற்றுடன் தொடர்புடைய பிரதிகூல வெளிக்கள காரணிகளை அறிந்துகொள்ளல் மற்றும் அத்தகைய காரணிகள் பற்றிய அனுபவம் ஆகியவற்றைக் கொண்டு, உணவுக்கான அதிகரித்து வருகின்ற தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில், குறைவடைந்து வருகின்ற தலா நிலப் பரிமாண அளவிலிருந்து அதிக உணவுகளை உற்பத்தி செய்யும் சவாலை எதிர்கொண்டு, மண் வளம் பூச்சி மற்றும் பீடைக் கட்டுப்பாட்டு முறையியல்களை மேம்படுத்துவதற்கான சுற்றாடல் நேய முறையியல்களை பின்பற்றுவதற்கான ஒரு தேவை எழுகின்றது. உயிரியல் பசளைகளும் மற்றும் உயிரியல் பூச்சிகொல்லிகளும் மண் வள முகாமைத்துவம் மற்றும் பூச்சிகள் கட்டுப்பாடு ஆகியவற்றின் ஆகுசெலவு ரீதியில் ஒரு பயனுள்ள, உயிரியல் சுற்றாடல்நேய, மீளப்புதுப்பிக்கத்தகு மற்றும் நிலைபெறுதகு வளமாக பரிணமித்துள்ளன. உயிரியல் கட்டுப்பாட்டு முறையியல்களும் மற்றும் உயிரியல் பசளைகளும் குறிப்பாக இலங்கையில் அதிகளவு பிரபல்லியம் அடையாவிட்டாலும் கூட, இலங்கை ஓரளவுக்கு அத்தகைய முறையியல்களை பிரயோகித்து அதிகளவில் பயனடைந்துள்ளது. நாட்டில் உயிரியல் பசளையினதும் மற்றும் உயிரியல் பூச்சிகொல்லியினதும் பாவனை பற்றிய தற்போதைய நிலை மற்றும் உயிரியல் பசளைகளையும் உயிரியல் பூச்சிகொல்லிகளையும் பிரயோகிப்பதிலும் மற்றும் விஸ்தரிப்பதிலும் காணப்படும் வரையறைகளும் நன்கு ஆவணப்படுத்தப்படுவதில்லை. ஆகையால், இலங்கையில் நிலைபெறுதகு விவசாய தொழில்நுட்பங்களை எதிர்காலத்தில் வியாபிப்பது தொடர்பான கொள்கையையும் திறமுறைத்திட்டங்களையும் வகுத்தமைக்கும் வகையில், உயிரியல் பசளைகளினதும் மற்றும் உயிரியல் பூச்சிகொல்லிகளினதும் பாவனையின் வரையறைகள், சவால்கள், ஊக்கவிப்புகள் மற்றும் தடைகள் முதலிய விடயங்களை கண்டறியும் பொருட்டு இந்த ஆய்வு திட்டமிடப்பட்டது.

**முக்கியமான முடிவுகள்:**

1. விவசாய நிலங்களின் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கும் மற்றும் இரசாயனப் பூச்சிநாசினிகளுடன் சம்பந்தப்பட்ட பாதகமான தாக்கங்களை குறைப்பதற்கும், உயிரியல் பசளைகளாக அனுகூலமான நுண்ணங்கிகளின் பாவனை கடந்த ஆண்டுகளில் பாரிய ஒரு மேம்பாட்டை காண்பித்துள்ளது. வருடாந்த மற்றும் பெருந்தோட்டப் பயிர்கள் அடங்கலாக பல பயிர்களின் மீதான உயிரியல் பசளைகளின் சரியான பாவனையிலான கள ரீதியான பரிசோதனைகள் இரண்டு விடயங்களிலும் அறுவடையில் ஒரு அதிகரிப்பை காண்பித்தன.

2. எனினும், விவசாயிகள் தொடர்ச்சியாக தமது வயல்களில் உயிரியல் பசளைகளையும் மற்றும் உயிரியல் பூச்சிகொல்லிகளையும் பிரயோகிப்பதை காணமுடியவில்லை என்பது ஆராய்ச்சியின் முக்கியமான முடிவாகும்.

3. விவசாயிகள் மட்டத்தில் உயிரியல் பசளைகளினதும் மற்றும் பூச்சிகொல்லிகளினதும் எளிய பிரயோகத்திற்கு விழிப்புணர்வின்மை மிக முக்கியமான காரணமாகும். இரசாயனப் பதாரத்தத்திற்கு நிகராக, உயிரியல் பசளைகளும் மற்றும் உயிரியல் பூச்சிகொல்லிகளும் சந்தையில் தாராளமாக கிடைக்கக்கூடியதாகவில்லை, ஏனென்றால் அவை நுண்ணங்கிகளின் பெருக்கத்திற்கு சாதகமான காலநிலையில் களஞ்சியப்படுத்தப்பட்டு பிரயோகிக்கப்பட வேண்டும். இது விவசாயிகளினால் அடிக்கடி வசதியளிக்க முடியாத விஷேட வசதிகளையும் மற்றும் கவனிப்பையும் தேவைப்படுத்தும். மறுவகையில் கூறுவதானால், உயிரியல் பசளைகள் ஸ்தலமும் மற்றும் குறித்த பயிரும் சார்ந்தனவாகும். ஆகையால், முழுமையான சிபாரிசுகளை முன்வைப்பது கடினமாகும்.

4. விவசாயிகள் உயிரியல் உள்ளீடுகள் பற்றி அறிந்திருந்தாலும் அவர்களிடத்தில் அத்தகைய உள்ளீடுகளை நோக்கிய மனோபாவம் குறைந்தளவில் காணப்படுவதால், அவற்றின் தரம் குறைவு எனவும் மற்றும் கள மட்டத்தில் அவற்றின் செயல்திறன் மிகவும் நம்பத்தகுந்ததல்ல எனவும் அவர்கள் உணர்கின்றனர்.

   விவசாயிகளுக்கு மத்தியில் குறைந்தளவான அறிவு, கைத்தொழில்களை விஸ்தரிப்பதற்கு மானியங்கள் அல்லது ஏதாவது பிற ஊக்குவிப்புகள் போன்ற அரசாங்க உதவி கிடையாமை மற்றும் குறைந்த இரசாயனப் பதார்த்த உள்ளீட்டு விலைகள் என்பவற்றின் காரணமாக குறைந்த சந்தைக் கேள்விகள் இலங்கையில் உயிரியல் உள்ளீட்டு உற்பத்தித் தரப்புகள் எதிர்நோக்குகின்ற பிரதான தடைகளாகும்.

## சிபாரிசுகள்

இலங்கையின் விவசாயத்தில் உயிரியல் பசளைகளையும் மற்றும் பூச்சிகொல்லிகளையும் ஊக்குவிப்பதற்கு தேசிய மட்டத்திலான ஆதரவுகளும் செயற்பாடுகளும் அவசியமாகும். ஆய்வினது முடிவுகளின் அடிப்படையில், பின்வரும் சிபாரிசுகள் முன்வைக்கப்படுகின்றன.

1. இலங்கையில் உயிரியல் பசளைகளினதும் மற்றும் உயிரியல் பூச்சிகொல்லிகளினதும் பாவனையை ஊக்குவிப்பதற்கான அரசாங்கக் கொள்கைகளையும் மற்றும் முந்துரிமை விடயங்களையும் செயற்படுத்துதல். பல்தரப்பட்ட அக்கறையுடைய தரப்புகளுக்கு இடையில் பரந்திருக்கின்ற அறிவை சேகரிப்பதற்கும் மற்றும் சிறந்த கொள்கை சார்ந்த முன்னெடுப்பு திட்டங்களை தயாரிப்பதற்கும் அரசாங்கத்திற்கும் கைத்தொழில்களுக்கும் இடையிலும் மற்றும் கல்விமான்களுக்கு இடையிலும் கூட்டொத்துழைப்புகளை கட்டியெழுப்பது மிகவும் முக்கியமானதாகும்.

2. உயிரியல் உள்ளீடுகள் நாட்டின் ஒன்றிணைந்த பூச்சிகள் மற்றும் போஷாக்கு முகாமைத்துவம் சம்பந்தமான நிகழ்ச்சித்திட்டத்தின் ஒரு அங்கமாக ஊக்குவிக்கப்படுதல் வேண்டும்.

## 4. இலங்கையின் விவசாயத் துறையில் விவசாயப் பட்டதாரிகளினதும் மற்றும் விவசாய டிப்ளோமா பட்டதாரிகளினதும் ஈடுபாடு பற்றிய தற்போதைய நிலை

**ஆராய்ச்சிக் குழு** : திருமதி ஆர்.எம்.எம்.எச்.கே. ரம்பொடகெதர - ஒருங்கிணைப்பாளர்
திருமதி ஜே.ஏ.யூ.பி. ஜயசிங்க - துணை ஆராய்ச்சியாளர்

**நிதியிடும் மூலம்** : திரட்டு நிதியம்

### நோக்கெல்லையும் குறிக்கோள்களும்:

இந்த அய்வு விவசாயப் பட்டதாரிகளையும் மற்றும் விவசாய டிப்ளோமா பட்டதாரிகளையும் விவசாயத் துறைக்கு உள்ளீர்ப்பதையும் மற்றும் நாட்டின் விவசாய அபிவிருத்திற்கு அவர்களின் பங்களிப்பையும் இனங்காணும் முக்கிய நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்டது. (i) விவசாயப் பட்டதாரிகளினதும் விவசாய டிப்ளோமாதாரிகளினதும் தொழில் நிலையையும் மற்றும் தற்போதைய தொழிலை தேர்ந்தெடுப்பதில் செல்வாக்குச்செலுத்தும் முக்கியமான காரணிகளையும் பகுப்பாய்வு செய்தல், (ii) விவசாயப் பட்டதாரிகளினதும் விவசாய டிப்ளோமா பட்டதாரிகளினதும் விவசாயத் துறையிலுள்ள ஈடுபாட்டை அவர்களின் தொழில் பங்களிப்புகளினுள் ஆராய்ந்து அந்த விவசாயப் பட்டதாரிகளுக்கும் விவசாய டிப்ளோ பட்டதாரிகளுக்கும் விவசாயத் துறையில் பிரவேசிப்பதிலுள்ள தடைகளை கண்டறிந்து அவர்களை விவசாயத் துறையில் தக்கவைத்துக்கொள்வது பற்றி ஆராய்தல் என்பன இந்த ஆய்வின் விஷேட குறிக்கோள்களில் அடங்குகின்றன.

### முக்கியமான முடிவுகள் - விவசாய பட்டதாரிகளை விவசாயத் துறைக்கு உள்ளீர்த்தல்

1. தொழிலில் அமர்த்தப்பட்ட பெரும்பான்மையான மாதிரிப் பட்டதாரிகள் விவசாயப் பட்டதாரிகளின் அதிகளவு தொழில் வீதத்தை பிரதிபலிக்கின்றனர். விவசாயத் துறையிலும் மற்றும் விவசாயத்துடன் சம்பந்தப்பட்ட பிரிவுகளிலும் இவர்களின் பங்குபற்றலும் அதிகளவில் காணப்பட்டது. சிறந்த ஒரு தொழிலை தேடிக்காண முடியாமையானது மாதிரிப் பட்டதாரிகள் தற்போதைய தொழிலில் தங்கியிருப்பதற்கு பிரதான காரணமாகும்.

2. மதிப்பிடப்பட்ட பட்டதாரிகளில் அரைவாசியினர் முகாமைத்துவ மட்டத்திலான தொழில்களையும், தொழில்நுட்ப மற்றும் அதனுடன் இணைந்த தொழில்களையும் அடுத்து, தொழில்தேர்ச்சி சார்ந்த தொழில்களில் அமர்த்தப்பட்டுள்ளனர். தொழில்தேர்ச்சியாளர்களாக தொழிலில் அமர்த்தப்பட்ட பெரும்பான்மையான பட்டதாரிகள் ஆசிரியர் தொழிலில் இருந்தனர்.

3. பெரும்பான்மையான மாதிரிப் பட்டதாரிகள் நாட்டின் விவசாயத் துறையில் அவர்களின் காத்திரமான ஈடுபாட்டை சுட்டிக்காட்டுகின்ற

அவர்களின் தற்போதைய தொழில் குறிப்புகளினுள் விவசாயம் சம்பந்தப்பட்ட செயற்பாடுகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

4. அரச துறையில் குறைந்த தொழில் வாய்ப்புகள் காணப்படுகின்றமையானது விவசாயத் துறையில் நுழைந்து நீடித்திருப்பதற்கு ஒரு பிரதான தடையாக அமைந்தது.

5. மாதிரிப் பட்டதாரிகளின் தொழில் பிரிவு விரிவடைந்ததையடுத்து, விவசாயத் துறைக்கு அந்தப் பட்டதாரிகளின் பங்களிப்பை குறைக்கின்ற மற்றும் துறைக்கு பொருத்தமில்லாத விவசாயம் சம்பந்தப்பட்ட தொழில்களை நோக்கி செல்லும் ஒரு போக்கு காணப்படுகின்றது.

## சிபாரிசுகள்

1. பட்டதாரிகளுக்கு நாட்டின் விவசாயத் துறையை அபிவிருத்தி செய்வதற்காக தமது ஆகக்கூடிய பங்களிப்பை நல்கும் வகையில் அவர்களின் தொழில்களை விவசாய விஞ்ஞானிகளாக அபிவிருத்தி செய்யக்கூடியவாறு அரச துறையிலுள்ள தொழில்களில் பிரவேசிப்பதற்கு தெளிவான ஒரு வழியையும் மற்றும் வாய்ப்புகளையும் உருவாக்குவதற்கு கவனம் செலுத்தப்படுதல் வேண்டும்.

2. பட்டதாரிகளுக்கு அவர்கள் விவசாயத் துறையில் தொழில்வாண்மையாளர்களாக விளங்குவதற்கு பெரும் சாத்தியம் காணப்படுவதால், அவர்கள் விவசாய தொழில்வாண்மையாளர்களாக ஆகுவதற்கு தம்மிடமுள்ள சாத்தியத்தையும் ஆற்றலையும் பயன்படுத்திக்கொள்ளக்கூடிய வகையில் கல்வி சார் நிகழ்ச்சித்திட்டங்களில் முழுமையான தொழில்வாண்மை கல்வியை அவகர்களுக்கு வழங்க முடியும்.

3. விவசாய வர்த்தகத்தில்/பண்ணை சார்ந்த செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு அக்கறையுடைய பட்டதாரிகளுக்கு, அரச மற்றும் தனியார் துறைகளுக்கு சொந்தமான தரிசு நிலங்களை அல்லது பயன்படுத்தப்படாத நிலங்களை, கமத்தொழில் அமைச்சின் பொறுப்பு வாய்ந்த தலையீட்டு நடவடிக்கைகளைக் கொண்டு, வெற்றிக்கு - வெற்றி எனும் நிலையை உருவாக்குவதன் மூலமாக ஒப்பந்த உடன்படிக்கையினூடாக வழங்குமாறு சிபாரிசு செய்யப்படுகின்றது. விவசாய வர்த்தக செயற்பாடுகளை ஆரம்பிக்க அல்லது ஏற்கெனவேயிருக்கின்ற விவசாய வர்த்தக செயற்பாடுகளை அபிவிருத்தி செய்வதற்கு விரும்புகின்றவர்களுக்கு வட்டியற்ற கடன்களை அல்லது குறைந்த வட்டியுடைய கடன்களை அறிமுகப்படுத்தலாம்.

4. விவசாய பட்டதாரிகளை அவர்களின் தொழில்களை ஆரம்பிக்கும் வகையில் விவசாயத் துறையில் உள்ளீர்ப்பதற்கான தொழில்களையும் மற்றும் தொழில் வாய்ப்புகளையும் வழங்கும் பொருட்டு, அரச துறை, தனியார் நிறுவனங்களுடனும் மற்றும் ஏனைய பொருத்தமான நிறுவனங்களுடனும் வலிமையான தொடர்புகளை கட்டியெழுப்புவதற்கு சிபாரிசு செய்யப்படுகின்றது.

**முக்கியமான முடிவுகள் - விவசாய டிப்ளோமாதாரிகளை விவசாயத் துறைக்கு உள்ளீர்த்தல்**

1. விவசாய டிப்ளோதாரிகளை அதிகளவில் தொழிலில் அமர்த்தக்கூடிய தன்மையை கருத்திற்கொண்டு அதிகளவான மாதிரி டிப்ளோதாரிகள் தொழிலில் அமர்த்தப்பட்டனர். கல்வித் தகைமைகளும் மற்றும் திறன்களும் அடங்கலாக பொருத்தப்பாடு தற்போதைய தொழிலை தேர்ந்தெடுப்பதற்கான பாரிய ஒரு காரணியாக இனங்காணப்பட்டுள்ளது.

2. அதிகளவான ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ள தற்போதைய தொழில், விவசாயத் துறையுடன் சம்பந்தப்பட்ட தொழிலாகும். மாதிரி விவசாய டிப்ளோமாதாரிகளின் தொழில் முன்னேற்றத்தை அவதானிக்கின்ற போது, விவசாயம் சம்பந்தப்பட்ட துறையில் பங்குபற்றலின் ஒரு அதிகரித்த போக்கு தென்படுகின்றது.

3. பெரும்பான்மையான மாதிரி டிப்ளோமாதாரிகள் தொழில்நுட்ப மற்றும் அதனுடன் இணைந்த தொழில்கள் வகுதியை பிரதிநிதிப்படுத்துகின்றனர். பல டிப்ளோமாதாரிகள் தொழில்நுட்பம் மற்றும் அதனுடன் இணைந்த தொழில்கள் வகுதிகளுக்கு சொந்தமான விஸ்தரிப்பு சேவையுடன் சம்பந்தப்பட்ட தொழில்களில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

4. பெரும்பான்மையான டிப்ளோமாதாரிகள் விவசாய போதகர்களாக பணியாற்றி வருகின்றனர். பயிர்ச்செய்கை மற்றும் விலங்கு வளர்ப்பு ஆகியவற்றில் விவசாயிகளுக்கும் மற்றும் மீன்பிடித் தொழிலில் மீனவர்களுக்கும் ஆலோசனைகளை வழங்குதல், அத்தகைய விவசாயிகளும் மீனவர்களும் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளை அவர்கள் தீர்த்துக்கொள்ளும் வகையில் அவர்களுக்கு உதவுதல், பொறிமுறையாக்கல் மற்றும் தொழில்நுட்ப பரம்பல் ஆகியவற்றில் விவசாயிகளுக்கு உதவுதல் முதலியன, வசாயத்தில், டிப்ளோமாதாரிகளால் நிறைவேற்றப்பட்ட சிறப்புப்பணிகளுக்கு மத்தியில் காணப்பட்டன.

**சிபாரிசுகள்**

1. விஸ்தரப்பு உத்தியோகத்தர்கள் நாட்டில் விவசாயத் துறையை பரிவர்த்தனை செய்வதில் முக்கிய பங்கு வகிப்பதால், விவசாய கல்வி சார் நிகழ்ச்சித்திட்டங்களில் முழுமையான இற்றைப்படுத்தப்பட்ட அறிவை வழங்குவதற்கு கவனம் செலுத்தப்படுதல் வேண்டும்.

2. மிகவும் செயன்முறை சாத்தியமான கற்கை வாய்ப்புகளை உறுதிசெய்வதன் மூலமாக கல்வி சார் நிகழ்ச்சித்திட்டத்தின் தரத்தை மேம்படுத்துவதும் நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றத்திற்கும் மற்றும் நாட்டிற்கு மிகவும் உற்பத்தித்திறன் வாய்ந்த உற்பத்திகளை உற்பத்தி செய்வதற்கும் மிகவும் இன்றியமையாததாகும்.

3. தற்போதைய முறைமையில், விஸ்தரிப்பு உத்தியோகத்தர்கள் பயனுள்ள சேவையை வழங்குவதில் உதவும் பல அளவிலான வகிபங்குகளுடனும் மற்றும் பொறுப்புக்களுடனும் பரந்த புவியல் பிரதேசத்தை உள்ளடக்கி பணியாற்ற வேண்டும். ஆகையால், விஸ்தரிப்பு உத்தியோகத்தர்களை அவர்கள் விவசாயிகளுக்கு திருப்திகரமான ஒரு சேவையை வழங்கக்கூடிய வகையில், அடையக்கூடிய இலக்குகளை சாட்டுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும்.

## 05. ஒன்றிணைந்த நீர் வளங்கள் முகாமைத்துவ எண்ணக்கருவை உருவாக்குவதற்கு இலங்கையின் புராதன நீர் முகாமைத்துவ நுட்பங்களிலிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் பற்றிய ஆய்வு

**ஆராய்ச்சிக் குழு** : திருமதி ஜே.ஏ.யூ.பி. ஜயசிங்க - (ஒருங்கிணைப்பாளர்)
திருமதி எம்.எச்.கே. ரம்பொடகெதர - (துணை ஆராய்ச்சியாளர்)

**நிதியிடும் மூலம்** : திரட்டு நிதியம்

### நோக்கெல்லையும் குறிக்கோள்களும்:

இலங்கைக்கு ஒன்றிணைந்த நீர் வளங்கள் முகாமைத்துவ (IWRM) எண்ணக்கருவை உருவாக்குவதில் பயன்படக்கூடிய புராதன நீர்ப்பாசன முறைமைகளில் காணப்படும் சிறந்த நீர் முகாமைத்துவ செயன்முறைகளை இணங்காணும் பொருட்டு, இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. (i) இலங்கையின் உலர் வலயத்திற்கு விஷேட குறிப்புடன் கூடிய புராதன நீர்ப்பாசன முறைமைகளின் நிலைபெறுதகுதன்மைக்கு பங்களித்த இலங்கையிலுள்ள புராதன நீர் முகாமைத்துவ செயன்முறைகளின் முக்கியமான சிறப்பம்சங்களை இனங்காணுதல், (ii) IWRM கோட்பாட்டு எண்ணக்கருவுடன் இந்த செயன்முறைகளின் இணக்கப்பாடு பற்றி மதிப்பிடுதல், (iii) நாட்டிற்கு IWRM எண்ணக்கருவை உருவாக்கும் பொருட்டு புதாரன நீர்ப்பாசன முறைமைகளின் சிறந்த செயன்முறைகளை சிபாரிசு செய்தல் என்பன இந்த ஆய்வின் விஷேட குறிக்கோள்களில் உள்ளடங்குகின்றன. இந்த ஆய்வு பிரதானமாக பாரம்பரிய குள நீர்த்தேக்க முறைமையில் ஒருமுகப்பட்டு காணப்பட்டது.

### முக்கியமான முடிவுகள்

1. இலங்கையின் புராதன நீர் முகாமைத்துவ நுட்பங்களில் பாரிய IWRM கோட்பாட்டு எண்ணக்கருக்கள் பல அம்சங்களிலும் உள்ளடங்கியுள்ளன.

2. இலங்கையின் புராத நீர் முகாமைத்துவ நுட்பங்களின் பின்னணியில், குள நீர்த்தேக்க முறைமை உலர் வலயத்தின் காலநிலைகளுக்கு மிகவும் பொருத்தமானதாகும். குறிப்பாக, இது வெள்ளப்பெருக்குகளினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைக்கும் அதே வேளையில், வரண்ட காலங்களுக்கான நீரை உள்ளடக்குவதற்காகவும் பயன்பட்டுள்ளது.

3. குள நீர்த்தேக்க முறைமையின் நிலப் பாவனை மாதிரி நீரை வினைத்திறனாகவும் பயனுள்ள விதத்திலும் பயன்படுத்துகின்றது. இது மிகவும் சமநிலையான ஒரு முறைமை. இந்த நீர் முறைமை வன விலங்குகளுக்கு நீரையும் மற்றும் உணவுகளையும் வழங்குவதை உறுதிசெய்துள்ளது. ஆகையால், இது பயிர்களுக்கும் வீட்டுத் தோட்டங்களுக்கும் விலங்குகளினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை இயற்கையாக கட்டுப்படுத்தும்.

4. குள நீர்த்தேக்க முறைமையின் கட்டமைப்புகள் ஆண்டு முழுதிலும் முறைமைக்கான நீரின் படிப்படியான ஒழுக்கை மட்டுமன்றி நீரின் தரத்தையும் உறுதிசெய்துள்ளது.

5. நீர் முகாமைத்துவம் மற்றும் நிருவாக செயன்முறைகள் என்பன பாங்கான பங்குபற்றல் அணுகுமுறையுடன் மிகவும் நெருங்கிய தொடர்பை கொண்டிருந்தன. சமூக உரித்துடமை நீர் முகாமைத்துவத்தில் அதிகளவு காணப்படுவதால், முழு முறைமையும் நன்கு சமநிலையில் காணப்பட்டதுடன் வித்தியாசமான நீர்த் தேவைகளையும் வினைத்திறன் வாய்ந்ததாக பூர்த்தியும் செய்தது.

**சிபாரிசுகள்**

நீர் முகாமைத்துவத்திற்கான சமூக உரித்துடமையை வலுப்படுத்துவதற்கும் மற்றும் ஒரு பெரும் IWRM கோட்பாட்டு எண்ணக்கரு போன்ற பாங்கான பங்கபற்றல் அணுகுமுறையின் பிரயோகத்தை மேம்படுத்துவதன் மூலமாக நிருவகிப்பதற்குமான தேவை இருக்கின்றது. ஆகையால், தற்போதைய சூழ்நிலைக்கு சரியான ஒரு வழிமுறையை கருத்திற்கொள்கின்ற புராதன நீர்ப்பாசன முறைமையில் நிலவிய உரித்துடமையும் மற்றும் பராமரிப்பு கடப்பாடுகளும் தொடர்பான ஒழுங்குவிதிகளை மீளறிமுகப்படுத்தவதற்கு சிபாரிசு செய்யப்படுகின்றது.

இயற்கையும் மற்றும் மானிட முறைமைகளும் புராதன நீர்ப்பாசன முறைமையில் காணப்படுவதால், இதனை தற்போதய சூழ்நிலையில் IWRM எண்ணக்கருவை உருவாக்குவதற்கு ஒன்றிணைக்க முடியும். வன விலங்குகளின் தாக்குதல்கள் மற்றும் தரத்திலும் அளவிலும் மேற்தரை நீரும், நிலகீழ் நீரும் குறைதல் போன்ற அதிகரித்து வருகின்ற பிரச்சினைகளை அடையாளப்படுத்துவதற்கு, இது சிறந்த ஒரு தணிப்பு திறமுறைத்திட்டமாக அமையக்கூடும்.

**நிகழும் ஆய்வுகள்**

1. **இலங்கையின் உலர் வலயத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பயிர் உற்பத்தி முறைமைகளின் காலநிலை மாற்ற பாதிப்புத்தன்மை**

**ஆராய்ச்சிக் குழு:** திருமதி ஜி.ஜி. த எல்.டப்ளியூ. சமரசிங்க - ஒருங்கிணைப்பாளர்
திரு டப்ளியூ.எச்.ஏ. சாந்த - துணை ஆராய்ச்சியாளர்
திரு எம்.ஏ.சி.எஸ். பண்டார - துணை ஆராய்ச்சியாளர்
திருமதி எம்.ரீ. பத்மஜானி - துணை ஆராய்ச்சியாளர்
திரு எச்.ஜே.சி. ஜயசூரிய - துணை ஆராய்ச்சியாளர்
திருமதி ஆர்.எம்.எம்.எச்.கே. ரம்பொடகெதர - துணை ஆராய்ச்சியாளர்
திருமதி எம்.பி.என்.எம். டயஸ் - துணை ஆராய்ச்சியாளர்

**நிதியிடும் மூலம்:** திரட்டு நிதியம்

**நோக்கெல்லையும் குறிக்கோள்களும்:**

காலநிலை மாற்றம், அதன் விளைவுகள் மற்றும் உணவு உற்பத்தி முறைமைகள் மீது எதிர்பார்க்கப்பட்ட தாக்கங்கள் என்பன நன்கு ஆவணப்படுத்தப்படுகின்றன. பெரும்பான்மையான கிராமிய மக்கள் வாழ்வாதார மூலமாக விளங்கும் விவசாயத்திலும் அதனுடன் சம்பந்தப்பட்ட செயற்பாடுகளிலும் தங்கியிருப்பதால், உலர் பிராந்தியத்திலுள்ள அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடுகள் மிகவும் பாதிக்கப்படக்கூடும் என ஆய்வுகள் சுட்டிக்காட்டியுள்ளன. பின்பற்றுவதில், பாதிக்கப்படக்கூடிய தன்மையை மதிப்பிடுவதை, திட்டமிடுவதானது நியாயமான பயனுள்ள தழுவுகைத் திறமுறைத்திட்டங்களை வகுத்தமைப்பதற்கு பெரிதும் முக்கியமாக விளங்குகின்ற கொள்கை ஆக்கும் தரப்புகளின் அல்லது நிகழ்ச்சித்திட்டங்களை தயாரிக்கும் தரப்புகளின் தீர்மனமெடுக்கும் ஆற்றலை மேம்படுத்தக்கூடிய ஒரு பயனுள்ள சாதனமாக விளங்கும். நாட்டின் உலர் வலயம் உணவு உற்பத்தியின் கேந்திரமாக கருதப்படுகின்றது. உலர் வலயத்தில் விவசாய முறைமைகளுக்கு மத்தியில், அதிகளவு வேறுபாடுகள் காணப்படுகின்றன. மேலும், நாட்டின் ஏனைய பாகங்களுடன் ஒப்பிடும் போது, உலர் வலயத்தின் அதிகளவான ஊழியர்கள் விவசாயத் துறையில் சம்பந்தப்படுகின்றனர். ஆகையால், இலங்கையின் உலர் வலயத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பயிர் உற்பத்தி முறைமைகளின் காலநிலை ரீதியான பாதிப்பை மதிப்பிடும் பொருட்டு, இந்த ஆய்வு திட்டமிடப்பட்டது.

**விஷேட குறிக்கோள்கள்:**

1. காலநிலை மாற்றம் தொடர்பான தாக்கங்களுக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட பயிர் உற்பத்தி முறைமைகளின் காலநிலை மாற்றம் பற்றிய உணர்வை மதிப்பிடுதல்.

2. காலநிலை மாற்றம் தொடர்பான தாக்கங்களுக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட பயிர் உற்பத்தி முறைமைகளைப் பின்பற்றுவதிலுள்ள ஆற்றலை மதிப்பிடுதல்.

3. காநிலை மாற்றம் தொடர்பான தாக்கங்களுக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட உற்பத்தி முறைமைகளின் அனுபவம் பற்றி மதிப்பிடுதல்.

## சந்தைப்படுத்தல் உணவுக் கொள்கை மற்றும் விவசாய வர்த்தகப் பிரிவு

### நிறைவுசெய்யப்பட்ட ஆய்வுகள்

**1. இலங்கையில் மரக்கறி மற்றும் பழ விநியோக சங்கியிலியில் நிலவுகின்ற தரமும் பாதுகாப்பும் சார்ந்த பிரச்சினைகள்: ஓர் மீளாய்வு**

**ஆராய்ச்சிக் குழு:** திருமதி ருவினி விதானபத்திரன - ஒருங்கிணைப்பாளர்
திருமதி பி.ஏ.ஜே. சம்பிக்கா - துணை ஆராய்ச்சியாளர்
திருமதி ரோஷினி ரம்புக்வெல்ல - துணை ஆராய்ச்சியாளர்
திரு டப்ளியூ.என்.ஏ. விஜேசூரிய - துணை ஆராய்ச்சியாளர்

**நிதியிடும் மூலம்:** திரட்டு நிதியம்

**ஆய்வின் நோக்கெல்லை:**

பழ வர்க்கங்களும் மற்றும் மரக்கறி வகைகளும் இலங்கையின் விவசாயத்தில் ஒரு ஆரோக்கியமான வளர்ச்சிப் போக்கைத் தூண்டுகின்ற ஒரு சக்தி வாய்ந்த உந்து காரணிகளாக இருந்து வருகின்றன. விநியோக சங்கியிலிலுள்ள பழ வர்க்கங்களினதும் மற்றும் மரக்கறி வகைளினதும் தரத்தைக் கட்டுப்படுத்துதலும் மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்துதலும் தற்பொழுது இலங்கையில் அதிகளவு சவால்கள் நிறைந்த பிரச்சினைகளில் ஒரு பிரச்சினையாக மாறியுள்ளது. அண்மை காலத்தில் விவசாயிகள், சேகரிக்கும் தரப்புகள் மற்றும் வர்த்தகத் தரப்புகள் போன்ற பல தரப்புகளினால் விநியோக சங்கிலிகளினூடாக பல சட்டமுறையற்ற செயன்முறைகள் பதிவாகியிருந்தன. அறுவடைக்கு பிற்பட்டகால நட்டங்கள் தவிர, உணவில் தீங்கான பதார்த்தங்கள் கலத்தல் நாட்டில் சுகாதார ஆபத்துக்களுக்கு ஒரு அச்சுறுத்தலாக அமைந்துள்ளது. அறுவடை செய்யப்பட்ட பழங்களிலிலும் மற்றும் மரக்கறி வகைகளிலும் இரசாயனப் பதார்த்தங்களின் கழிவுகள் கலத்தல் மற்றும் அறுவடைக்கு பிற்பட்டகால நட்டங்கள் என்பவற்றின் காரணமாக தரம் கெடுதல் பொது மக்களுக்கு மத்தியில் அதிகளவில் பரவி, இலங்கையில் கடுமையான ஒரு பிரச்சினையாக மாறியுள்ளது. தடைசெய்யப்பட்ட செயன்முறைகள் மற்றும் இரசாயனப் பதார்த்தங்களின் பாவனை என்பவற்றினால் பழுதடையும் பழங்களையும் மற்றும் மரக்கறி வகைகளையும் வாங்குவதற்கு நுகர்வோர் தயங்குகின்றனர். ஆகையால், அத்தகைய செயன்முறைகளினது தற்போதைய அளவுகளின் தாக்கத்தை மதிப்பிடும் பொருட்டு உணவுப் பாதுகாப்பு விடயங்கள் முழுமையாக ஆய்வுசெய்யப்படுதல் வேண்டும்.

**விஷேட குறிக்கோள்கள்:**

1. இலங்கையின் பழ மற்றும் மரக்கறி விநியோக சங்கிலிகளில் அறுவடைக்கு பிற்பட்டகால நட்டங்களுடன் தொடர்பான விடயங்களை மீளாய்வு செய்தல் மற்றும் நாட்டில் அறுவடைக்கு பிற்பட்டகால

நட்டங்களை குறைத்து அத்தகைய நட்டங்களை வெற்றிகொள்வதை அடையாளப்படுத்தக்கூடிய ஆய்வுகளை இனங்காணுதல்.

2. நாட்டில் மரக்கறி மற்றும் பழ விநியோக சங்கிலிகளில் உணவுப் பதார்த்தங்கள் கலப்பது சம்பந்தமான பாதுகாப்பான விடயங்களை மீளாய்வு செய்தல்.

3. நாட்டில் மரக்கறி மற்றும் பழ விநியோக சங்கிலிகளில் தர மற்றும் பாதுகாத்தல் பிரச்சினைகளை குறைத்துக் கொள்வதற்கு நிறுவன மட்டத்திலான நடவடிக்கைகளை இனங்காணுதல்.

4. மரக்கறி மற்றும் பழ விநியோக சங்கிலிகளில் நிலவுகின்ற தரம் மற்றும் பாதுகாத்தல் சம்பந்தமான பிரச்சினைகளை குறைக்கும் நிமித்தம் ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் ஏனைய நாடுகளினால் அபிவிருத்தி செய்யப்பட்ட வெற்றிகமான திறமுறைத்திட்டங்களையும் மற்றும் அந்த நாடுகள் பெற்ற அனுபவங்களையும் மீளாய்வு செய்தல்.

**முடிவுகள்:**

1. இலங்கையில் உற்பத்தி செய்யப்படுகின்ற பழங்களினதும் மற்றும் மரக்கறி வகைகளினதும் தரமும் மற்றும் பாதுகாப்பும் உற்பத்தியும் பூச்சிநாசினிகளினதும் மற்றும் பசளைகளினதும் முறையற்ற பாவனை, ஒழுங்கற்ற முறையியல்கள் மற்றும் செயன்முறைகள் என்பவற்றினால், உற்பத்திக் கட்டம் முதல் அறுவடைக்கு பிற்பட்ட செயற்பாடுகள் வரை பாதிக்கப்படுகின்றன. தரம் மற்றும் பாதுகாத்தல் ஆகியவற்றை உறுதிசெய்யும் பொருட்டு உற்பத்தி அல்லது வளர்ப்பு கட்டத்தில் ஆகக்குறைந்த தலையீட்டு நடவடிக்கை இருத்தல் வேண்டும்.

2. வெட்டுக்கள் ஏற்படுதல், அதிர்வுகள், சிராய்வுகள், நெருக்கம், மற்றும் தகாத முறையில் உறைகளில் (பொலிதீன் உறைகள் மற்றும் சாக்குகள்) அடைத்து காற்றோட்ட வசதியில்லாத லொரிகளில் விவசாயிகளினாலும் மற்றும் ஏற்றியிறக்குவோரினாலும் ஏற்றியிறக்குகின்ற நேரத்தில் ஏற்படும் பொறிமுறை ரீதியான பாதிப்புகள் போன்ற தாக்கங்கள், இவற்றை ஏற்றும் போதும் மற்றும் இறக்கும் போதும் கரடுமுரடாக கையாளுதல், ஏற்றிச்செல்வதற்கு குளிரூட்டப்பட்ட வாகனங்கள் இல்லாமை, வெயில்படுதல் மற்றும் மழையில் நனைதல், தகாத முறையில் ட்ரக் வண்டிகளையும் மற்றும் லொரிகளையும் பயன்படுத்துதல் என்பவற்றின் காரணமாக மரக்கறி வகைகளுக்கும் மற்றும் பழ வர்க்கங்களுக்கும் ஏற்றியிறக்கப்படுகின்ற போது அதிகளவில் அறுவடைக்கு பிற்பட்டகால நட்டங்கள் ஏற்படுகின்றன.

3. ஒரு நுகர்வுப்பொருளின் அறுவடைக்கு பிற்பட்டகால நட்டத்தை மேம்பட்ட அறுவடைக்கு பின்-தொழில்நுட்பங்களை பிரயோகிப்பதால் மட்டும் குறைக்க முடியாது, பயிர் முகாமைத்துவம், கள துப்புரவேற்பாடுகள் என்பனவும் பயிர் இழப்புகளுக்கு பங்களிப்புச் செய்வது அதற்கு காரணமாகும். கள ரீதியில் பல நோய்களால் பீடிக்கப்படுவதால், அறுவடைக்கு முற்பட்டகாலத்தில் பங்கசுகளுக்கு எதிராக

சிகிச்சையளித்தல், துப்புரவேற்பாடு, உறையிடுதல் மற்றும் ஏனைய கள முகாமைத்துவ யென்முறைகள் மற்றும் அறுவடைக்கு பிற்பட்டகாலத்தில் கவனமாக கையாளுதல் முதலியவற்றினால் அறுவடைக்கு பிற்பட்டகாலத்தில் அநேகமான நோய் பிரச்சினைகளை குறைத்துக்கொள்ளலாம்.

4. களஞ்சியப்படுத்தல் மற்றும் தரம் பிரித்தல் வசதிகள் இன்மையாலும் பழங்களினதும் மற்றும் மரக்கறி வகைகளினதும் தரம் பாதிக்கப்படுகின்றது. விவசாயிகள் பாரம்பரிய முறைகளில் தமது விவசாய உற்பத்திகளை களஞ்சியப்படுத்தாமலும் மற்றும் தரம் பிரிக்காமலும் விற்பனை செய்கின்றனர். சகல பாரம்பரிய மற்றும் மேம்பட்ட முறைகளில் கைகளினால் களஞ்சியப்படுத்துவது மாத்திரமே செயன்முறை சாத்தியமாகும்.

5. மேலதிக உற்பத்திகளை நியாயமான ஒரு காலப்பகுதிற்கு சந்தைகளில் களஞ்சியப்படுத்தி வைப்பதற்கு வசதிகளின்மை மற்றும் வீதி ஓரமாகவுள்ள பாதுகாப்பற்ற சில்லறை விற்பனை நிலையங்கள் என்பவற்றினாலும் மரக்கறி வகைகளினதும் மற்றும் பழ வர்க்கங்களினதும் தரம் பாதிக்கப்படுகின்றது.

6. குறிப்பாக பூச்சிநாசினிகளின் கழவுகளினால் உணவு மூலங்கள், மரக்கறி வகைகள் என்பன பழுதடையும் பிரச்சினை பொது சுகாதாரத்திற்கான மிகக்கடுமையான சவால்களில் ஒரு சவாலை ஏற்படுத்துகின்றது. பூச்சிநாசினிகளை பாதுகாப்பாகவும் மற்றும் பயனள்ளதாகவும் பாவிப்பது தொடர்பான போதிய அறிவும் மற்றும் தகவல்களும் இல்லாமையினால் விவசாயிகள் பூச்சிநாசினிகளை அதிகளவு பாவித்தல், விவசாயிகள் அத்தகைய பூச்சிநாசினிகளை முறையற்ற விதத்தில் பாவித்தல் மற்றும் தகாத முறையில் பாவித்தல், விவசாயத் திணைக்களத்தினால் (வி.தி.) குறிப்பீடுசெய்யப்பட்ட நிறுத்திவைத்தல் கலப்பகுதியை கருத்திற்கொள்ளாமல் பயிர்களை அறுவடை செய்தல் என்பன பூச்சிநாசினிகளின் பாவனையுடன் தொடர்புடைய பாரிய பிரச்சினைகளாக காணப்படுகின்றன. பூச்சிநாசினிகளின் பாவனை இங்கையிலுள்ள விவசாயிகளுக்கு மத்தியில் தொழில்நுட்ப அறிவின்மை, பயலளிக்காத சட்டவாக்கம் என்பவற்றின் காரணமாக சரியான முறையில் ஒழுங்குறுத்தப்படுவதில்லை. ஒரு சில கண்காணிப்பு ஆய்வுகள் தவிர, நாட்டிலுள்ள மரக்கறி வகைகளிலும் மற்றும் பழ வர்க்கங்களிலும் பூச்சிநாசினிகளின் கழிவுகள் கலப்பதை நிர்ணயிக்கும் பொருட்டு, முழுமையான ஆய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை.

7. வித்தியாசமான வகைகளையுடைய திரவநிலை தாவர வளர்ச்சி ஒழுங்குறுத்திகள் 'எதபோன்' பதார்த்தத்தை காத்திரமான ஒரு சேர்க்கையாக உள்ளடக்கியிருப்பதால், துரிதமாக கனியவைப்பத்தில் பயன்படுத்தப்படும் செயற்கைப் பதார்த்தங்கள் பழத்தில் அல்லது பழங்களில் தெளிக்கப்படுவதால் அத்தகைய பதார்த்தங்கள் கனிய வைக்கும் இரசாயனப் பதார்த்தங்களில் தொய்ந்து நிற்கும். 1993 இன் உணவுகள் ஒழுங்குறுத்துகை தொடர்பான ஒழுங்குவிதியின் 26 ஆம் பிரிவும் கல்சியம் காபைட்டின் பாவனையை தெளிவாக தடுக்கின்றது.

இந்த கல்சியம் காபைட்டு சேகரிக்கும் தரப்புகளினாலும் மற்றும் வியாபாரத் தரப்புகளினாலும் பொதுவாகப் பயன்படுத்தப்படுகின்ற ஒரு பதார்த்தமாகும். வர்த்தகளவிலான கல்சியம் காபைட்டின் அதிப்படியான பாவனை ஆசனிக் மற்றும் பொசுபரஸ ஹைட்ரைட்ஸ் போன்ற நச்சுக் கரைசல்களுடன் நேரடியாக கலந்து தாக்கத்தை ஏற்படுத்தும்.

8. இலங்கையில், உணவுப் பாதுகாப்பை உறுதிசெய்யும் சிறப்புப்பணி ஓரளவு சமயோசிதமான முறையில் மேற்கொள்ளப்படுகின்றது. விவசாயத் திணைக்களம், நுகர்வோர் விவகாரங்கள் அதிகார சபை, இலங்கை நியமங்கள் கட்டளைகள் நிறுவகம், இலங்கை அணு சக்தி அதிகார சபை, இலங்கை சுங்கத் திணைக்களத்தின் தொற்றுநீக்கி தனிமைப்படுத்தும் பிரிவு, சுகாதார அமைச்சு போன்றவற்றின் அந்தந்த நிபுணத்துவ பிரிவுகளின் அடிப்படையில், அத்தகைய சிறப்புப்பணிகள் அத்தகைய அதிக அரசாங்க முகவராண்மைகளுக்கும் மற்றும் திணைக்களங்களுக்கும் பரந்துள்ளன. உணவு சங்கிலியின் வித்தியாசமான கட்டங்களில் உணவுகளின் பாதுகாப்பை நடைமுறைப்படுத்துவற்கு பயனுள்ள நிறுவனசார் பொறிமுறைத்திட்டம் இல்லாமையும் மற்றும் உணவுகளின் பாதுகாப்பை அளவிடுவதற்கு போதிய தேசிய நியமங்கள் இல்லாமையும் அவதானிக்கக்கூடியதாகவுள்ளது.

**சிபாரிசுகள்:**

1. பழங்களிலும் மற்றும் மரக்கறி வகைகளிலும் அறுவடைக்கு பிற்பட்டகாலத்தில் ஏற்படும் நட்டங்களை குறைக்கும் வகையில் தேசிய கொள்கையை வகுத்தமைப்பதற்கு அழுத்தம் கொடுக்கப்படுதல் வேண்டும் எனவும், மற்றும் அரசாங்கம் அறுவடைக்கு பிற்பட்ட காலத்தில் அத்தகைய பயிர்களை கையாளும் நிலைமைகளை மேம்படுத்துவதற்கு முன்னெடுப்புகளை மேற்கொண்டு வளங்களை ஒதுக்கி, மரக்கறி மற்றும் பழ விநியோக சங்கிலியிலுள்ள அக்கறையுடைய தரப்புகளின் சமூகப் பொருளாதார அந்தஸ்துகளை உயர்த்த வேண்டும் எனவும் இந்த மீளாய்வு சிபாரிசு செய்கின்றது.

2. பூச்சிநாசினிகளின் பாவனையை பொறுத்த வரையில், கள ரீதியாக ஏற்படும் பழுதடைவுகளை தடுப்பதற்கு வினைத்திறன் வாய்ந்த தெளிமுறைத் தொழில்நுட்பம் மற்றும் பூச்சிநாசினிகளின் பாதுகாப்பான பிரயோகம் என்பன அடங்கலாக தனியாள் சுகாதாரம் பற்றி விவசாயிகளுக்கு போதிக்கவும் மற்றும் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கவும் வேண்டும். விவசாய பண்ணைகளில் வைத்து சுத்தம் செய்தல், உலர்த்துதல், களஞ்சியப்படுத்தல், மற்றும் பொதியிடுதல் அடங்கலாக சரியான உள்ளீடுகளை தேர்ந்தெடுப்பதிலும் மற்றும் அறுவடைக்கு பிற்பட்ட காலத்தில் சரியான முறையில் கையாளுவதிலும் விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தல், மற்றும் உள்நாட்டு சந்தை மற்றும் சர்வதேச வர்த்தகம் என்பவற்றின் நிமித்தம் உணவுப் பாதுகாப்புப் பிரிவில் விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தல் முக்கியமானதாகும். அண்மையில், பூச்சிநாசினிகள் பதிவாளர் பழங்களுக்கும் மற்றும் மரக்கறி வகைகளுக்கும் என வர்த்தமானியில் MRL களை வெளியிட்டுள்ளார்.

பூச்சிநாசினிகளின் கழிவுகள் அடங்கிய பழ வர்க்கங்களினதும் மற்றும் மரக்கறி வகைகளினதும் விற்பனையை தடைசெய்வதற்கு இந்தப் புதிய ஒழுங்குவிதிகளை அறிமுகப்படுத்தலாம்.

3. ஆரம்பத்திலிருந்து விவசாயிகளினாலேயே உணவுப் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்துவதற்கு 'பண்ணை முதல் மக்கள்' வரை என்ற அணுகுமுறை உணவுகளை கட்டுப்படுத்துவதில் அவசியமானதாகும். இதில் விவசாயிகள், பயிர்களை வளர்ப்பவர்கள், உற்பத்தித் தரப்புகள், பதனிடும் தரப்புகள், உணவுகளை கையாளும் தரப்புகள் மற்றும் நுகர்வோர் போன்ற தரப்புகள் உள்ளடங்கியிருக்கும். அறுவடை, கையாளுகை மற்றும் சந்தைப்படுத்தல் ஆகியவற்றில் சம்பந்தப்படுகின்ற தூய உற்பத்தி விநியோக சங்கிலி உள்ளடங்கலாக ஒவ்வொரு அக்கறையுடைய தரப்பும் தூய புதிய உற்பத்திகளின் தரத்தை பாதுகாப்பதில் முக்கியமான ஒரு பங்கை வகிக்கின்றது. உற்பத்தியிலிருந்து விற்பனை வரை சம்பந்தப்படுகின்ற சகல அக்கறையுடைய தரப்புகளையும் ஈடுபடுத்தக்கூடிய செயல் திட்டமும் மற்றும் ஆவணமயப்படுத்தப்பட்ட முழுமையான ஒரு தேசிய உணவுகள் பாதுகாப்புக் கொள்கையும் இருத்தல் வேண்டும். இந்த உணவுகள் பாதுகாப்புக் கொள்கை வறுமை ஒழிப்பு மற்றும் விவசாய அபிவிருத்தி போன்ற அரசாங்கத்தின் ஏனைய கொள்கைப் பிரிவுகளில் ஒன்றிணைக்கப்படுதல் வேண்டும்.

4. உற்பத்தி, பதனிடுகை, பகிர்ந்தளிப்பு மற்றும் நுகர்வு ஆகிய மட்டங்களில் இரசாயனப் பதார்த்தங்கள், பூச்சிநாசினிகள், சேர்வுகள், பழுதடையாமல் பாதுகாக்கும் பதார்த்தங்கள் மற்றும் நச்சுத்தன்மையான மூலக்கூறுகள் என்பவற்றை இனங்காணுவதற்கான செயன்முறை சாத்தியமுடைய பரிசோதனைப் பொதிகளின் பாவனையை இலகுபடுத்தும் பொருட்டு தொடர்ச்சியான ஆராய்ச்சியின் முக்கியத்துவத்தை இந்த மீளாய்வு சுட்டிக்காட்டியது. அதிக பெறுமானமுடைய உற்பத்திகளுக்கு அதிகரித்து வருகின்ற உணவுப் பாதுகாப்புத் தேவைப்பாடுகளின் முக்கியத்துவம் போலவே அவற்றை சர்வதேச நியமங்களுடன் பொருந்தச்செய்வதற்கு ஆய்வுகூட மற்றும் பரிசோதனை வசதிகளில் முதலீடுகள் செய்யப்படுவதும் அவசியமாகும்.

## நிகழும் ஆய்வுகள்

### 1. இலங்கையிலுள்ள பசளை பண மாணிய நிகழ்ச்சித்திட்டம்: ஓர் சமூகப் பொருளாதார கண்ணோட்டம்

**ஆராய்ச்சிக் குழு** : திருமதி இந்திக்கா எதிரிசிங்க - ஒருங்கிணைப்பாளர்
திரு விராஜித் குருப்பு - துணை ஆராய்ச்சியாளர்
திருமதி தர்ஷிகா அமரகோன் - துணை ஆராய்ச்சியாளர்

**நிதியிடும் மூலம் :** திரட்டு நிதியம்

**நோக்கெல்லையும் மற்றும் குறிக்கோள்களும்**:

இலங்கை அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட பல கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றுக்கு மத்தியில், பசளை மானிய நிகழ்ச்சித்திட்டம் நாட்டில் நெற் பயிர்ச்செய்கையை ஊக்குவிக்கும் பொருட்டு செயற்படுத்தப்பட்ட மிகவும் நிலையான, மிகவும் செலவு வாய்ந்த மற்றும் அரசியல் ரீதியாக மிகவும் உணர்வுபூர்வமான ஒரு நிகழ்ச்சித்திட்டமாக கருதப்படுகின்றது. இந்த நிகழ்ச்சித்திட்டம் 1962 ஆம் ஆண்டில் (அது விவசாயப் புரட்சியின் ஆரம்பத்தில்) ஆரம்பிக்கப்பட்டது. இது இன்னும் ஐந்து தசாப்தங்களுக்கும் அதிக காலம் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. கொள்கை பல காலமாக பரிணாமம் அடைந்துள்ளது. 2016 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத்திட்ட முன்மொழிவில், 2016 *சிறுபோகத்தில்* செயல்வலுப் பெறும் வகையில் ஒரு பசளை பண மானிய (FCG) நிகழ்ச்சித்திட்டத்தினுள் கொண்டுவந்து, இந்த மானிய நிகழ்ச்சித்திட்டத்தில் ஒரு திருத்தம் மேற்கொள்ளப்பட்டது.

பசளை, விவசாயத்தில் ஒரு அத்தியாவசிய உள்ளீடு என்பதால், பசளையுடன் சம்பந்தப்பட்ட ஏதாவது ஒரு கொள்கை விவசாய உற்பத்தித்திறனை மேம்படுத்துவதில் இலக்குக்கொள்கின்ற தேசிய முயற்சிக்கு மிகவும் இன்றியமையாததாகும். 2016 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட இந்த FCG நிகழ்ச்சித்திட்டம், புதிய நிகழ்ச்சித்திட்டத்தின் சாதகமான மற்றும் பாதகமான பெறுபேறுகளின் அடிப்படையில், கொள்கை ஆக்குநர்கள், அரச அதிகாரிகள், விவசாயிகள், ஊடகவியலாளர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோருக்கு மத்தியில் ஒரு சம்பாஷணையை துண்டியது. ஆகையால், முன்னைய நிகழ்ச்சித்திட்டம் எதிர்க்கப்பட்டதால், புதிய நிகழ்ச்சித்திட்டத்தின் நன்மைகளை புரிந்துகொள்வதற்கு FCG நிகழ்ச்சித்திட்டத்தை மீளாய்வு செய்வதும் மற்றும் எதிர்காலத்தில் பயனுள்ள ஒரு மானிய நிகழ்ச்சித்திட்டத்தை திட்டமிடுவதற்கு பொருத்தமான கொள்கை சார்ந்த சிபாரிசுகளை முன்வைப்பதும் காலத்திற்கேற்ற தேவையாகவிருந்தது.

பயனுள்ள ஒரு மானிய நிகழ்ச்சித்திட்டத்திற்கு சரியான கொள்கை சார்ந்த சிபாரிசுகளை முன்வைக்கும் பொருட்டு தற்போதைய இந்த FCG நிகழ்ச்சித்திட்டத்தை மீளாய்வு செய்வது இந்த ஆய்வின் பிரதான குறிக்கோளாகும். (i) FCG நிகழ்ச்சித்திட்டத்தின் இயக்கப் பொறிமுறையை ஆராய்தல், (ii) இந்த FCG நிகழ்ச்சித்திட்டத்தை நோக்கிய விவசாயிகளின் பதில்களை உறுதிசெய்தல், நிகழ்ச்சித்திட்டத்தை செயற்படுத்தும் தரப்புகளும் மற்றும் பயன்னுகரிகளும் எதிர்நோக்குகின்ற சவால்களை இனங்காணுதல், (iii) இரண்டு பசளை மானிய நிகழ்ச்சித்திட்டங்களினதும் (2005-15 ஆம் ஆண்டுகள் வரை செயற்படுத்தப்பட்ட பண மானிய மற்றும் மூலப்பொருள் பசளை மானிய நிகழ்ச்சித்திட்டங்கள்) ஆகுசெலவு பயன்தகுதன்மையை மதிப்பிடுதல் மற்றும் (iv) பயனுள்ள ஒரு பசளை மானியத் திட்டத்திற்கான திறமுறைத்திட்டங்களையும் மற்றும் சிபாரிசுகளையும் முன்வைத்தல் என்பன இதன் விஷேட குறிக்கோள்களாகும்.

விரிவான ஒரு ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, குறித்த குறிக்கோள்களை அடைந்து கொள்ளும் பொருட்டு தரவு ரீதியான மற்றும் கணிய ரீதியான தரவுகள் சேகரிக்கப்பட்டன. முக்கிய தகவல் வழங்கும் நேர்காணல்கள், ஒரு மாதிரி ஆய்வு,

ஒருமுகக் குழுக் கலந்துரையாடல்கள் மற்றும் சம்பவ ஆய்வுகள் என்பன ஆரம்ப அடிப்படை தரவுகள் சேகரிப்பு சாதனங்களாக காணப்பட்டன. 2017 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் இறுதியளவில், எழுபத்து ஒன்பது முக்கிய தகவல் வழங்கும் நேர்காணல்களும், 16 ஒருமுகக் குழுக் கலந்துரையாடல்களும், ஒன்பது சம்பவ ஆய்வுகளும் மற்றும் ஒரு மாதிரி ஆய்வும் 390 விவசாயிகளின் பங்குபற்றலுடன் மேற்கொள்ளப்பட்டன. அம்பாறை, குருனாகல், அனுராதபுரம், பெலன்னறுவை, மாத்தறை, கிளிநொச்சி, பதுளை, மொனராகல் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்கள் தரவுகள் சேகரிப்பின் நிமித்தம் தேர்ந்தெடுக்கப்பட்டன. பல மூலங்களிலிருந்தும் சேகரிக்கப்பட்ட தரவுகளும் மற்றும் தகவல்களும் விரிவான ஒரு பகுப்பாய்வுக்கு உட்பட்டிருக்கும். வின்டோவ்ஸுக்கான SPSS வாசகம் 16.0, மென்பாகப் பொதி என்பவற்றைப் பயன்படுத்தி, மாதிரி ஆய்வின் தரவுகள் பகுப்பாய்வு செய்யப்படும். தரவுகள் பகுப்பாய்வும் மற்றும் அறிக்கை தயாரித்தல் பணியும் 2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும்.

### 02. இலங்கையில் விவசாயிகளின் தற்போதைய நிலை பற்றிய கண்ணோட்டமும் மற்றும் நெற் சந்தைப்படுத்தல் தொடர்பான அரச மற்றும் தனியார் துறை தலையீட்டு நடவடிக்கையின் எதிர்கால வழிகாட்டலும்

**ஆராய்ச்சிக் குழு** : திரு டப்ளியூ.ஏ.என். விஜேசூரிய - ஒருங்கிணைப்பாளர்
திருமதி சம்பிக்கா ஜயமானி - துணை ஆராய்ச்சியாளர்
திரு விராஜித் குருப்பு - துணை ஆராய்ச்சியாளர்

**நிதியிடும் மூலம்** : திரட்டு நிதியம்

**நோக்கெல்லையும் மற்றும் குறிக்கோள்களும்**

இலங்கையின் பொருளாதாரம் விவசாயத் துறையில் தங்கியிருப்பதால் அரிசி உற்பத்திக் கைத்தொழில் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திற்கும் மற்றும் உணவு பாதுகாப்புக்கும் இன்றியமையாததாகும். குறிப்பாக சிறியளவில் பயிர்ச்செய்யும் விவசாயிகளின் சந்தைப்படுத்தல் ஆற்றலை ஊக்குவிப்பது அதிகரித்து வருகின்ற பண்ணை முதலீட்டின் முக்கியமான சவாலாகும். அரிசி சார்ந்த துறையின் முக்கியத்துவற்கு ஏற்ப, அரிசியின் விலைகளில் ஏற்படும் தளம்பல்கள் அரசியல் நிலைபெறுதகுதன்மைக்கு அச்சுறுத்தலாக இருக்கின்றன. அரசாங்கங்கள் அவற்றின் நாட்டின் அரிசி சந்தையில் தலையிடுவதற்கு ஒரு காரணம் இதுவாக இருக்கலாம். அநேகமான ஆசிய பிராந்திய நாட்டு அரசாங்கங்கள் போல், இலங்கையும் இன்னும் அரிசியை திறமுறை சார்ந்த ஒரு நுகர்வுப்பொருளாக பார்க்கின்றது. இது வறிய மக்களின் உணவில் முக்கியத்துவம் பெறுவதும், விவசாயிகளின் ஒரு தொழிலாகவும் மற்றும் ஒரு வருமான மூலமாகவும் விளங்குவதும் இதற்கு காரணமாகும். அறுவடை காலத்தில் விவசாய உற்பத்திகளின் விலைகள் கடுமையாக குறைவடைந்தன. உற்பத்திகள் அரிதாக கிடைத்த பருவமல்லாத காலப்பகுதிகளில் இந்த உற்பத்திகளின் விலைகள் அதிகரித்திருந்தன. ஆகையால், இந்த நிலையினால் விவசாயிகளும் மற்றும் நுகர்வோரும் பாதிக்கப்பட்டனர். இது பொருத்தமான காலப்பகுதிகளில் ஊடகங்களினாலும் மற்றும் பொதுமக்களினாலும் பேசப்படும் ஒரு பெரும் பிரச்சினையாக

மாறியுள்ளது. பாதகமான ஏற்றத்தாழ்வுகளை தவிர்க்கும் நோக்கில், அரசாங்கம் பிரதானமாக நெற் சந்தைப்படுத்தல் சபையினூடாகவும் மற்றும் தனியார் துறையை ஊக்குவிப்பதனூடாகவும் நெல்லை சந்தைப்படுத்துவதில் தலையீடு செய்கின்றது. இதே நேரம் உற்பத்தி ஆகுசெலவில் தொடர்ச்சியான அதிகரிப்பு, நெல்லுக்கான குறைந்த விலைகள், நுகர்வுப் பொருட்களின் விலைகளில் கணிசமான அதிகரிப்பு (விஜேதுங்க, 2011:, அஹமட் 2014) என்பவற்றின் காரணமாக இலங்கையின் நெல் விவசாயிகளுக்கு நெல் வர்த்தகங்களின் விளைவாக பிரதிகூலங்கள் இருப்பதாக ஒரு சில ஆராய்ச்சியாளர்கள் கண்டுள்ளனர். ஆகையால், நெல்லை விற்பனை செய்வதில் விவசாயிகளின் தீர்மானமெடுக்கும் நடபடிமுறையையும், அவர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளையும் மற்றும் எதிர்காலத்தை திட்டமிடுவதற்கான அவர்களின் ஆலோசனைகளையும் ஆராய்வது அவசியமாகும்.

**ஆய்வின் பிரதான குறிக்கோள்**

விவசாயிகளின் மூலமாக அரச மற்றும் தனியார் துறை சந்தைப்படுத்தல் மார்க்கங்களின் தெரிவுக்கு செல்வாக்கு செலுத்துகின்ற காரணிகளை ஆராய்தலும் மற்றும் நெற் சந்தைப்படுத்தலின் ஒட்டுமொத்த செயன்முறையினது வினைத்திறனை அதிகரிப்பதற்கு தேவையான முக்கிய கொள்கை சார்ந்த முன்னெடுப்புகளை இனங்காணுவதும் இந்த ஆய்வின் குறிக்கோளாகும்.

**விஷேட குறிக்கோள்கள்:**

1. விவசாயிகளின் மூலம் அரச அல்லது தனியார் துறை வியாபாரிகளுக்கு நெல் விற்பனை செய்யப்படுவதால் நெல்லின் விற்பனையை பாதிக்கின்ற காரணிகளை ஆராய்தல்.

2. விவசாயிகள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளையும் மற்றும் ஒவ்வொரு சந்தைப்படுத்தல் மார்க்கத்திலும், அவர்களின் ஆலோசனைகளையும் இனங்காணுதல்.

3. நெல்லை சந்தைப்படுத்தலில் அரச மற்றும் தனியார் துறை தலையீட்டின் வினைத்திறனை அதிகரிப்பதற்கு தேவையான கொள்கை சார்ந்த முக்கிய முன்னெடுப்புகளை இனங்காணுதல்.

நாட்டில் பிரதானமாக நெல்லை உற்பத்தி செய்கின்ற நான்கு மாவட்டங்களில், (அம்பாறை, அனுராதபுரம், மட்டக்களப்பு மற்றும் பொலன்னறுவை) பதிலளிக்கும் 350 விவசாயிகளைக் கொண்டு, ஆரம்ப கள ஆய்வு நிறைவு செய்யப்பட்டது. தரவுகள் பதிவு நிறைவு செய்யப்பட்டுள்ளது. தரவுகள் பகுப்பாய்வு நிகழ்ந்து வருகின்றது.

## மனித வளங்கள் மற்றும் நிறுவன சார் அபிவிருத்திப் பிரிவு

விவசாய மற்றும் கிராமிய அபிவிருத்தி செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற முதியோர்களின் அறிவு, மனோபாவம் மற்றும் திறன்கள் என்பவற்றை விருத்தி செய்து அதனூடாக இலங்கையின் விவசாய சமூகத்தினது சமூகப் பொருளாதார நிலையை மேம்படச்செய்வது HARTI நிறுவகத்தினால் நடத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் குறிக்கோளாகும்.

வாடிக்கையாளர்களுக்கான HARTI நிறுவகத்தின் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், இலங்கையின் கிராமிய துறையிலும் மற்றும் விவசாய சமூகத்திலும் காணப்படுகின்ற அபிவிருத்தி செயற்பாடுகளில் சம்பந்தப்படுகின்ற கள உத்தியோகத்தர்கள், அரசாங்க உயர் அதிகாரிகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் அத்தகையவர்கள் ஆகியோர் உள்ளடங்கிய ஒரு பரந்த குழுவுக்கு சொந்தமானவையாகும்.

இந்தப் பிரிவினால் நடத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் பின்வருமாறு கட்டமைக்கப்பட்டுள்ளன.

1. விவசாய சமூகத்தினதும் மற்றும் தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினதும் தேவைகளின் அடிப்படையிலான பொதுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களைத் தயாரித்தல், ஒழுங்கமைத்தல் மற்றும் ஒருங்கிணைத்தல்.

2. விவசாய மற்றும் கிராமிய துறையுடன் தொடர்புடைய பல்வேறுபட்ட நிறுவனங்கள் விடுக்கும் வேண்டுகோள்களின் பேரில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை தயாரித்தல், மற்றும் ஒருங்கிணைத்தல்.

3. வேண்டுகோள்களின் போரில் ஏனைய நிறுவனங்களுக்கு பயிற்சி நிபுணர்களை வழங்குதல்.

4. தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் செயல் ஆராய்ச்சிக் கருத்திட்டத்தைத் திட்டமிட்டு நடத்துதல்.

இந்த அம்சங்கள் தவிர, ஏனைய தேசிய மற்றும் சர்தேச நிறுவனங்களுடன் கூட்டாக இணைந்து தேசிய மற்றும் சர்வதேச பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் வேலையரங்குகள் என்பன ஏற்பாடு செய்யப்பட்டு ஒருங்கிணைக்கப்படுகின்றன.

2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இந்தப் பிரிவினால் நாடு முழுதிலும் நடத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய விபரங்கள் பின்வருமாறு:

1. **கமக்காரர் அமைப்புகள் ஊக்குவிப்பு பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் (பெண் விவசாயிகள் ஊக்குவிப்பு)**

கமக்காரர் அமைப்பு என்பது பரந்த சட்ட அடிப்படையுடைய ஒரு கிராமிய நிறுவனமாகும். இது விவசாயத் துறையின் அபிவிருத்திற்கும் மற்றும் விவசாய சமூகத்தின் கூட்டு நலனுக்கும் நேரடியாக தனது சேவையை வழங்குகின்றது.

தேசிய விவசாய அபிவிருத்திற்கு நேரடியாக ஒரு பங்காளித்துவ தரப்பாக பங்களிப்பு செய்தாலும், அநேகமான கமக்காரர் அமைப்புகள் சரியான முறையில் தொழிற்படுவதில்லை. கமக்காரர் அமைப்புகள் விவசாயிகளின் அறிவு, திறன்கள் மற்றும் மனோபாவங்கள் என்பவற்றை மேம்படுத்துவதற்கும் அதே நேரம் தேவையான சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கும் பங்களித்தாலும் கூட, விவசாயிகளுக்கும் மற்றும் கமக்காரர் அமைப்புகளுக்கும் இடையிலான உறவுகள் மட்டுப்பட்ட அளவிலேயே காணப்படுகின்றன. பெரும்பான்மையான கமக்காரர் அமைப்புகள் பெயரளவிலேயே இயங்குகின்றன. இத்தகைய கமக்காரர் அமைப்புகளுக்கு தெளிவான இயக்கம் கிடையாது.

ஆகையால், கமக்காரர் அமைப்புகளை தேசிய விவசாய அபிவிருத்தியின் காத்திரமான பங்காளித்துவ தரப்புகளாக ஆக்கும் பொருட்டு, தேசிய உற்பத்தி நடபடிமுறையை உறுதிசெய்யக்கூடிய வழியில் இவற்றின் திறன்களும் மற்றும் ஆற்றல்களும் மேற்படுத்தப்படுதல் வேண்டும். இவற்றின் நிறுவன சார் திறன்களை அபிவிருத்தி செய்யும் நோக்கத்தை அடைந்து கொள்ளும் நிமித்தம், இந்த நிகழ்ச்சித்திட்டம் திட்டமிடப்பட்டது.

விவசாய தலைவர்களின் அறிவு, மனோபாவம் மற்றும் திறன்கள் என்பவற்றை அபிவிருத்தி செய்வதனூடாகவும் அவர்களை விவசாய அபிவிருத்தி நடபடிமுறையில் காத்திரமான பங்காளித்துவ தரப்புகளாக ஆக்குவது இந்தப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் பொதுவான குறிக்கோளாகும்.

இந்தப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் லக்கல, ஹுணுகட்டயெல, பள்ளேபொல, வாசலகோட்டே, ரத்தோட்ட, கிம்பிஸ்ஸ, யட்டவத்த, கோன்கஹவெல்ல, கலேவல, தேவஹுவ மற்றும் நாவல ஆகிய கமநல சேவை நிலையங்களை உள்ளடக்கி மாத்தளை மாவட்டத்தில் நடத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டங்களின் போது ஏறக்குறைய 1531 பெண் விவசாயத் தலைவர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர்.

**பயிற்சிக் குழு**: திரு எஸ்.எம்.ஏ. சமரகோன் - ஒருங்கிணைப்பாளர் (தலைவர்/HRID)
திரு எச்.எம்.ஜே.கே. ஹேரத் - உதவி ஒருங்கிணைப்பாளர் (RF)
திரு பி.சி.ஜே. த சில்வா - வள நபர் (சி.ஆ.உ.)
திரு சங்கீத் பிரசாத் பெர்னாந்து - வள நபர் (ஆ.உ.)

[மாகாணங்கள் மற்றும் மாகாண சபை விவசாயத் திணைக்களங்களுக்கு இடையிலான வள நபர்கள்]

## 2. ஆரோக்கியமான பரம்பரைக்கான விவசாயம் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

இரசாயப் பதார்த்தங்களின் அதிகளவான பாவனையினால் ஏற்படும் சுகாதார மற்றும் சுற்றாடல் பிரச்சினைகள் இலங்கையின் விவசாயத் துறை இன்று எதிர்நோக்குகின்ற பாரிய சவாலாகும்.

குறிப்பாக விவசாய வலங்களில் பரவியிருக்கின்ற நீண்டகாலம் நீடிக்கும் சிறுநீரக நோய் மற்றும் ஏனைய தொற்றாத நோய்கள் என்பன விவசாய சமூகத்தில் பல சுகாதார, பொருளாதார, சமூகப் பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றன.

ஆகையால், விவசாயத்திலிருந்து சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ளும் மற்றும் ஆரோக்கியமான ஒரு பரம்பரையை உருவாக்கும் வகையில் விவசாயிகளுக்கும் மற்றும் கமக்காரர் அமைப்புகளுக்கும் போதிப்பது மிகவும் காலத்திற்கேற்ற தேவையாகும். இந்தப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் அத்தகைய குறிக்கோள்களை அடைந்துகொள்ளும் பொருட்டு நடத்தப்பட்டது.

இரசாயனப் பதார்த்தங்களினால் ஏற்படும் சுகாதாரப் பிரச்சனைகளை குறைத்து, ஆரோக்கியமான ஒரு பரம்பரையை உருவாக்குவதற்கு மிக அவசியமான அறிவு, திறன்கள் மற்றும் மனோபாவங்கள் என்பவற்றை மேம்படுத்துவது இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும்.

இந்தப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் முறையே தம்பகல்ல, மாளிகாவெல்ல, வல்லவாய, தெலுள்ள, தனமல்வில, கதிர்காமம், மொனராகல், புத்தள, நெல்லியத்த, அளுத்வெவ, எத்திமலே, மடகம, பிபிலை, படல்கும்புர, செவனகல்ல, கொட்டகம, சியம்பலாண்டுவ மற்றும் நுவரெலியா, கினிகத்ஹேன, கறலியத்த, பல்லேபோவெல, மத்துரட்ட, புளுகஹபிட்டிய, ரிக்கில்லகஸ்கட, மந்தராநுவர, ராகல, வளபனே, தெரிபஹ, நில்தந்தஹேன, முன்வத்த, ஹங்குரங்கெத்த ஆகிய கமநல சேவை நிலையங்களை உள்ளடக்கி மொனராகல் மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் நடத்தப்பட்டது. இந்தப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தில் ஏறக்குறைய 2863 பெண் விவசாயத் தலைவர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர்.

**பயிற்சிக் குழு** : திரு எஸ்.எம்.ஏ. சமரகோன் - வள நபர் (தலைவர்/HRID)
திரு பி.சி.ஜே. த சில்வா - ஒருங்கிணைப்பாளர் (சி.ஆ.உ.)
திரு சங்கீத் பிரசாத் பெர்னாந்து - உதவி ஒருங்கிணைப்பாளர் (ஆ.உ.)

[மாகாணங்கள் மற்றும் மாகாண சபை விவசாயத் திணைக்களங்களுக்கு இடையிலான வள நபர்கள்]

## 3. விவசாயத் தலைவர்களை ஊக்குவிப்பதற்கான பயிற்றுவிப்பாளர் பயிற்சி தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

இது சுற்றாடல்நேய, சமூக ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு கலாசார விழுமிய முறைமை மற்றும் பொருளாதார ரீதியில் உற்பத்தித்திறன் வாய்ந்த விவசாய

செயன்முறைகள் என்பவற்றினூடாக உணவுப் பாதுகாப்புக்கு உத்தரவாதமளிப்பதன் மூலமாக வளமான ஒரு விவசாய சமூகத்தை உருவாக்கும் நோக்கில் அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்ட தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சித்திட்டமாகும்.

இந்த மூன்றாண்டுத் திட்டத்தில் விவசாயிகளை ஊக்குவிக்கும் திறமுறைத்திட்டங்கள் உள்ளடங்கியிருக்கின்றன. இந்தத் திட்டத்தின் மூலமாக, விவசாயிகளின் வாழ்க்கை நிலைகள், சமூக அங்கீகாரம் மற்றும் சுய கௌரவம் என்பவற்றை மேம்படுத்துவதற்கான பல நிகழ்ச்சித்திட்டங்களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

விவசாய செயற்பாடுகளில் காத்திரமாக ஈடுபடுகின்ற விவசாயிகளை ஊக்குவிப்பது அவசியமாகும். இந்த நிகழ்ச்சித்திட்டம் கமக்காரர் அமைப்புகளினது தலைவர்களின் அறிவு, திறன்கள் மற்றும் மனோபாவங்கள் என்பவற்றை வலுப்படுத்துவதிலும் மற்றும் விவசாய சமூகத்தை நிலையான விவசாயத்தை நோக்கி வழிகாட்டுவதிலும் இலக்குக்கொள்கின்றது.

கமக்காரர் அமைப்புகளையும் மற்றும் விவசாய சமூகத்தின் ஒற்றுமையையும் வலுப்படுத்தி, விவசாய சமூகத்தை நிலையான விவசாயத்தை நோக்கி வழிகாட்டுவதும், மற்றும் கமக்காரர் அமைப்புகளினது தலைவர்களின் அறிவு, திறன்கள் மற்றும் மனோபாவங்கள் என்பவற்றை வலுப்படுத்துவமும் இந்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும்.

இந்தப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் கலமுண, புலஸ்திகம, மெதிரிகிரிய, வெலிகந்த, பக்கமுண, ஹிங்குராகொட மற்றும் கிரித்தல ஆகிய கமநல சேவை நிலையங்களை உள்ளடக்கி பொலன்னறுவை மாவட்டத்தில் நடத்தப்பட்டது. இந்தப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தில் ஏறக்குறைய 1377 விவசாயத் தலைவர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர்.

| | | | |
|---|---|---|---|
| **பயிற்சிக் குழு** | : | திரு எஸ்.எம்.ஏ. சமரகோன் - (தலைவர்/HRID) | ஒருங்கிணைப்பாளர் |
| | | திரு எச்.எம்.ஜே.கே. ஹேரத் - ஒருங்கிணைப்பாளர் (RF) | உதவி |
| | | திருமதி நொரிகா அயோமி - | வள நபர் (ஆ.உ.) |

4. **‘பெண் விவசாயிகளை ஊக்குவிப்பதனூடாக விவசாயக் குடும்பங்களை ஊக்குவித்தல்’- 2017 வறுமை ஒழிப்பு ஆண்டு நிரலில் ஒரு நாள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்**

பெண்கள் பிள்ளைகளை வளர்ப்பதில் பாரிய ஒரு பங்கை வகிக்கின்றனர். வீட்டு மட்டத்தில் வருமானத்தை ஈட்டுவதில் பெண்களின் சிறந்த ஆற்றல்களை பயன்படுத்தச்செய்வது இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் அடிப்படை நோக்கமாகும்.

பெண்களை அவர்களின் குடும்பம் ஒரு பொருளாதார, சமூக அபிவிருத்தியை அடையும் வகையில் ஊக்குவித்தல், குடும்பத்தின் நலனுக்காக தீர்மானங்களை எடுக்கக்கூடிய வகையில் அவர்களை நிலையான தொழில்வாண்மையாளர்களாக ஆக்குதல், மற்றும் சுய நம்பிக்கையுடனும் சுய

கௌரவத்துடனும் அவர்களை ஊக்குவிப்பதற்கு தேவையான அறிவு, திறன்கள் மற்றும் மனோபாவங்கள் என்பவற்றை மேம்படுத்துதல் என்பன இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் முக்கிய குறிக்கோள்களாகும்.

இந்தப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் தம்பகல்ல, தனமல்வில, மொனராகல, புத்தள, சியம்பலாண்டுவ, அளுத்வெவ, எத்திமலே, மடகம, பிபிலை மற்றும் செவனகல ஆகிய கமநல சேவை நிலையங்களை உள்ளடக்கி மொனராகல் மாவட்டத்தில் நடத்தப்பட்டது. இந்தப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தில் ஏறக்குறைய 903 பெண் விவசாயத் தலைவர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர்.

**பயிற்சிக் குழு** : திரு எஸ்.எம்.ஏ. சமரகோன் - ஒருங்கிணைப்பாளர் (தலைவர்/HRID)
திரு எச்.எம்.ஜே.கே. ஹேரத் - உதவி ஒருங்கிணைப்பாளர் (RF)

[மாகாணங்கள் மற்றும் மாகாண சபை விவசாயத் திணைக்களங்களுக்கு இடையிலான வள நபர்கள்]

5. **சமூக ஊக்குவிப்பு தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் (பெண் விவசாயிகள் ஊக்குவிப்பு)**

விவசாயக் குடும்பம் என்பது விவசாய சமூகத்தின் மிகச்சிறிய ஒரு குடும்ப அலகாகும். விவசாயிகளை சமூக ரீதியாகவும் மற்றும் கலாசார ரீதியாகவும் ஊக்குவிப்பதனூடாக அவர்களை வளமான ஒரு விவசாய சமூகமாக மாற்றுவது அரசாங்கத்தின் அபிலாஷையாகும். அந்த விடயத்தில், பெண் விவசாயிகளை ஊக்குவிக்கும் அம்சம் மிகவும் அத்தியாவசியமான மற்றும் இன்றியமையாத ஒரு பாகமாக கருதப்படுகின்றது.

எனினும், ஏற்கெனவேயிருந்து வருகின்ற பாரம்பரிய சமூகக் கட்டமைப்பு, தலைமைத்துவத்திலுள்ள பலவீனம், பாரம்பரிய மனோபாவங்கள், மற்றும் தொடர்பாடல் இடைவெளிகள், பங்குபற்றலிலுள்ள பலவீனம், சட்டமுறையான அதிகாரத்தில் அறிவு பின்னடைவு மற்றும் முகாமைத்துவ பிரச்சினைகள் முதலிய விடயங்கள் கமக்காரர் அமைப்புகளின் இயக்கத்தில் நேரடிகயாக தாக்கம் செலுத்தின.

ஆகையால், பெண் விவசாயத் தலைவர்களை ஊக்குவிப்பது காலத்திற்கேற்ற தேவையாகும். இந்த நிகழ்ச்சித்திட்டம் அத்தகையவர்களின் நிறுவன சார் திறன்களை மேம்படுத்தும் நோக்கத்தை அடைந்து கொள்ளும் பொருட்டு திட்டமிடப்பட்டது.

பெண் விவசாயிகளை தீர்மானம் எடுப்பதில் ஊக்குவிப்பதும் மற்றும் கமக்காரர் அமைப்புகளிலிருந்து குடும்ப சமுதாயத்திற்கு ஆகக்கூடிய நன்மைகளை பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் அத்தகைய பெண் விவசாயிகளின் கமக்காரர் அமைப்புகளை வலுப்படுத்துவதும் இந்தப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான குறிக்கோளாகும்.

இந்தப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் நேகம்பஹா, ராஜாங்கன, கெக்கிராவ, இப்பளோகம, கலன்பிந்துனுவெவ, எஹறகட, எப்பாவெல, கெப்பித்திகொல்லவா, எலயாபத்துவ மற்றும் ஹொரவப்பொத்தான ஆகிய கமநல சேவை நிலையங்களை உள்ளடக்கி அனுராதபுர மாவட்டத்தில் நடத்தப்பட்டது.

இந்தப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தில் ஏறக்குறைய 1014 பெண் விவசாயத் தலைவர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர்.

**பயிற்சிக் குழு** : திரு எஸ்.எம்.ஏ. சமரகோன் - ஒருங்கிணைப்பாளர் (தலைவர்/HRID)
திரு எச்.எம்.ஜே.கே. ஹேரத் - வள நபர் (RF)
திரு பி.சி.ஜே. த சில்வா - வள நபர் (சி.ஆ.உ.)
திரு சங்கீத் பிரசாத் பெர்னாந்து - வள நபர் (ஆ.உ.)

[மாகாணங்கள் மற்றும் மாகாண சபை விவசாயத் திணைக்களங்களுக்கு இடையிலான வள நபர்கள்]

6. **பொலிதீன் பாவனை மற்றும் அழியாத உயிரியல் பிரதியீட்டுப் பொருட்களைப் பயன்படுத்தும் சாத்தியம் ஆகியன தொடர்பான வேலையரங்கு**

திண்மக் கழிவு முகாமைத்துவம் பாரிய ஒரு பூகோள பிரச்சினையாகும். இலங்கையும் அதிலிருந்து விதிவிலக்கானதல்ல. இறக்குமதி செய்யப்படும் பொலிதீன் உற்பத்திகளினதும் மற்றும் பொலிதீன் பலசரக்கு உறைகள், உணவுகளை சுற்றிக்கட்டும் பொலிதீன் தாள்கள் மற்றும் சொப்பின் உறைகள், மற்றும் ரெஜிபோம் பொருட்கள் என்பன போன்ற உற்பத்திகளினதும் தகாத பாவனையை மட்டுப்படுத்தும் வகையில், அரசாங்கம் தற்பொழுது தடையை விதித்துள்ளதால், பொலிதீன் உற்பத்திகளின் அதிகளவு பாவனையை குறைத்தல், அத்தகைய உற்பத்திகளை மீள்சுழற்சிப்படுத்தி பிரதியீட்டு உற்பத்திகளாக பயன்படுத்துவதன் சாத்தியம் என்பன பற்றி மக்களுக்கு போதித்து, மக்களை ஊக்குவிப்பது காலத்திற்கேற்ற தேவையாகும்.

பொலிதீன் பொருட்களை சுற்றாடலில் அகற்றுவதால் ஏற்படும் தாக்கம் தொடர்பில் மக்களின் உள்ளுணர்வை வளர்க்கச்செய்தல் மற்றும் நிலையான அபிவிருத்திக் குறிக்கோள்களின் அடிப்படையில் பொலிதீன்களுக்கு பதிலாக பிரயீட்டுப் பொருட்களை அறிமுகப்படுத்துதல் ஆகியன இந்த வேலையரங்கின் முக்கிய குறிக்கோள்களாகும்.

இந்த வேலையரங்கு ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகத்தில் நடத்தப்பட்டது. இதில் ஏறக்குறைய பதவியணியின் 80 ஊழியர்கள் பங்குபற்றியிருந்தனர். வெளிக்கள வள நபர்களும் இதில் பங்குபற்றியிருந்தனர்.

திருமதி நொரிக்கா அயோமி - ஒருங்கிணைப்பாளர் (ஆ.உ.)
திரு சங்கீத் பிரசாத் - உதவி ஒருங்கிணைப்பாளர் (ஆ.உ.)

## 7. விவசாய வர்த்தகப் பிரயோகம் மற்றும் சந்தைப்படுத்தல் விஸ்தரிப்பு என்பன தொடர்பான இரண்டு நாள் வேலையரங்கு

இந்த நிகழ்ச்சித்திட்டம் யாழ்ப்பாண பல்கலைக்கழக விவசாய வர்த்தக முகாமைத்துவ பீடத்தின் இறுதி ஆண்டு பட்டதாரி மாணவர்களுக்கு விவசாய வர்த்தகத்தின் பிரயோகம் மற்றும் சந்தை விஸ்தரிப்பு ஆகியன தொடர்பான கோட்பாட்டு மற்றும் செயன்முறை ரீதியான விளக்கத்தை அளிக்கும் முகமாக திட்டமிடப்பட்டது.

விவசாய வர்த்தகம் மற்றும் சந்தைப்படுத்தல் விஸ்தரிப்புகள் என்பன தொடர்பான கோட்பாட்டு மற்றும் செயன்முறை ரீதியான அறிவைப் பெற்றுக் கொடுப்பதும் மற்றும் தேசிய ஒருங்கிணைப்பையும் நல்லிணக்கத்தையும் ஊக்குவிப்பதும் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் முக்கிய குறிக்கோளாக அமைந்தது.

இந்த நிகழ்ச்சித்திட்டம் ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகத்தில் நடத்தப்பட்டது. யாழ்ப்பாண பல்கலைக்கழக விவசாய வர்த்தக முகாமைத்துவ பீடத்தின் 74 பட்டதாரி மாணவர்கள் இந்த நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றியிருந்தனர்.

**பயிற்சிக் குழு** : திரு டப்ளியூ.எச்.ஏ. சாந்த – (ஒருங்கிணைப்பாளர்/சி.ஆ.உ.)
திரு சிதாத் பண்டார - (சி.ஆ.உ.)
திரு பி.சி.ஜே. த சில்வா - (சி.ஆ.உ.)
திரு துமிந்த ப்ரியதர்ஷன - (தலைவர் / MFPA)
திரு எஸ்.எம்.ஏ. சமரகோன் - (தலைவர் / HRID)
திரு சிந்தக்க ஜயசூரிய - (ஆ.உ.)

## 8. சாதகமான மனோபாவங்கள் விருத்தி பற்றிய வேலையரங்கு

ஊழியர்களின் உற்பத்தித்திறன் அளவுகளையும் மற்றும் வினைத்திறனையும் அதிகரிப்பதற்கான நிறுவனசார் குறிக்கோளை அடைந்துகொள்ளும் நிமித்தம், சாதகமான சிந்தனை விருத்தி பற்றி இந்த நிறுவகத்தின் நிறைவேற்று தரத்திலுள்ள அதிகாரிகளுக்கான ஒரு வேலையரங்கு நடத்தப்பட்டது.

ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகத்தின் நிறைவேற்றுப் பதவியிலுள்ள சகல உத்தியோகத்தர்களும் இந்த வேலையரங்கில் பங்குபற்றினர்.

திரு எஸ்.எம்.ஏ. சமரகோன் - உதவி ஒருங்கிணைப்பாளர் -(Hd/HRID)
திருமதி நொரிக்கா அயோமி - உதவி ஒரங்கிணைப்பாளர் -(ஆ.உ./ HRID)
திரு சங்கீத் பிரசாத் - உதவி ஒருங்கிணைப்பாளர் - (ஆ.உ./HRID)

## 9. இந்த நிறுவகத்தில் புதிதாக ஆட்சேர்த்துக்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிப் பதவியணியினருக்கான தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டம்

ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவிற்கு புதிதாக ஆட்சேர்த்துக்கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு இந்த நிறுவகத்தின் கடமைப் பணிகள், ஒரு சமூகப் பொருளாதார ஆராய்ச்சியாளரின் பணிகள், ஆராய்ச்சி முறையியல்கள் மற்றும் ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவியின் தொழில் விபரம் என்பன தொடர்பில் ஒரு ஆரம்பப் பயிற்சியை வழங்கும் முகமாக இந்த வேலையரங்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த நிகழ்ச்சித்திட்டம் ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகத்தில் நடத்தப்பட்டது. ஏறக்குறைய 12 ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் இதில் கலந்துகொண்டனர்.

திரு பி.சி.ஜே. த சில்வா - உதவி ஒருங்கிணைப்பாளர் - (சி.ஆ.உ./ HRID)

## ஏனைய செயற்பாடுகள்

### ஆராய்ச்சிப் பத்திரங்கள் சமர்ப்பணம்

1. 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10 ஆம் திகதி முதல் 11 ஆம் திகதி வரை ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக வன மற்றும் சுற்றாடல் விஞ்ஞானப் பிரிவில் உணவுப் பயிர் உற்பத்தி முறைமைகளின் சமூகப் பொருளாதார மற்றும் சுற்றாடல் நிலைபெறுதகுதன்மை பற்றி நடத்தப்பட்ட இருபத்து இரண்டாவது சர்வதேச வனங்கள் வளர்ப்பு மற்றும் சுற்றாடல் மாநாடு - கரும்பு எதிர் சோள உற்பத்தி 2017: மாநாட்டில் பி.ஆர். வீரக்கொடி ஒரு ஆராய்ச்சிப் பத்திரத்தை சமர்ப்பித்தார்.
2. 'காலநிலை மாற்றத்திற்கு இசைவடைதல் மற்றும் அனர்த்த ஆபத்து' [குறைத்தல்] தொடர்பில் ஆசிய பசுபிக் ஒன்றிணைந்த கிராமிய அபிவிருத்திற்கான (CIRDAP) நிலையம் மற்றும் ஆசிய பிராந்திய உற்பத்தி அமைப்பு (APO), மற்றும் இலங்கை கமத்தொழில் அமைச்சு ஆகியவற்றினால் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்ட சர்வதேச வேலையரங்கில் ஜி.ஜி. த எல்.டப்ளியூ. சமரசிங்க ஒரு ஆராய்ச்சி ஆவணத்தை சமர்ப்பித்தார்.

3. யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தில் ஏற்பாடு செய்யப்பட்டு 2017 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 1 ஆம் திகதி முதல் 2 ஆம் திகதி வரை நடத்தப்பட்ட 'உலர் வலய விவசாயம்' பற்றிய 3-வது சர்வதேச மாநாட்டில், இலங்கையில் அரிசி உற்பத்தி முறைமைகளில் பூச்சிநாசிகளின் பாவனையை நிர்ணயிக்கும் காரணிகள்' என்ற தலைப்பில் ஒரு ஆராய்ச்சிப் பத்திரத்தை எம்.ரீ. பத்மாஜனி சமர்ப்பித்தார்.

4. காலநிலைமாற்றத்திற்கு இசைாவக்கமடைதலும் அபிவிருத்தியும் என்ற தலைப்பில் எதிர்கால ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டத்திற்கான ஆராய்ச்சி சார்ந்த செயற்பாடுகளின் தற்போதைய நிலை - ஓர் வழிகாட்டல் என்ற தலைப்பில் கொழும்பிலுள்ள இலங்கை மன்றக் கல்லூரியில் 2017 யூன் மாதம் 11 ஆம் திகதி நடைபெற்ற *வேலையரங்கில்* எச்.ஜே.சி. ஜயசூரிய விவசாய சமுதாய தழுவலில் காலநிலை மாற்றங்கள் தொடர்பான ஒரு ஆராய்ச்சிப் பத்திரத்தை சமர்ப்பித்தார்.

5. கொழும்பிலுள்ள BMICH மண்டபத்தில் 2017 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 16 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை நடத்தப்பட்ட இலங்கையின் காலநிலை நேர்த்தி பற்றிய முன்னெடுப்புகள் தொடர்பான அனுபவங்களை பகிர்ந்துகொள்ளும் கூட்டத்தில் எச்.ஜே.சி. ஜயசூரிய இலங்கையில் மழை நீரை பயன்படுத்தி விவசாயத்தில் ஈடுபடும் விவசாயிகளின் இசைவடையும் ஆற்றலை மேம்படுத்துவது தொடர்பான ஒரு ஆராய்ச்சிப் பத்திரத்தை சமர்ப்பித்தார்.

6. இலங்கையில் [ஸ்ரீ லங்கா] காலநிலை மாற்றத்திற்கு இசைவடைவதிலான எதிர்கால ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்குரிய வழிகாட்டல் அபிவிருத்தி செயற்பணிக்கான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளின் தற்போதைய நிலையும் எதிர்காலத் தேவைகளும்

எனும் மாநாட்டில் எச்.ஜே.சி. ஜயசூரிய மற்றும் டப்ளியூ.எச்.ஏ. சாந்த ஆகியோர் காலநிலை மாற்றத்தின் பாதிப்புத்தன்மையும் விவசாய சமுதாயத்திலும் இசைவாக்கத்திலும் அதன் தாக்கமும் என்ற ஒரு ஆராய்ச்சிப் பத்திரத்தை சமர்ப்பித்தனர்.

7. யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு 2017 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 1 ஆம் திகதி முதல் 2 ஆம் திகதி வரை நடத்தப்பட்ட உலர் வலய விவசாயம் தொடர்பான 3-வது சர்வதேச மாநாட்டில், இலங்கையின் அனுராதபுர மாவட்டத்திலுள்ள நெற் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளும் குடும்பங்களின் வருமான பல்லினத்துவத்தின் மாதிரிகளும் மற்றும் நிர்ணயக் காரணிகளும் என்ற தலைப்பில் எம். ரம்பொடகெதர ஒரு ஆராய்ச்சிப் பத்திரத்தை சமர்ப்பித்தார்.

8. 2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 19 ஆம் திகதி ருஹுணு பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தில் நடத்தப்பட்ட விவசாயமும் சுற்றாடலும் (ISAE) 2017 பற்றிய சர்வதேச மாநாட்டு நடவடிக்கைகளில் 'புந்தள ராம்ஷார் ஸ்தல ஓர் ஆய்வு': 'ஈரநில மீள்தாபிப்பும் முகாமைத்துவமும்' என்ற தலைப்பில் டீ.ரீ.பி.எஸ். தர்மவர்த்தன ஒரு ஆராய்ச்சிப் பத்திரத்தை சமர்ப்பித்தார்.

9. 2017 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 06 ஆம் திகதி நடத்தப்பட்ட இலங்கை உயர் விஞ்ஞான மன்றத்தின் (SLAS) 70-வது வருடாந்த அமர்வில், ஆர்.எம்.டீ.எச். ரத்நாயக்க *Pogostemon heyneanus Benth* வித்தியாசமான தாவரப் பாகங்களின் பௌதீக மற்றும் இரசாயன விளைவு தொடர்பான வித்தியாசமான இடைவெளி, பசளை சார்ந்த சிகிச்சைகள் என்பவற்றின் தாக்கம் பற்றிய சுருக்கமான ஒரு ஆராய்ச்சிப் பத்திரத்தை வெளியிட்டு சமர்ப்பித்தார்.

## வெளியீடுகள் (சஞ்சிகைகள், கட்டுரைகள் முதலியன)

1. நச்சுப் பதார்த்தங்கள் நீங்கிய விவசாயத்திற்கான கொள்கை சார்ந்த தலையீடுகள் (கமநலம்), தொகுதி 33, 2017 ஏப்ரல்-யூன்) மற்றும் இயற்கை விவசாயத்தினூடாக நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைதல் (கமநலம், தொகுதி 33, 2017 ஏப்ரல்-யூன்): திருமதி எம்.பீ.எப். ரிபானா.

2. கைவிடப்பட்ட நெற் காணிகளின் அபிவிருத்தியும் முகாமைத்துவமும் (2017 ஒற்றோபர் 19, கொவிஜனதா): எஸ். ஏபாசிங்க, ஐ.பி.பி.எம். விஜேசிங்க, ஆர்.டீ. விஜேசிங்க, டீ.எம்.ஏ.சி. திஸாநாயக்க, டீ.ரீ.பி.எஸ். தர்மவர்த்தன, திருமதி ஆர்.எம்.டீ.எச். ரத்நாயக்க, திருமதி எம்.பீ.எப். ரிபானா.

3. மொனராகல் மாவட்ட மாவட்டத்தில் கடன் பெற்ற சோள விவசாயிகளின் தற்போதைய கடன் நிலை (கொவிஜனதா, 2017 யூலை-திசம்பர், தொகுதி 19): டீ.ரீ.பி.எஸ். தர்மவர்த்தன

### கூட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் வேலையரங்குகள் என்பவற்றுக்கான சேவைகள்

1. டப்ளியூ.எச்.ஏ. சாந்த மற்றும் எம்.ஏ.சி.எஸ். பண்டார ஆகியோர் உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கு பற்றிய தேசிய திறைமுறைத்திட்ட மீளாய்வுக்கான ஆராய்ச்சிக் குழுவின் அங்கத்தவர்களாக பணியாற்றினார்கள்: உலக உணவு நிகழ்ச்சித்திட்டம், தெற்காசிய பிராந்திய கொள்கை ஆராய்ச்சி நிறுவகம், HARTI நிறுவகம், குடிசன மதிப்பீட்டுப் புள்ளிவிபரங்கள் திணைக்களம், மற்றும் மருத்துவ ஆராய்ச்சி நிறுவகம் என்பவற்றினால் கூட்டாக மேற்கொள்ளப்பட்ட 'பட்டினி ஒழிப்பு' முன்னெடுப்பு.

2. டப்ளியூ.எச்.ஏ. சாந்த மற்றும் எம்.ஏ.சி.எஸ். பண்டார ஆகியோர் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயல்நோக்கில் வரும் இலங்கையின் மகாவலி ஆற்றுப்படுக்கைப் பிரதேசங்களில் வாழுகின்ற ஓரங்கட்டப்பட்ட விவசாய மக்கள் மீது காலநிலை மாற்றம் பற்றிய தாக்கங்களை அடையாளப்படுத்துவது தொடர்பான கருத்திட்டத்தின் செயல் திட்டப் பயிற்சிப் பாகத்திற்கான நியதிக் குறிப்புகளை தயாரிக்கும் குழுவின் அங்கத்தவர்களாக பணியாற்றினார்கள்.

3. டப்ளியூ.எச்.ஏ. சாந்த மற்றும் எம்.ஏ.சி.எஸ். பண்டார ஆகியோர் விவசாய ஆராய்ச்சித் துறை தொடர்பில், நிதி இராஜாங்க அமைச்சர் கௌரவ எரான் விக்ரமரட்ன அவர்களுடன் இடம்பெற்ற வரவுசெலவுத்திட்டக் கலந்துரையாடல் கூட்டத்தில் பங்குபற்றி, 'இலங்கையின் உலர் வலய கிராமிய குளங்கள் புனர்நிர்மாணத்திற்கான முந்துரிமை' என்ற தலைப்பிலான ஒரு தொழில்நுட்ப அறிக்கையை சமர்ப்பித்தனர்.

4. ஜி.ஜி. த எல்.டப்ளியூ. சமரசிங்க 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஸ்ரீ லங்கா வோட்டர் பார்ட்னெர்சிப் அமைப்புக்கான ஒரு நெறிப்படுத்தல் குழு அங்கத்தவராக பணியாற்றினார்.

5. ஜி.ஜி. த எல்.டப்ளியூ. சமரசிங்க, இலங்கை 'அர்த்தசர்ய மன்றத்தினால்' செயற்படுத்தப்பட்ட விவசாய நீர் மாசடைவு தொடர்பில் நடத்தப்பட்ட தெற்காசிய பிராந்திய சுற்றாடல் ஆற்றல் கட்டியெழுப்பலுக்கான அறிமுகக் கூட்டத்தில், ஒரு வளநபராக பணியாற்றினார்.

6. எம்.ரீ. பத்மஜானி ஆசிய பிராந்திய உற்பத்தி அமைப்பு, இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் மற்றும் வயம்ப பல்கலைக்கழகம் ஆகியவற்றினால் ஏற்பாடு செய்யப்பட்ட உயிரியல் பசளைகள் மற்றும் உயிரியல் பூச்சிநாசினிகள் பற்றிய தேசிய மாநாட்டிற்கு பங்களித்தார்.

7. எம்.ஏ.சி.எஸ். பண்டார மகாவலி அபிவிருத்தி அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட இலங்கையின் காலநிலை நேர்த்தி முன்னெடுப்புகள் தொடர்பான அனுபவங்களை பகிர்ந்துகொள்ளும் கூட்டத்திற்கு பங்களித்தார்.

8. டப்ளியூ.எச்.ஏ. சாந்த மற்றும் எம்.ஏ.சி.எஸ். பண்டார ஆகியோர் அதிக உணவு பாதுகாப்பு இடர்கள் காணப்படுகின்ற பிரதேசங்களில் இலங்கையில் தற்பொழுது நிலவுகின்ற வரண்ட காலநிலையிலிருந்து (சேவை ஒப்பந்தம் 2/2017) வருகின்ற வாழ்வாதாரத்திற்கான தாக்கங்கள் மற்றும் ஆபத்துக்கள் பற்றிய கூட்டிணைந்த அவசர மதிப்பீடு தொடர்பான ஒரு குறுகிய ஆய்வை மேற்கொண்டனர்.

9. கொழும்பு பல்கலைக்கழக நிதி முகாமைத்துவ பீடத்தின் முகாமைத்துவ மற்றும் ஒழுங்கமைப்பு கற்கைகள் பிரிவின் பட்டதாரி மாணவர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டு, 2017 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 08 ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரை நடத்தப்பட்ட 'இலங்கையின் விவசாய நிலைபெறுதகுதன்மை பற்றிய கருத்தரங்கை' டப்ளியூ.எச்.ஏ. சாந்த, எம்.ஏ.சி.எஸ். பண்டார, ஜி.ஜி. த எல்.டப்ளியூ. சமரசிங்க மற்றும் எச்.ஜே.சி. ஜயசூரிய ஆகியோர் வெற்றிகரமாக ஒருங்கிணைத்தனர்.

10. எச்.ஜே.சி. ஜயசூரிய இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கைக்கான சபையின் தேசிய வளங்கள் முகாமைத்துவம், நிலைபெறுதகு விவசாயம் மற்றும் காலநிலை மாற்றம் என்பன பற்றிய தேசிய குழுவின் ஒரு குழு அங்கத்தவராக பணியாற்றினார்.

11. எச்.ஜே.சி. ஜயசூரிய இலங்கையில் காலநிலை மாற்றத்திற்கு இசைவாகுவதிலான எதிர்கால ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய ஒரு வழிகாட்டி அபிவிருத்தி செயற்பணிக்கான தேசிய விவசாய ஆராய்ச்சி முறைமையின் (NARS) நிபுணத்துவர்கள் குழுவுக்கான ஒரு பிரதிநிதியாக பணியாற்றினார்.

### பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கான பங்களிப்புகள்

1. டப்ளியூ.எச்.ஏ. சாந்த, எம்.ஏ.சி.எஸ். பண்டார, மற்றும் எச்.ஜே.சி. ஜயசூரிய ஆகியோர், 2017 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 08 ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரை யாழ்ப்பாண பல்கலைக்கழக விவசாய பீடத்தின் மாணவர்களுக்காக நடத்தப்பட்ட விவசாய வர்த்தக எண்ணக்கருக்களினதும் மற்றும் சந்தைப்படுத்தல் விரிவாக்கத்தினதும் பிரயோகம் பற்றிய வேலையரங்கில் ஏற்பாட்டுக் குழு உறுப்பினர்களாக பணியாற்றினர்.

2. எம்.ரீ. பத்மஜானி HARTI நிறுவகத்தால் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களுக்காக நடத்தப்பட்ட விவசாய வர்த்தக எண்ணக்கருக்களினதும் மற்றும் சந்தைப்படுத்தல் விரிவாக்கத்தினதும் பிரயோகம் பற்றிய வேலையரங்கில் 'இலங்கையின் விவசாய வர்த்தகத் துறை அபிவிருத்தி' என்ற தலைப்பில் ஒரு விளக்க உரையை நிகழ்த்தினார்.

## புள்ளிவிபரங்கள் மற்றும் தரவுகள் படிமுறைப்படுத்தும் பிரிவு

விவசாயத் துறை தொடர்பான தகவல்களை சேகரித்தல், இற்றைப்படுத்தல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் பரம்பல் செய்தல் ஆகியவற்றுக்கான ஒரு நிலையமாக மாறுதல் என்ற HARTI நிறுவகத்தின் ஒரு ஆரம்ப அடிப்படை குறிக்கோளுக்கு இணங்க, மேற்குறித்த இலக்கை அடையும் பொருட்டு, ஒருமுகப்பட்ட ஒரு முயற்சியை ஏற்படுத்தும் நோக்கில் புள்ளிவிபரங்கள் மற்றும் தரவுகள் படிமுறைப்படுத்தும் இந்தப் பிரிவு (SDPD) தாபிக்கப்பட்டது. இந்த நிறுவகத்தினால் மேற்கொள்ளப்பட்ட சமூகப் பொருளாதார ஆய்வுகளில் சேகரிக்கப்படும் தரவுகளை களஞ்சியப்படுத்துதல் மற்றும் பகுப்பாய்வு செய்தல் ஆகியவற்றுக்கு புறம்பாக, இந்தப் பிரிவின் கீழ்காணும் குறிக்கோள்கள் நிறுவனம் சார்ந்த இலக்குகளை அடைவதில் மிகவும் உதவியாக அமையும்.

- விவசாய தகவல் முகாமைத்துவத்தில் சிறந்த ஒரு தேசிய நிலையமாக விளங்குதல்.
- புள்ளிவிபரங்களினதும் மற்றும் தகவல் தொழில்நுட்பங்களினதும் பிரயோகத்தினூடாக ஆராய்ச்சியினதும் மற்றும் பயிற்சி சார்ந்த செயற்பாடுகளினதும் தரத்தை மேம்படுத்துவதற்கான முக்கிய ஒரு பிரிவாக விளங்குதல்.
- தற்போதைய தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சாதனங்களையும் மற்றும் நுட்பங்களையும் பயன்படுத்துவதன் மூலமாக சிறந்த விதத்தில், தானியக்க தகவல் படிமுறைப்படுத்தும் முறைமைகளை மேம்படுத்துதல்.

இந்தப் பிரிவில் இரண்டு அலகுகள் உள்ளடங்குகின்றன. தரவுகள் அபிவிருத்தி மற்றும் தரவுகள் படிமுறைப்படுத்தல் ஆகியன அந்த அலகுகளாகும். பின்னர், தேவையான கணனி மற்றும் கணனி வலையமைப்பு உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பான சேவைகளை வழங்கும் பொருட்டு, இந்தப் பிரிவில், ஒரு கணனி தொழில்நுட்ப அலகு தாபிக்கப்பட்டது.

### தரவுகள் அபிவிருத்திப் பிரிவு

களஞ்சியம், சேகரிப்பு முகவராண்மை மற்றும் பணியக சேவை என்பன போன்ற சம்பந்தப்பட்ட கள ரீதியான தொழிற்பாடுகள் மற்றும் பொருத்தமான கமநல அபிவிருத்தி அம்சங்கள் என்பன தொடர்பான தகவல்களை இலகுவாக அணுகிப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு, ஒரு விவசாய தரவுத்தள வங்கி தாபிக்கப்பட்டது. இது விஷேடமாக அரசாங்க ஊழியர்களுக்கும், கொள்கையாக்கும் தரப்புகளுக்கும், ஆராய்ச்சியாளர்களுக்கும் மற்றும் சம்பந்தப்பட்ட ஏனைய தரப்புகளுக்கும் தகவல்களை வழங்கக்கூடிய மற்றும் பயனுள்ள ஒரு விதத்தில் தகவல் பரம்பலை ஒருங்கிணைக்கக்கூடிய முழுமையான ஒரு புள்ளிவிபரவியல் தகவல் மூலமாக தொழிற்படும் வகையில் திட்டமிட்டு தாபிக்கப்பட்டுள்ளது.

அபிவிருத்தி சார்ந்த சுட்டிகள் மற்றும் ஆய்வு சார்ந்த செயற்பாடுகள் எனும் இரண்டு வகையான தரவுகள் இந்தத் தரவுத்தள வங்கியில் உள்ளடங்குகின்றன. அபிவிருத்தி சார்ந்த சுட்டிகள் என்பது பல வகையான பண்பம்சங்கள் தொடர்பில் அரச முகவராண்மைகளிலிருந்து சேகரிக்கப்பட்ட

இரண்டாம்நிலைப் புள்ளிவிபரங்களாகும். இந்த நிறுவகத்தினால் மேற்கொள்ளப்பட்ட கள ரீதியான ஆய்வுகளினூடாக சேகரிக்கப்பட்ட ஆரம்பத் தரவுகள் ஆய்வு சார்ந்த தரவுப்பதிவுக் காப்பங்களில் உள்ளடங்குகின்றன. இந்தத் தரவுத்தள வங்கி தகவல்களை மீளப்பெறல் மற்றும் தகவல்களைப் படிமுறைப்படுத்தல் ஆகியவற்றில் உதவும் பொருட்டு, உசாவுகை, பயனர் மற்றும் விநியோகத் தரப்புக் கல்வி, கணனிப் பாவனை தொடர்பான பயிற்சி மற்றும் விழிப்பூட்டும் சேவை முதலிய சேவைகளையும் வழங்குகின்றது. இந்தப் பிரிவு தாபிக்கப்பட்ட நேரத்தில் விவசாயம், மீன்பிடி, காடுகள் வளர்ப்பு மற்றும் கைத்தொழில்கள் என்பன முந்துரிமைப் பிரிவுகளாக காணப்பட்டாலும், விவசாயத் துறை பற்றிய தகவல்களுக்கு முந்துரிமை அளிக்கப்பட்டது. கமநல அபிவிருத்தியின் பல அம்சங்களை முழுமையாக உள்ளடக்கி குறித்த பணி நிறைவு செய்யப்பட்டது. விவசாயக் குடும்பங்களின் வாழ்வாதார நிலை பற்றிய மதிப்பீட்டை விவசாயத் துறையின் கீழ் மேற்கொள்ள முடியும். ஆதலால், மாதாந்த, பருவகால மற்றும் வருடாந்த அடிப்படையில், மாவட்ட ரீதியாக சேகரிக்கப்படும் தகவல் அளவு அதிகரித்து வருகின்றது. ஏறக்குறைய 1800 சுட்டிகள் சனத்தொகை, தொழில்வாய்ப்பு, நிலப் பாவனை, நிலக் குடியேற்றங்கள், பசளை, உற்பத்தி ஆகுசெலவு மற்றும் சந்தைப்படுத்தல் போன்ற பரந்த வகுதிகளில் அடங்குகின்றன.

நவதானியங்கள், மரக்கறி வகைகள், பழ வர்க்கங்கள், கிழங்கு வகைகள், கால்நடைகள், கைத்தொழில் பயிர்கள், வாசனைப் பொருட்கள், கொட்டை வகைகள், எண்ணெய் விதைகள், பெருந்தோட்டப் பயிர்கள் மற்றும் ஏனைய பயிர்கள் போன்ற 11 பிரதான பயிர் வகுதிகளின் கீழ் குறிப்பீடுசெய்யப்பட்ட பயிர்கள் தொடர்பான தரவுகள் கிடைக்கக்கூடியதாகவுள்ளன. 1950 ஆம் ஆண்டுகள் முதல் ஆள் ரீதியாகவும் மற்றும் கணனி ரீதியாகவும் களஞ்சியப்படுத்தப்பட்ட அண்ணளவாக இரண்டரை மில்லியன் தரவுப் பதிவுகள் தற்பொழுது, இந்த நிலையத்தில் காணப்படுகின்றன. அதற்கிணங்க, இந்த HARTI நிறுவகம் இலங்கை மத்திய வங்கி, சுங்கத் திணைக்களம், குடிசன மதிப்பீட்டுப் புள்ளிவிபரங்கள் திணைக்களம், விவசாயத் திணைக்களம் மற்றும் HARTI நிறுவகத்தின் சந்தைப்படுத்தல் மற்றும் உணவுக் கொள்கைப் பிரிவு என்பன போன்ற பல வித்தியாசமான தகவல்மூலங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட மாவட்ட வாரியான ஒரு தரவுத்தளத்தை இந்தத் தகவல் நிலையம் பேணி வருகின்றது. தரவுத்தளங்களிலுள்ள தகவல்களை மதிப்பிடும் பொருட்டு, ஒரு தானியக்க முறைமை குறித்த பிரிவில் செயற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், அதிகளவில் தேவைப்படுத்தப்படும் ஒரு சில தகவல்கள் இணையத்தளத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன. உள்ளகப் பயனர் தரப்புகள் மற்றும் வெளியகப் பயனர் தரப்புகள் SDP பிரிவை நேரடியாக தொடர்புகொண்டு, விவசாயத் தவலல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்குறித்த தகவல் மூலங்களை ஒன்றிணைத்து, தரவு சேகரிப்பு மேற்கொள்ளப்பட்டது. அந்தந்த அமைப்புகளினால் தகவல்கள் இணைத்தளங்களில் பிரசுரிக்கப்படுகின்றன. மேலும், அத்தகைய அமைப்புகளினால் பாடநூல்களும் பிரசுரிக்கப்படுகின்றன. நுகர்வுக்கான உணவுப் பொருட்களின் விலை தொடர்பான தகவல்கள் HARTI நிறுவகத்தின் சந்தைப்படுத்தல் மற்றும் உணவுக் கொள்கைப் பிரிவிலிருந்து சேகரிக்கப்பட்டன. விவசாயத் தரவுத்தள வங்கியை பேணிப் பராமரிக்கும் நிமித்தம், LAN இல் இயங்கும் கணனி அடிப்படையிலான தகவல் முறைமை, சிறந்த செயலாற்றுகையை முன்னிட்டு மேலும் செயற்படுத்தப்பட்டது.

தேர்ந்தெடுக்கப்பட்ட பயிர்களின் அளவு மற்றும் உற்பத்தி போன்ற விவசாயத் தகவல்கள் எமது நிறுவகத்தின் இணையத்தளத்தில் மேலேற்றம் செய்யப்பட்டன.

கணனிமயப்படுத்தப்பட்ட தரவுத்தளம் குறித்த ஆண்டு காலப்பகுதியில், பின்வரும் சுட்டிகளை பிரயோகித்து இற்றைப்படுத்தப்பட்டது.

- நெற் பயிர் பற்றிய புள்ளிவிபரங்கள் - உற்பத்தி மற்றும் அளவு
- மரக்கறி வகைகள், பழ வர்க்கங்கள் மற்றும் ஏனைய களப் பயிர்கள் என்பவற்றின் அளவு மற்றும் உற்பத்தி
- நெற் பயிர்ச்செய்கை சார்ந்த செயன்முறைகள்
- நெல் மற்றும் ஏனைய களப் பயிர்களின் உற்பத்தி ஆகுசெலவு
- மொத்த விற்பனை விலைகள்
- சில்லறை விற்பனை விலைகள்

குறித்த தரவுத்தளங்கள் மேற்குறித்த சுட்டிகளுக்கு சொந்தமான 64,343 பதிவுகளைக் கொண்டு இற்றைப்படுத்தப்பட்டன.

### வேண்டுகோள்களின் பேரில் தரவுகளை வழங்குதல்

உள்ளக மற்றும் வெளியக பாவைனயாளர் தரப்புகளிடமிருந்து விவசாயத் தகவல்களின் நிமித்தம் மொத்தம் 151 வேண்டுகோள்கள் கிடைத்தன. உள்ளகத் தரப்புகளின் 108 வேண்டுகோள்களும் மற்றும் வெளியகத் தரப்பகளின் 43 வேண்டுகோள்களும் இவற்றில் அடங்குகின்றன.

### தரவுகளை சேகரிப்பதற்காக அணுகப்பட்ட நூல்கள்

- இலங்கை மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கை - 2015/2016
- இலங்கை மத்திய வங்கியின் சமூகப் பொருளாதாரப் புள்ளிவிபரங்கள் - 2015/2016
- குடிசன மதிப்பீட்டுப் புள்ளிவிபரங்கள் திணைக்களத்தின் புள்ளிவிபரங்கள் தொகுப்பு - 2016
- நெல் பயிர்களினதும் மற்றும் ஏனைய வயல் பயிர்களினதும் பயிர்ச் செய்கை ஆகுசெலவு தொடர்பான பதிவு - 2012 சிறுபோகம்/2015 சிறுபோகம்
- சுங்கத் திணைக்களத்தின் வெளிநாட்டு வர்த்தகப் புள்ளிவிபர அறிக்கை - 2012/2013

## தரவுகளைப் படிமுறைப்படுத்தும் பிரிவு

SDPD இன் இரண்டாம் மற்றும் மூன்றாம் இலக்குகளை அடைந்து கொள்ளும் பொருட்டு, தரவுகளைப் படிமுறைப்படுத்தும் இந்தப் பிரிவு தாபிக்கப்பட்டது. இது கீழ்காணும் பாரிய தொழிற்பாடுகளை மேற்கொள்ளும் முகமாக திட்டமிடப்பட்டு உருவாக்கப்பட்ட ஒரு தொழில்நுட்பப் பிரிவாகும்.

### 1. கணனிமயப்படுத்தப்பட்ட விவசாயத் தரவுத் தளத்தை இற்றைப்படுத்தல் மற்றும் பேணிப் பராமரித்தல்

தரவுகள் அபிவிருத்திப் பிரிவிடமிருந்து தரவுகள் இயக்கப்பட்டவுடன், தரவுத்தளத்தை வினைத்திறன் வாய்ந்ததாக இற்றைப்படுத்தி பேணும் பொருட்டு, தரவுகளைப் படிமுறைப்படுத்தும் பிரிவினால் தொழில்நுட்ப உதவி வழங்கப்படுகின்றது. தரவுத் தொடர்களில் நிலவுகின்ற வித்தியாசம் மற்றும் தொகுப்பு என்பவற்றின் இடைவெளிகளின் அடிப்படையில், இந்த இரண்டு பிரிவுகளுக்கும் இடையில் ஒரு சில செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. தரவுகளை மீளப்பெற்றுக் கொள்ளக் கூடிய வசதிகள் எமது நிறுவகத்தின் LAN மற்றும் இணையத்தளம் ஆகியவற்றில் இயங்குகின்ற கணனிமயப்படுத்தப்பட்ட மென்பாக முறைமையினூடாக கூட்டிணைக்கப்பட்டுள்ளன.

### 2. HARTI நிறுவகத்தினால் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வுகளிலிருந்து சேகரிக்கப்பட்ட மாதிரி ஆய்வுத் தரவுகளின் பகுப்பாய்வு

இது குறித்த பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பிரதான செயற்பாடுகளில் ஒரு செயற்பாடாகும். குறித்த பணி பகுப்பாய்வுக்கு முன்னர், தரவுத்தளத்திலுள்ள தரவுகளை குறியிடுதல், உறுதிப்படுத்தல், செல்லுபடியாக்கல், தரவுத்தளத்தை திட்டமிட்டு வடிவமைத்தல், தரவுகளை உள்ளீர்த்தல் மற்றும் விடுத்தல் போன்ற அம்சங்களில் சம்பந்தப்படுகின்றது. நிகழ்ச்சித்திட்டமிடல் தொடர்பான நுட்பங்களைக் கொண்டு, புள்ளிவிபரவியல் பகுப்பாய்வு முறையியல்களையும் மற்றும் புள்ளிவிபரவியல் மென்பாகப் பிரயோகங்களையும் பயன்படுத்தி, பகுப்பாய்வு மற்றும் வகுத்தமைப்பு ஆகியன சார்ந்த சகல வகையான பணிகளும் நிறைவேற்றப்படுகின்றன.

குறித்த ஆண்டு காலப்பகுதியில், தரவுகள் பகுப்பாய்வின் நிமித்தம், பின்வரும் இரண்டு ஆய்வுகள் இந்தப் பிரிவுக்கு கிடைத்தன.

| | |
|---|---|
| R511 | மனிதனின் செயற்பாடுகளினால் குளப் படுக்கைகளில் அதிகளவு வண்டல்மண் படிதல் மற்றும் விவசாயத்தின் மீது அதன் தாக்கம் பற்றிய ஆய்வு |
| R518 | விவசாயப் பட்டதாரிகளையும் மற்றும் விவசாய டிப்ளோமாதாரிகளையும் இலங்கையின் விவசாயத் துறையினுள் உள்ளீர்த்தல்: தற்போதைய நிலையும் மற்றும் மட்டுப்பாடுகளும் |

## கணனித் தொழில்நுட்பப் பிரிவு

கணனிகள், கணனி வலையமைப்புகள் மற்றும் சம்பந்தப்பட்ட துணைப்பாகங்கள் மற்றும் கணனி முறைமைகளின் இயக்கத்திற்கு தேவையான மென்பாக சாதனங்கள் என்பன தொடர்பான தொழில்நுட்ப உதவிகளை வழங்கும் நிமித்தம் இந்தக் கணனித் தொழில்நுட்பப் பிரிவு தாபிக்கப்பட்டுள்ளது. சகல வகையான பழுதுபார்ப்புகளையும் மற்றும் பிரச்சினைகள் தீர்த்துவைத்தல் விடயங்களையும் மேற்கொள்வதற்கென ஒரு வேலைப்பட்டறை வசதியும் தாபிக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரிவு கொள்வனவு செய்யப்பட வேண்டிய IT துணைப்பாகங்களுக்கான சிபாரிசுகளை செய்து, கொள்வனவுக்கு உதவும் பொறுப்புப் பணியையும் நிறைவேற்றுகின்றது. இணையத்தள அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு செயற்பாடுகளும் இந்தப் பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன. எமது நிறுவகத்தினுள் கணனி வலையமைப்புகளை செயற்படுத்தும் பணியும் இந்தப் பிரிவினூடாக நிறைவேற்றப்படுகின்றது.

குறித்த ஆண்டு காலப்பகுதியில், இந்தப் பிரிவு கீழ்காணும் தொழில்நுட்ப பணிகளில் காத்திரமாக ஈடுபட்டது.

- தொழில்நுட்பத் தகவுதிறன்களைத் தயாரித்தல்
- தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்கள்
- மென்பாகங்களின் நிறுவுகை மற்றும் பிரச்சினைகள் தீர்த்தல்
- வலையமைப்பு செயற்படுத்துகைகள்
- கணனி மற்றும் இணையத்தள பராமரிப்பு தொடர்பான கொள்கைகளைத் தயாரித்தல்

## நூலகம்

HARTI நிறுவகத்தின் ஆராய்ச்சிப் பதவியணியினரினதும், அக்கறையுடைய ஏனைய தரப்புகளினதும் மற்றும் நிறுவனங்களினதும் நன்மை கருதி, விவசாயத் துறையுடன் சம்பந்தமான தகவல்களை சேகரித்தல், தொகுத்தல், மீளப்பெற்றுக்கொள்ளல் மற்றும் அத்தகைய தகவல்களை பரம்பல்செய்தல் முதலியன இந்த நூலகத்தின் முக்கிய குறிக்கோள்களாகும். குறித்த ஆண்டு காலப்பகுதியில், ஊழியர்கள் இந்த நூலகத்திலிருந்து 662 புத்தகங்களையும், 18 குறிப்பு நூல்களையும், 105 சஞ்சிகைகளையும் குறிப்பின் நிமித்தம் இலவசமாகப் பெற்று பயனடைந்தனர். குறித்த ஆண்டு காலப்பகுதியில் இந்த நூலகத்திற்கு 306 நபர்கள் வருகை தந்திருந்தனர்.

### நூல்கள், சஞ்சிகைகள் மற்றும் அறிக்கைகள் என்பவற்றைப் பெற்றுக்கொள்ளல்

குறித்த ஆண்டு காலப்பகுதியில், 124 நூல்கள் இந்த நூலகத்திலுள்ள நூல் தொகுதிகளில் சேர்க்கப்பட்டன. கொள்வனவு செய்யப்பட்ட 16 நூல்களும் மற்றும் இலவசமாகவும் மற்றும் வெளியீடுகள் பரிமாற்றல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழும் கிடைத்த 108 நூல்களும் இந்த நூல்களில் அடங்குகின்றன. இலவச அல்லது பரிமாற்றல் அடிப்படையில், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களிலிருந்தும் பல எண்ணிக்கையான வார இதழ்கள், சஞ்சிகைகள், செய்திக் கட்டுரைகள், வருடாந்த அறிக்கைகள் என்பன இந்த நூலகத்திற்கு கிடைத்தன. இந்த நூலகம் குறித்த ஆண்டு காலப்பகுதியில் எட்டு வெளிநாட்டு சஞ்சிகை தலைப்புகளுக்கும் (96 வெளியீடுகள் அடங்கிய) 06 உள்நாட்டு சஞ்சிகை தலைப்புகளுக்கும் சந்தாவாக பங்களிப்பு செய்தது.

### நூலக சேவைகள்

இலக்கிய ஆராய்ச்சி, குறிப்பு சார்ந்த சேவைகள், நடைமுறையிலுள்ள விழிப்புணர்வு சேவைகள் மற்றும் புகைப்படப்பிரதியெடுக்கும் சேவைகள் போன்ற தகவல் மற்றும் ஆவணமாக்கல் சேவைகளின் நிமித்தம், அத்தகைய ஆராய்ச்சி ஊழியர்களுக்கும் மற்றும் ஏனைய வெளித்தரப்பு பயனர்களுக்கும் வேண்டுகள் விடுக்கப்பட்டன.

இன்டர்நெட் வசதி அடிப்படையிலான பிரவேசம், இந்த நூலகத்தில் அமைக்கப்பட்டிருக்கின்ற WiFi வசதியைக் கொண்டு, ஆராய்ச்சிப் பதவியணினருக்கு மேலும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. வித்தியாசமான பல விடயங்கள் தொடர்பான செய்திக் கட்டுரைகளைத் தொகுத்தல் மற்றும் துரித குறிப்புக்கான கட்டுரைகளை சூசிகையிடுதல் ஆகிய கரும பணிகள் ஆராய்ச்சிப் பதவியணியினரினதும் மற்றும் வெளித்தரப்பு பயனர்களினதும் பாவனையின் நிமித்தம் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

### நூலகங்களுக்கு இடையிலான கூட்டுறவு (ILC)

நூலகம் என்பது விவசாய நூலகங்கள் தகவல் வலையமைப்பின் (AGRINET) உறுப்புரிமை பெற்ற ஒரு நூலகமாகும். எமது இ.வி.ஆ.கொ.ச. நூலகம்

முக்கியமான ஒரு அங்கமாக தொழிற்படுகின்றது. இந்த நூலகம் தொடர்ந்தும் AGRINET SDCP (உள்ளடக்கப் பக்கங்கள் தரவுத்தளத்தின் தேர்ந்தெடுக்கக்கூடிய செய்திப் பரம்பல்) திட்டத்தில் தொடர்ந்தும் பங்கெடுத்து வருகின்றது.

கீழ்காணும் தரவுத்தளங்களுக்கான நூலகத் தொகுப்புகளிலிருந்து வழங்கிய நூல் விளக்கக் குறிப்புகள் AGRINET வலையமைப்பினால் பேணப்பட்டன.

1. தேசிய விவசாய நூல்கள் பட்டியல் (NAB)

2. சுதேசிய அறிவு (விவசாயத்திற்கான குறிப்புகள் அடங்கிய) நூல்கள் பட்டியல்

2016 ஆம் ஆண்டிற்கான தேசிய ஒன்றிய நூல்கள் பட்டியலை இற்றைப்படுத்தும் நிமித்தம், தேசிய நூலகம் மற்றும் சேவைகள் சபைக்கு, நூலகத் தரவுத்தளத்திலிருந்து நூல் விளக்கக் குறிப்புகள் வழங்கப்பட்டன.

### நிறுவகத்தின் வெளியீடுகளை டிஜிட்டல்மயப்படுத்துதல்

HARTI வெளியீடுகள் தேசிய விஞ்ஞான மன்றத்தினது தேசிய டிஜிட்டல்மயப்படுத்தல் கருத்திட்டத்தின் கீழ் வெற்றிகரமாக டிஜிட்டல்மயப்படுத்தப்பட்டுள்ளன. இந்த வெளியீடுகளை http://harti.nsf.ac.lk/ எனும் இணையங்களிலுள்ள எமது இணையத்தள வசதிகளிலும் அணுகிப் பெற்றுக்கொள்ளலாம்.

நிறுவகம் சார்ந்த ஒரு இ-களஞ்சிய வசதியை தாபிப்பதும் மற்றும் நிறுவகத்தின் வெளியீடுகளுக்கு துரிதமான வினைத்திறன் வாய்ந்த ஒரு ஒன்லைன் வசதியை அளிப்பதும் இந்தக் கருத்திட்டத்தின் குறிக்கோளாகும்.

| **HARTI வெளியீடுகள்** | **தொகுப்புப் பெயர்** | **தொகுப்புக் கணணோட்டங்கள்** |
|---|---|---|
| | வருடாந்த அறிக்கைகள் | 400 |
| | வருடாந்த அறிக்கைகள் (தமிழ்) | 307 |
| | சட்டங்கள் | 342 |
| சஞ்சிகைகள் | விவசாய கற்கைகள் பற்றிய இலங்கை சங்சிகை | 433 |
| | கமநலங்கள் பற்றிய ஆய்வு | 326 |
| | விவசாய மக்கள் | [illegible]3 |
| | விவசாய மக்கள் | 631 |
| ஆராய்ச்சி சார்ந்த அறிக்கைகள் | சுட்டிகள் (ஆங்கிலம்) | 485 |
| | சுட்டிகள் (சிங்களம்) | 1073 |

| நாடு | கண்ணோட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|
| ஜப்பான் | 768 |
| இலங்கை | 2504 |
| ஐக்கிய அமெரிக்கா | 720 |
| ஜேர்மனி | 138 |
| ரஷ்யா | 654 |
| பிரான்ஸ் | 66 |
| தென் கொரியா | 50 |
| Côte d'Ivoire | 8 |
| EU | 61 |
| அவுஸ்திரேலியா | 10 |
| இந்தியா | 8 |
| இத்தாலி | 6 |
| ஐக்கிய இராச்சியம் | 7 |
| பிலிபைன்ஸ் | 5 |
| சீனா | 17 |
| AP | 4 |
| ஐக்கிய அரபு நாடுகள் | 6 |

## வெளியீட்டுப் பிரிவு

காலத்திற்கேற்ற விதத்தில், வெளியீடுகளின் தரத்தை உறுதிசெய்யும் அதே வேளையில், செய்திக் கட்டுரை, செய்திகள், கைந்நூல்கள், துண்டுப் பிரசுரங்கள் போன்ற ஆராய்ச்சி சார்ந்த அறிக்கைகள், சமயோசித அறிக்கைகள், சஞ்சிகைகள் மற்றும் பொதுத் தகவல்கள் அடங்கிய நூல்கள் என்பவற்றை மூன்று மொழிகளிலும் அச்சிட்டு வெளியிடும் பொறுப்புப் பணி இந்த நிறுவகத்தின் வெளியீட்டுப் பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

2017 ஆம் ஆண்டு காலப் பகுதியில், ஆராய்ச்சி சார்ந்த பன்னிரெண்டு அறிக்கைகள் சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வெளியிடப்பட்டன. அத்தகைய வெளியீடுகள் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

ஆங்கில மொழியில் பிரசுரிக்கப்பட்ட ஆராய்ச்சி சார்ந்த அறிக்கைகள்:

1. மகாவலிப் பிரதேச விவசாயம் சாராத (NPE) தொழிலின் தற்போதைய நிலையும் மற்றும் எதிர்வுகூறல்களும்
2. இலங்கையின் கறுவா கைத்தொழிலின் தற்போதைய நிலையும் மற்றும் எதிர்வுகூறல்களும்
3. இலங்கையின் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களின் வித்தியாசமான அரிசி இனங்களுக்கான நுகர்வு மாதிரியும் மற்றும் நுகர்வோர் விருப்பமும்
4. பனைக் கைத்தொழில்: வட கிழக்கு பகுதி பனைக் கைத்தொழிலில் அக்கறையுடைய தரப்புகளின் சமூகப் பொருளாதார நிலையும் மற்றும் பிரச்சினைகளும்
5. நெல் சந்தைப்படுத்தலில் அரசாங்கத்தின் தலையீடு: நெல் கொள்வனவிலும் மற்றும் களஞ்சியத்திற்கு பிற்பட்டகால முகாமைத்துவத்திலும் காணப்படும் பிரச்சினை விடயங்கள்
6. LDO காணிகளுக்கு ப்fரீ ஹோல்டிங் உரித்துக்கள் வழங்கப்படுவது அவசியமா: இலங்கையின் உலர் வலயம் பற்றிய நிலை சார்ந்த ஓர் பகுப்பாய்வு
7. திரவ மற்றும் தூள் பால் மாவுக்கான நுகர்வோர் கொள்வனவு நடத்தையும் மற்றும் விருப்பமும்
8. அனுராதபுர மாவட்டத்தின் நெல் விவசாய குடும்பங்களின் வருமான பல்லினத்துவம்

**சிங்கள மொழியில் பிரசுரிக்கப்பட்ட ஆராய்ச்சி சார்ந்த அறிக்கைகள்:**

1. தாழ்நாட்டு ஈர வலய முன்னோடிக் கருத்திட்டம் (வயல் காணி வளங்களுக்கு இடையில் நிலவுகின்ற அளவு வித்தியாசத்தை நிர்ணயித்தல்)

2. நெல் பயிர்ச்செய்கைக்கான சாத்தியங்களுக்கு ஏற்ப தாழ்நாட்டு ஈர வலய வயல் காணிகளை வகைப்படுத்துதல்

3. நுவரெலியா மற்றும் பதுளை ஆகிய மாவட்டங்களின் சிறு மற்றும் நடுத்தர அளவான பூந்தாவர உற்பத்திக் கைத்தொழிலின் தற்போதைய போக்குகள் மற்றும் பிரச்சினைகள்

4. விவசாயத் திணைக்களத்தின் விவசாய தொழில்முயற்சி அபிவிருத்திக் கருத்திட்டம் பற்றிய ஆய்வு

**இது தவிர, பின்வரும் வெளியீடுகளும் குறித்த ஆண்டு காலப்பகுதியில் வெளியிடப்பட்டன.**

**பணி ஆவணங்கள்**

1. மண் மற்றும் நீர் பாதுகாப்பு நடவடிக்கைகளை பின்பற்றல்: மேல் நீரேந்துபரப்பு முகாமைத்துவ கருத்திட்ட (UWMP) விடயம்

2. இலங்கையில் நடமாடும் சந்தைத் தகவல் முறைமை பற்றிய ஓர் மதிப்பீடு

3. மாவு ஆறா கருத்திட்டத்தின் சமூகப் பொருளாதார தாக்க மதிப்பீடு

**வேலையரங்கு நடபடிமுறைகள்**

1. விவசாய நிலைபெறுதகுதன்மையை மதிப்பிடுதல்

**இதழ்கள்**

1. இலங்கை விவசாய கற்கைகள், 2017, தொகுதி 18, இலக்கம் 1
2. கமநலம் (தமிழ்) 2017, ஏப்ரல் - யூன், தொகுதி 33, வெளியீடு 1-2

**சஞ்சிகைகள்**

1. கொவிஜனத்த, 2016 ஒற்றோபர் - திசம்பர், தொகுதி 18, இலக்கம் 2
2. கொவிஜனத்த, 2017 சனவரி - யூன், தொகுதி 19, இலக்கம் 1-2
3. கொவிஜனத்த, 2017 ஒற்றோபர், தொகுதி 19, இலக்கம் 2
4. கொவிஜனத்த, 2017 யூலை - திசம்பர், தொகுதி 19, இலக்கம் 3

**செய்திக் கட்டுரைகள்**

1. செய்திக் கட்டுரை, 2016 தொகுதி 40, இலக்கம் 2
2. செய்திக்கட்டுரை, 2017 தொகுதி 41, இலக்கம்1-2
3. செய்திக் கட்டுரை (தமிழ்), 2017 தொகுதி 1, இலக்கம்1-2

4. "*புவத் ஹஷுஅன*" 2016 தொகுதி 40, இலக்கம் 2
5. "*புவத் ஹஷுஅன*", 2017 தொகுதி 41, இலக்கம் 1-2

**ஏனைய வெளியீடுகள்:**

1. ஹெக்டர் கொப்பேகடுவ *நிஹத விப்லவய* (சிங்களம்)

**ஏனைய பங்களிப்புகள்:**

1. ஜனாதிபதி செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட 'வச விஷ நெத்தி ரட்டக்' எனும் கண்காட்சி நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றியமை.

2. கமத்தொழில் அமைச்சும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமும் இணைந்து ஏற்பாடு செய்த 'சுப்ஹரத்தி' எனும் நிகழ்ச்சித்திட்டத் தொடர் ஒருங்கிணைக்கப்பட்டமை.

3. தேசிய செய்திப்பத்திரிகைகளில் கட்டுரைகள் பிரசுரிக்கப்பட்டமை.

4. அமைச்சர் மறைந்த அமரர் ஹெக்டர் கொப்பேகடுவ அவர்கள் பற்றிய ஒரு குறும் வீடியோ ஒலிநாடா தயாரிக்கப்பட்டமை.

**2017 திசம்பர் 31 ஆம் திகதிற்கான பதவியணி பற்றிய விபரம்**

| | 2016.12.31 ஆம் திகதிற்கான பதவிகள் | குறித்த ஆண்டு காலப்பகுதி சேவை முடிவுறுத்துகை, பதவி விலகல் | நியமனங்கள் | 2017.12.31 ஆம் திகதிற்கான பதவிகள் |
|---|---|---|---|---|
| பணிப்பாளர் | 1 | 1 | 1 | 1 |
| மேலதிகப் பணிப்பாளர் | 1 | 1 | 1 | 1 |
| பகுதித் தலைவர்கள் | 6 | 1 | - | 5 |
| ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் | 23 | 2 | 13 | 34 |
| நிருவாக உத்தியோகத்தர்கள் | 7 | - | 1 | 8 |
| நூலகத்தின் சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் | 2 | - | - | 2 |
| தரவுகள் அபிவிருத்தி வங்கி உத்தியோகத்தர்கள் | 0 | - | - | 0 |
| கணனிப் பிரிவு உத்தியோகத்தர்கள் | 2 | - | - | 1 |
| வெளியீட்டுப் பிரிவு உத்தியோகத்தர்கள் | 3 | 1 | 3 | 6 |
| புள்ளிவிபர உத்தியோகத்தர்கள் | 22 | 1 | - | 20 |
| தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் | 5 | 4 | 1 | 5 |
| எழுதுநர், செயலக மற்றும் இணையான தர உத்தியோகத்தர்கள் | 43 | 4 | - | 39 |
| இயக்கச்செயற்பாட்டு மற்றும் இணைந்த தர ஊழியர்கள் | 44 | 4 | - | 40 |
| **மொத்தம்** | **159** | **16** | **20** | **162** |

## பதவியணி அபிவிருத்தி

2017 ஆம் ஆண்டில் பதவியணி அபிவிருத்திற்காக, 2.1 மில்லியன் ரூபா நிதியை முதலீடு செய்யப்பட்டது. பதவிநிலை சாராத 38 ஊழியர்களுக்கு உள்நாட்டுப் பயிற்சிகள் வழங்கப்பட்டன. பதவிநிலை சார்ந்த பதினொன்கு ஊழியர்களுக்கு வெளிநாட்டு பயிற்சி வாய்ப்புகள் அளிக்கப்பட்டன.

**கீழ்காணும் ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் பட்டப்பின்படிப்பு கற்கை நெறிகளை பின்பற்றினர்.**

திரு இ.ஏ.சி. ப்ரியங்கர - சர்வதேச வர்த்தகம் பற்றிய கலாநிதிப் பட்டம், சீனாவின் ஹாவுஸ்ஹொங் பல்கலைக்கழக விஞ்ஞான தொழில்நுட்ப பீடம். 2015 ஆகஸ்ட் 31 ஆம் திகதி முதல் 2018 ஆகஸ்ட் 30 ஆம் திகதி வரை

திரு என்.பி.ஜி. சமந்த - சர்வதேச வர்த்தகம் பற்றிய கலாநிதிப் பட்டம், சீனாவின் ஹாவுஸ்ஹொங் பல்கலைக்கழக விஞ்ஞான தொழில்நுட்ப பீடம். 2015 ஆகஸ்ட் 31 ஆம் திகதி முதல் 2018 ஆகஸ்ட் 30 ஆம் திகதி வரை

திருமதி ஜே.ஏ.யூ.பி. ஜயசிங்க - பட்டப்பின்படிப்பு கற்கை (முதுமானிப் பட்டம், அவுஸ்திரேலியா. 2017 சனவரி 12 ஆம் திகதி முதல் 2018 திசம்பர் 31 ஆம் திகதி வரை

## சர்வதேச பயிற்சியில் பங்குபற்றியோர் பற்றிய விபரம்

### நிகழ்ச்சித்திட்டங்கள்/கருத்தரங்ககள்/வேலையரங்குகள்/மாநாடுகள்/கூட்டங்கள் முதலியன

01. 2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 23 ஆம் திகதி முதல் மார்ச் மாதம் 17 ஆம் திகதி வரை இந்தியாவில் நடத்தப்பட்ட 'தொழில்வாண்மை மற்றும் திறன்கள் அபிவிருத்தி விடயத்திலான பயிற்றுவிப்பாளர்கள் பயிற்சி' பற்றிய ஒரு பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தில் சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர் திரு எச்.ஜே.சி. ஜயசூரிய கலந்துகொண்டார்.

02. 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14 ஆம் திகதி முதல் 23 ஆம் திகதி வரை, இந்தியாவின் ஹைதராபாத் நகரத்தில் நடத்தப்பட்ட 'கிராமிய அபிவிருத்திற்கான மனித வளங்கள்' எனும் தலைப்பிலான ஒரு CIRDAP மற்றும் NIRDPR கூட்டொத்துழைப்பு சர்வதேச பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தில்' சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர் திரு பி.சி.ஜே. சில்வா கலந்துகொண்டார்.

03. 2017 ஆம் ஆண்டு மே மாதம் 27 ஆம் திகதி முதல் மே மாதம் 30 ஆம் திகதி வரை பங்காளதேஷத்தில் நடத்தப்பட்ட 'CIRDAP இன் 32-வது தொழில்நுட்ப குழுக் கூட்டத்தில் (தொ.கு. 32) ஆராய்ச்சி உத்தியோகத்தர் திரு ஆர்.எல்.என். ஜயதிஸ்ஸ கலந்துகொண்டார்.

04. 2017 ஆம் ஆண்டு யூன் மாதம் 7 ஆம் திகதி முதல் 29 ஆம் திகதி வரை சீனாவில் நடத்தப்பட்ட 'அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கான விவசாய மரபுரிமை ஸ்தலங்களை பாதுகாத்தல் மற்றும் முகாமைத்துவம்' என்ற தலைப்பிலான ஒரு கருத்தரங்கில் சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர் திரு பி.சி.ஜே. த சில்வா, உதவிக் கணக்காளர் திருமதி ஐ.பி. நயனக்கார, சிரேஷட தகவல் மற்றும் வெளியீட்டு உத்தியோகத்தர் திரு எஸ்.ஏ.சி.யூ. சேனாநாயக்க, கணக்கு உத்தியோகத்தர் திருமதி டப்ளியூ.டீ.ஜி. பெரேரா, புள்ளிவிபரவியல் உத்தியோகத்தர் திரு எச்.எம்.எஸ். ஜயரத்ன, புள்ளிவிபரவியல் உத்தியோகத்தர் திரு ஜே.சி.கே.பீ. லயனல், நூலகர் திருமதி எச்.எம்.ரீ.ஜி.எல். ஹேரத் ஆகியோர் கலந்துகொண்டனர்.

05. 2017 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆம் திகதி முதல் யூலை மாதம் 28 ஆம் திகதி வரை சீனாவில் நடத்தப்பட்ட 'அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கான உயிரியல் சுற்றாடல் விவசாய முகாமைத்துவம்' பற்றிய ஒரு கருத்தரங்கில் சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர் திரு எம்.ஏ.சி.எஸ். பண்டார கலந்துகொண்டார்.

06. 2017 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 04 ஆம் திகதி முதல் செப்டம்பர் மாதம் 28 ஆம் திகதி வரை சீனாவில் நடத்தப்பட்ட 'அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கான விவசாய கழிவுகளின் சுத்திகரிப்பும் பயன்பாடும் தொடர்பான உயிரியல் எரிவாயு தொழில்நுட்பம்' பற்றிய ஒரு பயிற்சிப் பாடநெறியில் சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர் திரு டப்ளியூ.எச்.டீ. பிரியதர்ஷன கலந்துகொண்டார்.

07. 2017 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரை இந்துனீசியாவில் நடத்தப்பட்ட 'உற்பத்தித்திறன் மேம்பாட்டு முன்னெடுப்புகளினூடாக கிராமிய மக்களை மறுமலர்ச்சியாக்கல்' பற்றிய ஒரு வேலையரங்கில் ஆராய்ச்சி உத்தியோகத்தர் திருமதி ஆர்.எம்.எம்.எச்.கே. ரம்பொடகெதர கலந்துகொண்டார்.

08. 2017 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 11 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி நாஜி பிஜி நகரத்தில் நடத்தப்பட்ட 'விவசாய உணவு உற்பத்தித் தரப்புகளுக்கான குளிர் விநியோக சங்கிலி மற்றும் பொருட்கள் சேவைகள் விநியோக முகாமைத்துவம்' பற்றிய வேலையரங்கில் சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர் திரு டப்ளியூ.எச்.டீ. பிரியதர்ஷன கலந்துகொண்டார்.

**உள்நாட்டுப் பயிற்சிகளில் பங்குபற்றிய பதவிநிலை உத்தியோகத்தர்கள் பற்றிய விபரம்**

01. 2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 28 ஆம் திகதி கொழும்பு 01 எனும் இடத்தில் அமைந்துள்ள க்ரான்ட் ஒரியன்டெல் ஹோட்டலில் நடத்தப்பட்ட 'தேயிலை, வாசனைத்திரவியங்கள் மற்றும் பெறுமதி சேர்க்கப்பட்ட பழங்கள் மற்றும் மரக்கறிகள் ஏற்றுமதி' பற்றிய வேலையரங்கில் ஆராய்ச்சி உத்தியோகத்தர் திருமதி பி.ஏ.ஜே. சம்பிக்கா கலந்துகொண்டார்.

02. 2017 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 14 ஆம் திகதி கொழும்பு 07 எனும் முகவரியிலுள்ள CIDA/ICTAD நிறுவகத்தில் நடத்தப்பட்ட 'ஒழுக்காற்று நடைமுறை' பற்றிய ஒரு வேலையரங்கில் உதவிப் பதிவாளர் (நிருவாகம்) திரு ஜே.ஜே.எஸ். ஜயமான்ன கலந்துகொண்டார்.

03. 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15 ஆம் திகதி, கொழும்பு 3 எனும் முகவரியில் அமைந்துள்ள கொழும்பு பல்கலைக்கழகத்தின் சமூகவியல் பிரிவில் நடத்தப்பட்ட 'தரமான தரவுகள் பகுப்பாய்வு' எனும் தலைப்பிலான வேலையரங்கில் ஆராய்ச்சி உத்தியோகத்தர் திரு டீ.எம்.ஏ.சி. திஸாநாயக்க கலந்துகொண்டார்.

04. 2017 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27 ஆம் திகதி NASTEC நிலையத்தில் நடத்தப்பட்ட 'வெற்றிக்கான திறவுகோல் - விஞ்ஞானிகளுக்கான பணி வாழ்க்கை சமநிலை' என்ற தலைப்பிலான வேலையரங்கில் டீ.எம்.ஏ.சி. திஸாநாயக்க (ஆ.உ.), திருமதி டீ.ரீ.பி.எஸ். தர்மவர்த்தன (ஆ.உ.), திருமதி ஆர்.எம்.டீ.எச். ரத்நாயக்க (ஆ.உ.), திருமதி எம்.பீ.எப். ரிபானா (ஆ.உ.) ஆகியோர் கலந்துகொண்டனர்.

05. 2017 ஆம் ஆண்டு மே மாதம் உயர் கற்கைகளுக்கான தேசிய நிலையத்தில் (NCAS) நடத்தப்பட்ட 'புள்ளிவிபரவியல் பகுப்பாய்வுக்கான SPSS தொடர்பான அறிமுகம் பற்றிய சான்றிதழ் பாடநெறியில்' திருமதி டீ.ரீ. பி.எஸ். தர்மவர்த்தன (ஆ.உ.) கலந்துகொண்டார்.

விவசாயத் துறை நவீனப்படுத்தல் கருத்திட்டத்தினால் (உலக வங்கி நிதியிட்ட) ஏற்பாடு செய்யப்பட்டு 2017 ஆம் ஆண்டு யூலை மாதம் 24 ஆம் திகதி நடத்தப்பட்ட 'கொள்கை ஆயம்' எனும் மாநாட்டில் திருமதி எம்.பீ.எப். ரிபானா (ஆ.உ.) கலந்துகொண்டார்.

06. 2017 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி உணவு விஞ்ஞான தொழில்நுட்ப நிறுவகத்தில் நடத்தப்பட்ட 'ஏற்றுமதி உணவு வர்த்தகம், இடைவெளிகள், சாத்தியங்கள் மற்றும் முன்னேற்றம்' பற்றிய நிகழ்ச்சித்திட்டத்தில் திருமதி ரோஷினி ரம்புக்வெல்ல (சி.ஆ.உ.), திருமதி ருவினி விதானாத்திரன (சி.ஆ.உ.) ஆகியோர் கலந்துகொண்டனர்.

07. ஆகஸ்ட் மாதம் 10 ஆம் மற்றும் 11 ஆம் திகதிகளில் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவகத்தில் நடத்தப்பட்ட 'இலங்கையின் உலர் வலய விவசாயிகளுக்கான காலநில மாற்றங்கள் சார்ந்த ஆபத்துக்களை

இனங்காணுதல் பற்றிய மாநாட்டில்' திரு டப்ளியூ.எச்.ஏ. சாந்த (சி.ஆ.உ.), திருமதி கீதானி சமரசிங்க (சி.ஆ.உ.), ஆகியோர் கலந்துகொண்டனர்.

08. 2017 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24 ஆம் திகதி தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப குழு வளாகத்தில் நடத்தப்பட்ட 'வெற்றிக்கான திறவுகோல் - விஞ்ஞானிகளுக்கான பணி வாழ்க்கை சமநிலை' என்ற தலைப்பிலான வேலையரங்கில் திரு ஏ.எம்.ஏ.சி. திஸாநாயக்க (அ.உ.), திருமதி எம்.பீ.எப். ரிபானா (ஆ.உ.), திருமதி ஆர்.எம்.டீ.எச். ரத்நாயக்க (ஆ.உ.), திருமதி டீ.ரீ.பி.எஸ். தர்மவர்த்தன (ஆ.உ.), திருமதி எம்.டீ.டீ. பெரேரா (ஆ.உ.), திருமதி யூ.டீ.ஆர். உதாரி (ஆ.உ.), திருமதி ஏ.கே.ஏ. திஸாநாயக்க (ஆ.உ.), திரு எஸ்.பி. பெர்னாந்து (ஆ.உ.), திருமதி ஜி.வி.என். அயோமி (ஆ.உ.), திரு ஐ.வி. குருப்பு (ஆ.உ.), திருமதி ஏ.ஆர்.டப்ளியூ.எம்.எம்.டீ. அமரகோன் (ஆ.உ.), திருமதி ஆர்.எச்.ஏ.டப்ளியூ. ருவினி (ஆ.உ.), ஆகியோர் கலந்துகொண்டனர்.

09. 2017 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 26 ஆம் திகதி மகளிர்களுக்கான தேசிய அலுவலக வளாகத்தில் நடத்தப்பட்ட 'சுற்றாடலைப் பாதுகாப்பதற்காக பெண்களை ஊக்குவித்தல்' எனும் தலைப்பிலான வேலையரங்கில் திருமதி டீ.ரீ.பி.எஸ். தர்மவர்த்தன (ஆ.உ.) கலந்துகொண்டார்.

| 145 - 4055 | 80,000 | 79,999 | 1 | 4,000 | 4,000 | 6,855 | 2,855 | 4,000 |
| 145 - 4053 | 80,000 | 79,999 | 1 | 4,000 | 4,000 | 6,855 | 2,855 | 4,000 |
| | **2,246,920** | **2,246,913** | **7** | **1,066,000** | **1,066,000** | **3,062,760** | **1,996,760** | **1,066,000** |

21.3.3 மீள்விலைமதிப்பீட்டு ஒதுக்க கணக்கு மீதான சீராக்கல் (மீள்விலைமதிப்பீடு 2014)
நிறுவகத்தின் நிதியில் கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்கள்

| வாகன இலக்கம் | ஆகுசெலவு | தேய்மான கணக்கு | மீள்விலை மதிப்பீட்டுத் திகதியிலுள்ள WDC | மீள்விலை மதிப்பீட்டுத் தொகை | ஆண்டு ரீதியான தேய்மானம் | மீள்விலை மதிப்பீட்டு ஒதுக்கம் | உண்மையான தேய்மானம் |
|---|---|---|---|---|---|---|---|
| WP TR - 9402 | 133,500.00 | 133,500.00 | - | 65,000.00 | 13,000 | 13,000 | |
| WP TR - 9408 | 133,500.00 | 133,500.00 | - | 65,000.00 | 13,000 | 13,000 | |
| WP PB - 7320 | 6,450,000.00 | 6,450,000.00 | - | 4,500,000.00 | 900,000 | 900,000 | |
| WP PC - 1628 | 5,990,000.00 | 3,594,000.00 | 2,396,000.00 | 6,500,000.00 | 1,300,000 | 820,800 | 479,200.00 |
| WP PC - 1639 | 5,990,000.00 | 3,594,000.00 | 2,396,000.00 | 6,500,000.00 | 1,300,000 | 820,800 | 479,200.00 |
| WP WU - 1794 | 165,460.00 | 99,276.00 | 66,184.00 | 160,000.00 | 32,000 | 18,763 | 13,236.80 |
| | | | 4,858,184.00 | 17,790,000.00 | 3,558,000.00 | 2,586,363.20 | 971,636.80 |

මගේ අංකය
எனது இல.
My No. ஏஜீஎல்/டீ/எச்ஏஆர்/01/17/16

මබේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date 2018 செப்தெம்பர் 25

தலைவர்,
ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்.

**ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான 1971 இன் 38 ஆம் இலக்க நிதிஅதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1972 இன் 05 ஆம் இலக்க ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன அதிகாரச்சட்டத்தின் 24 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.



අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව | இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை | No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94 11 2 88 70 28 - 34 | +94 11 2 88 72 23 | ag@auditorgeneral.gov.lk | www.auditorgeneral.gov.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்டு வரும் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான ரூபா 577,716 மொத்த தொகையான கடன்பட்டோர் மீதிகளை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கை பலவீனமான நிலையில் காணப்பட்டது.

(ஆ) 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக காணப்படடுவரும் ரூபா 338,053 மொத்த தொகையான கடன்கொடுத்தோர் மீதிகளைத் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நிறுவனத்தினால் வெளித்தரப்பினர்களுக்கு வாடகை அடிப்படையில் வழங்கப்பட்ட உணவுச்சாலைக்காக மின்சாரம் வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்காக 2017 ஒக்தோபர் நவம்பர், திசெம்பர் மாதங்களுக்காக கிடைக்க வேண்டிய மின்சாரப்பட்டியல்களின் பெறுமதி ரூபா 34,015 அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை.

2009 நவம்பர் 13 ஆந் திகதிய 438 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் அரசாங்க நிறுவனங்களில் குவித்து வைக்கப்பட்டுள்ள விற்றுத்தீர்க்கப்பட வேண்டிய பொருட்களை விரைவாக விற்றுத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட

வேண்டிய போதிலும் நிதிக்கூற்றுக்களில் இருப்பின் கீழ் காட்டப்பட்டிருந்த ரூபா 197,496 தொகையான பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியாத பாவனைப் பொருட்கள் சம்பந்தமாக சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிறுவனத்தின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 2,732,399 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 10,547,296 ஆக இருந்ததனால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவு ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 13,279,695 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. அரசாங்க மானியம் ரூபா 19,380,000 ஆல் குறைவடைந்தமை நிதி விளைவுகளின் வீழ்ச்சி தொடர்பாக பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளுக்கான நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்த போது 2013 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரை பற்றாக்குறையும் 2016 ஆம் ஆண்டின் போது மிகையும் மீளாய்வாண்டின் போது மீண்டும் பற்றாக்குறையும் ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நிதி விளைவுகளுக்கு ஊழியர் பணிக்கொடை மற்றும் நடைமுறையற்ற சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வை மீண்டும் செம்மையாக்கிய போது 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 106,586,316 தொகையான பங்களிப்பு தொடர்ச்சியாக அதிகரித்து 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 162,043,804 ஆகி இருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது ரூபா 158,927,932 வரை குறைவடைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 செயற்திறனும் மீளாய்வும்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவனத்தினால் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் ரூபா 10.33 மில்லியன் செலவு செய்து ஆரம்பித்திருந்த 14 ஆராய்ச்சி செயற்திட்டங்களில் 05

செயற்திட்டங்கள் 2016 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு முன்னரும் 09 செயற்திட்டங்கள் 2017 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு முன்னரும் பூர்த்திசெய்யப்பட வேண்டியிருந்தது. எவ்வாறாயினும் அந்த ஆராய்ச்சி செயற்திட்டங்கள் 2017 யூன் 14 ஆந் திகதி வரை பூர்த்திசெய்யப்படாமையின் காரணமாக ஆராய்ச்சிகளிலிருந்து கிடைத்த பெறுபேறுகளை உரிய துறைகளுக்கு வழங்க முடியாதிருந்தது.

(ஆ) செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நிறுவனத்தினால் மீளாய்வாணடின் போது 07 விடயங்களின் கீழ் 136 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக ரூபா 12.05 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் மீளாய்வாண்டின் போது திட்டமிடப்பட்ட 03 விடயங்களின் கீழ் 55 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மாத்திரம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

(இ) தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் விவசாயிகளை வலுப்படுத்தும் 17 ஒரு நாள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை 16 மாவட்டங்களில் நடாத்தி 850 உத்தியோகத்தர்களை பயிற்றுவிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தும் அந்த நிகழ்ச்சித் திட்டங்களுக்குப் பதிலாக 14 நிகழ்ச்சித்திட்டங்களை பொலன்னறுவை மாவட்டத்தில் மாத்திரம் நடாத்தி 1323 விவசாய அமைப்புக்களின் தலைவர்கள் பயிற்றுவிக்கப்பட்டிருந்தனர்.

(ஈ) நிறுவனத்தினால் சந்தைப்படுத்தல் விநியோகம் தொடர்பான ஒரு நாள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தி 60 அபிவிருத்தி உத்தியோகத்தர்களை பயிற்றுவிப்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்தும் அந்நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்படாதிருந்ததுடன் அதற்காக விவசாய வணிக முகாமைத்துவம் மற்றும் விவசாய சந்தைப்படுத்தல் தொடர்பான ஒரு பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்தி யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தில் 88 மாணவர்கள் பயிற்றுவிக்கப்பட்டிருந்தனர்.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முறைப்படியாக ஒப்படைப்புச் செய்யப்படாதும் உத்தியோகப்பூர்வ இல்லங்களின் வாடகை அறவிடப்படாதும் நிறுவனத்தின் பணிப்பாளர் உத்தியேகபூர்வ இல்லங்கள் 2015 ஆம் ஆண்டிலிருந்து அமைச்சின் ஒருங்கிணைப்பு செயலாளருக்கு

வழங்கப்பட்டிருந்தது. உத்தியோகபூர்வ இல்லத்திற்காக நீரும் மின்சாரமும் நிறுவனத்தினால் வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்காக நீர் மற்றும் மின்சாரக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. மேலும் இந்த உத்தியோகபூர்வ இல்லத்தில் 2017 பெப்ரவரி மாதத்திலிருந்து யூலை மாதம் வரை ரூபா 33,607 தொலைபேசிக் கட்டணமும் நிறுவனத்தினால் செலுத்தப்பட்டிருந்தது. இந்நிலைமையின் அடிப்படையில் நிறுவனத்தின் பணிப்பாளர் பதிவாளரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் வசித்து வந்ததுடன் இது சம்பந்தமாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிறுவனத்திற்குச் சொந்தமான விடுதியின் 05 அறைகள் கட்டணங்கள் அறவிடப்படாது 2015 மே மாதத்திலிருந்து விவசாய அமைச்சின் பாதுகாப்பு பிரிவிலுள்ள உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. இவ்வாடகையை அறவீடு செய்வதற்கு அல்லது அறையை மீளப்பொற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாததன் காரணமாக மீளாய்வாண்டின் இறுதி வரை நிறுவனத்தினால் ரூபா 8,203,030 வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

(இ) 2017 யூன் 07 ஆந் திகதியிலிருந்து யூன் 24 ஆந் திகதி வரை சீனாவில் இடம் பெற்ற விவசாய கருத்தரங்கிற்காக பணிப்பாளர் மட்டத்தில் 45 வயதிற்கு குறைந்த உத்தியோகத்தர் பங்குபற்ற வேண்டிய போதிலும் அந்த வயது எல்லையை மிகைத்த மற்றும் பணிப்பாளர் பதவியைச் சார்ந்திராத 04 உத்தியோகத்தர்கள் பங்குபற்றியிருந்தனர். மேலும் இக்கருத்தரங்கு விவசாய உத்தியோகத்தர்களுக்கு உரியதாக இருந்தும் அதற்குப் புறம்பாக நூலகர், சிரேஷ்ட செய்தி மற்றும் வெளியீட்டு உத்தியோகத்தர் கணக்குப் பிரிவின் இரண்டு உத்தியோகத்தர்கள் ஆகியோர் பங்குபற்றியிருந்தனர். அதற்காக அமையப் படியாக ரூபா 915,580 செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச் சட்டத்தின் 47 ஆம் பிரிவு மற்றும் 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு அதிகாரச் சட்டத்தின் 16 ஆம் பிரிவின் பிரகாரம் அந்த நிதியத்திற்கான பங்களிப்பை கணிப்பீடு செய்யும் போது 2006 சனவரியிலிருந்து 2013 மார்ச் வரை வாழ்க்கைச் செலவுப்படி உள்ளடக்கப்பட்டு கணிப்பீடு செய்யப்படாததன் காரணமாக ரூபா 1,041,662 தொகையான மிகைக் கட்டணம் செலுத்தப்பட்டிருந்தது.

4.3 சச்சரவுத்தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

2014 ஆம் ஆண்டின் போது ரூபா 230,125 செலவு செய்து கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியத்திற்கு கிடைத்திருந்த ஒரு கெசட் ரெக்கோடர் ஒரு கமரா தேக்கு மரத்திலான சாப்பாட்டு மேசை, ஒரு பதவிநிலைக் கதிரை என்பன 2018 மே 18 ஆந் திகதி கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது பௌதீகரீதியாக காணப்படவில்லை. அது தொடர்பாக முகாமைத்துவத்தால் விசாரணை நடாத்தப்பட்டிருக்கவில்லை.

4.4 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

2012 – 2015 காலப்பகுதியின் போது ரூபா 1,031,020 கிரயத்தில் ஸ்தாபிக்கப்பட்ட உயிரியல் வாயுப் பிரிவு 2016 ஆம் ஆண்டிலிருந்து செயற்படாதிருந்ததுடன் அதனை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

4.5 ஆளணி நிர்வாகம்

பின்வரும் அவதாணிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 235 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் வெற்றிடங்கள் 73 ஆகும். அந்த வெற்றிடங்களுக்கு மத்தியில் நிறுவனத்தின் உயர் முகாமைத்துவ மட்டத்திலான பதவியான பதிவாளர் பதவி 2011 சனவரி 03 ஆந் திகதியிலிருந்து 07 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் இதன் காரணமாக நிறுவனத்தின் நிர்வாகச் சிக்கல்களைத் தீர்த்துவைப்பது தடையாகக் காணப்பட்டது.

(ஆ) நிறுவனத்தின் நிர்வாக உத்தியோகத்தர் பதவிக்காக ஒரு உத்தியோகத்தரை சேர்த்துக் கொள்வதற்காக பத்திரிகை விளம்பரங்களை பிரசுரிப்பதற்காக 2016 ஒக்டோபர் 07 ஆந் திகதி ரூபா 54,449 செலவிடப்பட்டிருந்ததுடன் அப்பதவிக்கு உள்ளக உத்தியோகத்தர் ஒருவரை சேர்த்துக் கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டதன் காரணமாக பத்திரிகை விளம்பரங்களைப் பிரசுரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவு விளைவற்ற செலவாக மாறியிருந்தது. அதற்கிணங்க உள்ளக ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் இப்பதவிக்கு நியமிப்பதற்கு முகாமைத்துவ உதவியாளர் சேவையில் உரிய துறையில் 05 ஆண்டுகள் சேவைக் காலத்தைக் கொண்டிருக்கவேண்டிய போதிலும் அத்தகமைகள்

இல்லாத ஒரு உத்தியோகத்தர் பணிப்பாளர் சபையின் அங்கீகாரமில்லாது 2017 யூன் 15 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டிருந்தார்.

## 5. நிலைபேறான அபிவிருத்தி

### 5.1 நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைந்து கொள்ளல்

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு "நிகழ்ச்சி நிரல்" தொடர்பாக நிறுவனத்திற்கு தெரிவிக்கப்பட்டு நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களும் இலக்குகளும் இனங்காணப்பட்டிருந்தும் அந்த இலக்குகளை அடைந்து கொள்வதனை அளவீடு செய்வதற்கான குறிகாட்டிகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

### 6.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீடு செய்யப்பட்ட வருமானத்தையும் செலவுகளையும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவுகளுடன் ஒப்பீடு செய்த போது 15 சதவீதத்திலிருந்து 101 சதவீதம் வரையான வீச்சிலான முரண்கள் அவதானிக்கப்பட்டதனால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

### 6.2 தீர்த்துவைக்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

கடந்த கணக்காய்வு அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தும் போதிய கவனம் செலுத்தப்படாத மற்றும் தீர்த்துவைக்கப்படாத கணக்காய்வுப் பந்திகள் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | பந்தி இலக்கம் | அவதானிப்பு |
|---|---|---|
| 2013 | 5.2 (இ) | வெளிநாட்டுப் பல்கலைக்கழகத்தில் பட்டபின் படிப்பு கற்கை நெறியை பயின்று உடன்படிக்கையை மீறிய 09 புலமைப் பரிசிலாளர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 15,657,898 பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. |

இல்லாத ஒரு உத்தியோகத்தர் பணிப்பாளர் சபையின் அங்கீகாரமில்லாது 2017 யூன் 15 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டிருந்தார்.

## 5. நிலைபேறான அபிவிருத்தி

### 5.1 நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைந்து கொள்ளல்

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு "நிகழ்ச்சி நிரல்" தொடர்பாக நிறுவனத்திற்கு தெரிவிக்கப்பட்டு நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களும் இலக்குகளும் இனங்காணப்பட்டிருந்தும் அந்த இலக்குகளை அடைந்து கொள்வதனை அளவீடு செய்வதற்கான குறிகாட்டிகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

### 6.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீடு செய்யப்பட்ட வருமானத்தையும் செலவுகளையும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவுகளுடன் ஒப்பீடு செய்த போது 15 சதவீதத்திலிருந்து 101 சதவீதம் வரையான வீச்சிலான முரண்கள் அவதானிக்கப்பட்டதனால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

### 6.2 தீர்த்துவைக்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

கடந்த கணக்காய்வு அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தும் போதிய கவனம் செலுத்தப்படாத மற்றும் தீர்த்துவைக்கப்படாத கணக்காய்வுப் பந்திகள் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | பந்தி இலக்கம் | அவதானிப்பு |
|---|---|---|
| 2013 | 5.2 (இ) | வெளிநாட்டுப் பல்கலைக்கழகத்தில் பட்டபின் படிப்பு கற்கை நெறியை பயின்று உடன்படிக்கையை மீறிய 09 புலமைப் பரிசிலாளர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 15,657,898 பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| 2015 | 4.2 (ஆ) | நிதி ஒழுங்கீனத்தின் காரணமாக உதவிப் பதிவாளரின் (நிர்வாகம்) வேலையிலிருந்து இடை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தும் அவர் மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்டிருந்ததுடன் அது சம்பந்தமாக நடாத்தப்பட்ட தொடக்க புலனாய்வு இரத்துச் செய்யப்பட்டு புதிதாக தொடக்க புலனாய்வை நடாத்துமாறு பணிப்பாளர் சபையினால் அறிவுறுத்தப்பட்டிருந்தது. மேலும், விசாரணை நடவடிக்கைகள் முடிவுறுத்தப்படுவதற்கு முன்னர் இந்த உத்தியோகத்தருக்கு பதிற் கடமை பதிவாளர் பதவி வழங்கப்பட்டிருந்தது. |

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது நிறுவனத்தின் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் | அவதானிப்பு |
|---|---|
| (அ) செயற்பாட்டுக் கட்டுப்பாடு | திட்டமிடப்பட்ட வகையில் ஆராய்ச்சி செயற்திட்டங்கள் அமுல்ப்படுத்தப்படாமை. |
| (ஆ) ஆளணி நிர்வாகம் | நிறுவனத்தின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமை. |

டபிள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)
k/y

Fin/Aud/Qry/2018 AGL/D/HAR/01/17/16 2018-10-30

கணக்காய்வாளர் அதிபதி,
கணக்காய்வாளர் அதிபதியின் திணைக்களம்,
இலக்கம் 306/72, பொல்துவ வீதி,
பத்தரமுல்ல.

**2017 திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான ஹெக்டெர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகத்தின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பில், 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகார சட்டத்தின் 14 (2) (இ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் அதிபதியினால் வெளியிடப்படும் கணக்காய்வு அறிக்கை**

2018, செப்டம்பர் மாதம் 25 ஆம் திகதிய மேற்குறித்த அறிக்கை தொடர்பான கருத்துரைகள் இத்துடன் முன்வைக்கப்படுகின்றன.

## 2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

(a) 2017 திசம்பர் 31 ஆம் திகதிற்கு, ஐந்து வருடங்களுக்கும் அதிக காலம் நிலுவையாக இருந்து வருகின்ற கடன் நிலுவைகளின் தொகை 577,716 ரூபாவாகும். முகாமைத்துவ மற்றும் கணக்காய்வுக் குழுவினது சிபாரிசுகளின் அடிப்படையில், குறித்த கடன் நிலுவைகளின் தொகையை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இந்த கடன் நிலுவைகளில் ஒரு 12,906 ரூபா நிலுவைத் தொகை அறவிடப்பட்டுள்ளது. 196,767.25 ரூபா அடங்கிய ஒரு தொகையை, தவணைக்கட்டணங்களில் செலுத்தித் தீர்ப்பதற்கு இந்த நிறுவகத்தினால் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன.

(b) ஐந்து வருடங்களுக்கும் அதிக காலமாக கடன் நிலுவையாக இருந்து வருகின்ற 388,053 ரூபா தொடர்பான விபரங்கள் பின்வருமாறு:

I. பதவி விலகிய ஊழியர்களுக்கு செலுத்த வேண்டிய நிலுவை 167,607.51 ரூபாவாகும். இந்த நிலுவையில் திரு யூ.எல்.ஜே.ஜே. பெரேரா என்பவருக்கு வெளிநாட்டுப் புலமைப்பரிசில் தொடர்பாக செலுத்த வேண்டிய 17,593 ரூபா கடன் நிலுவைத் தொகை உள்ளடங்குகின்றது. எஞ்சிய 150,014.51 ரூபா தொகையான நிலுவை திரு ரீ. ரவிச்சந்திர என்பவருக்கு செலுத்த வேண்டிய நிலுவையாகும். வெளிநாட்டுப் புலமைப்பரிசில் கடனாளி ஒருவரான திரு வி. சன்முகராஜா என்பவருக்கு இவர் ஒரு பிணையாளராவார். ஆகையால், இந்தத் தொகை செலுத்தப்படவில்லை.

II. இது நிறுவகத்தின் நலன்புரி சங்கத்திற்கு வருடாந்தம் செலுத்த வேண்டிய நிறுவனப் பங்களிப்பு. இந்த 150,000 ரூபா தொகை 2013 ஆம் ஆண்டிற்கு நிறுவனத்தினது பங்களிப்பாகும். இந்தத் தொகையை செலுத்தித் தீர்ப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.

III. இது சிற்றுண்டிச்சாலையை பராமரித்து நிருவகிக்கும் திரு உபதிஸ்ஸ பரணமான என்பவரினால் வைப்புச்செய்யப்பட்ட மீள்கொடுப்பனவு வைப்புத் தொகையாகும். இந்தத் தொகை அவர் சிற்றுண்டிச்சாலையை விட்டுச்செல்லும் போது தீர்ப்பனவு செய்யப்படும்.

IV. ஐந்து வருடங்களுக்கு முன்னர் இந்த நிறுவகத்தில் அமைய ஆய்வாளர்களாக பணியாற்றி, நிறுவகத்திலிருந்து விலகியவர்களுக்கு செலுத்த வேண்டிய சம்பளங்களும் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளும் இந்த 20,445.63 ரூபா தொகையில் அடங்குகின்றன.

இந்தத் தொகையை தீர்ப்பனவு செய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.

(c) இந்தக் கட்டணங்களின் பெறுமானம் தற்பொழுது அறவிடப்பட்டுள்ளது. இந்த மாதாந்த மின்சாரக் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**2.3** இந்த இருப்புகளை பிரதான களஞ்சியத்திலிருந்து சரியான முறையில் அகற்றுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

## 3. நிதி சார்ந்த மீளாய்வு

### 3.1 நிதிப் பெறுபேறுகள்

சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயம் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.

## 4. இயக்கச்செயற்பாடு சார்ந்த மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

### 4.1.1 செயலாற்றுகைகளும் மீளாய்வும்

(a) 14 ஆராய்ச்சி அறிக்கைகள் தொடர்பாக இந்த அறிக்கையில் வினவப்பட்டிருந்தாலும், கணக்காய்வாளர் அதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்ட விரிவான அறிக்கையின் மூலம் 15 ஆராய்ச்சிகள் தொடர்பாக வினவப்பட்டுள்ளது. அதற்கிணங்க, அந்த 15 ஆராய்ச்சி அறிக்கைகள் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

1. 'நெற் காணிகள் பற்றிய தரவுகளிலுள்ள வித்தியாசங்களை நிர்ணயிக்கும் தாழ்நாட்டு உலர் வலய முன்னோடிக் கருத்திட்டம் (R-490) தொடர்பான ஆராய்ச்சி அறிக்கையை தயாரிக்கும் விடயம் நிறைவு செய்யப்பட்டிருந்தாலும், அது ஒரு புத்தமாக வெளியிடப்படவில்லை. கமநல அபிவிருத்தித் திணைக்களம் விவசாய நிலம் தொடர்பாக வழங்கிய தரவுகளில் தொழில் நுட்ப ரீதியான தவறுகள் காணப்பட்டதால், ஒரு ஆராய்ச்சி அறிக்கையாக வெளியிட வேண்டும் என நிறுவகத்தின் நிருவாகிகள் சபை அறிவுறுத்தியுள்ளமை இந்த அறிக்கை புத்தமாக வெளிவிடப்படாமைக்கான காரணமாகும். அதற்கிணங்க, ஆய்வின் ஒருங்கிணைப்பாளரால் பணியாற்ற வேண்டியிருந்தது.

2. 'திரவ மற்றும் தூள் மாவு (R-491) தொடர்பிலான நுகர்வோர் கொள்வனவு நடத்தை மற்றும் செயலாற்றுகை' என்ற ஆராய்ச்சி அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இந்த அறிக்கையின் ISBN இலக்கம் 978-955-612-236-07.

3. 'அம்பாந்தோட்டை மாவட்டத்தின் பருவகாலமல்லாத கால பெரிய வெங்காய உற்பத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் (R-492) எதிர்வுகூறல்களும் மற்றும் தடைகளும்' என்ற ஆராய்ச்சி வெளியிடப்பட்டுள்ளது. இந்த அறிக்கையின் ISBN இலக்கம் 978-955-612-235-0.

4. 'மழை நீரை பயன்படுத்தும் விவசாயிகள் வரட்சியினால் பாதிக்கப்படுகின்றமை மற்றும் நெகிழ் ஆற்றலை அதிகரிப்பதற்கு சாத்தியமான திறமுறைத்திட்டங்கள் (R-493) என்ற ஆராய்ச்சி அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இந்த அறிக்கையின் ISBN இலக்கம் 978-955-612-235-0.

5. கமத்தொழில் அமைச்சு விடுத்த வேண்டுகோளின் பேரில் *'ஆவறய அஹவரய'* எனும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆயினும், அது முழுமையாக வெற்றியளிக்காத ஒரு கருத்திட்டம் என்பதால், அந்த அறிக்கையை வெளியிட வேண்டாம் என கமத்தொழில் அமைச்சு அறிவுறுத்தியது. அதற்கிணங்க, ஆய்வின் ஒருங்கிணைப்பாளரால் பணியாற்ற வேண்டியிருந்தது.

6. ‘நெல் உற்பத்தியில் பொறிமுறைப்படுத்தல், வாழ்வாதார மரிதிரி மற்றும் தொழிலாளர் பயன்பாடு (R-495)’ என்ற ஆராய்ச்சி அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இந்த அறிக்கையின் ISBN இலக்கம் 978-955-612-242-8.

7. ‘இலங்கையின் மரக்கறிப் பயிர்ச் செய்கையும் கலப்பு விதைகளும்: உள்நாட்டு விதைகள் எதிர் இறக்குமதி செய்யப்பட்ட விதைகள் (R-496)’ என்ற ஆராய்ச்சி அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இந்த அறிக்கையின் ISBN இலக்கம் 978,955-612-237-4.

8. ‘சமுர்த்தி வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் வாழ்வாதார அபிவிருத்திப் பிரிவு மதிப்பீடு (R-497)’ என்ற ஆராய்ச்சி அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இந்த அறிக்கையின் ISBN இலக்கம் 978-955-612-240-1.

9. ‘இலங்கையில் நெற் பயிர்ச் செய்கையில் பூச்சிநாசினிகளுக்கான கேள்வியும் மற்றும் விவசாயிகளின் பங்குபற்றலும் (R-498)’ என்ற ஆராய்ச்சி அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இந்த அறிக்கையின் ISBN இலக்கம் 978-955-612-234-3.

10. ‘பதுளை மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் சிறு மற்றும் நடுத்தர அளவான பூந்தாவர வளர்ப்பு தொழில்முயற்சியாளர்களின் தற்போதைய நிலையும் எதிர்கால சாத்தியங்களும் (R-499)’ என்ற ஆராய்ச்சி அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இந்த அறிக்கையின் ISBN இலக்கம் 978-955-612-225-01.

11. ‘இலங்கையிலுள்ள வாசனைப் பொருட்களின் பிரச்சினைகளும் எதிர்வுகூறல்களும் பற்றிய ஆய்வின் (R-500)’ சகல ஆராய்ச்சி விடயங்களும் நிறைவு செய்யப்பட்டுள்ளன. ஆராய்ச்சி அறிக்கையின் பதிப்பு பணி 2018 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 20 ஆம் திகதிற்கு நிறைவு செய்யப்பட்டிருக்கின்றது. இந்த ஆய்வின் ஒருங்கிணைப்பாளர் தனக்கு இருக்கின்ற வேலைப்பளுவின் காரணமாக, அறிக்கை தயாரிப்பதில் தாமதம் ஏற்பட்டிருப்பதாக அறிவித்துள்ளார். ஆகையால், குறித்த அறிக்கையை 2018 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதத்தினுள் வெளியிடுவதற்கு முடிந்தது.

12. ‘இலங்கையின் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் வித்தியாசமான அரிசி இனங்கள் தொடர்பான நுகர்வு மாதிரிகளும் மற்றும் நுகர்வோர் மாதிரிகளும் (R-501)’ என்ற ஆராய்ச்சி அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இந்த அறிக்கையின் ISBN இலக்கம் 978-955-612-223-07.

13. ‘இலங்கையில் புகையிலையின் தொடர் பயிர்ச் செய்கையில் பாதிக்கின்ற காரணிகளும் அதன் பின்னர் அவை ஏனைய அதிக பெறுமானமுடைய பயிர்களில் அல்லது பயிர்ச் செயற்பாடுகளில் செலுத்தும் தாக்கம் (R-502)’ என்ற ஆராய்ச்சி அறிக்கை ஒரு worksheet ஆக வெளியிடப்பட்டுள்ளது.

14. ‘மட்டக்களப்பு மாவட்டத்தின் சமுர்த்தி நன்மை பெறும் விவசாய குடும்பங்களின் வருமானத்தை அதிகரிக்கும் சாத்தியங்களை கண்டறிதல் (R-503)’ என்ற ஆராய்ச்சி அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

15. ‘கமத்தொழில் அமைச்சினால் செயற்படுத்தப்பட்ட விவசாய பண்ணை நிகழ்ச்சித்திட்டம் மற்றும் இளம் விவசாய தொழில்முயற்சியாளர்கள் நிகழ்ச்சித்திட்டம் ஆகியவற்றின் மதிப்பீடு’ பற்றிய ஆய்வு (R-504), கமத்தொழில் அமைச்சு விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது தொடர்பான அறிக்கை அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

குறித்த குறிக்கோள்களுக்கு இணங்க கருத்துரைகள் பெற்றுக் கொள்ளப்பட்டு, அதற்கு அமைவாக அபிவிருத்தி செய்யப்பட்டு தயாரிக்கப்பட்ட பின்னர், ஆராய்ச்சி அறிக்கைகள் நிறுவகத்தினால் பின்பற்றப்படும் கொள்கையினூடாக வெளியிடப்படுகின்றன. அதற்கிணங்க, ஆராய்ச்சியின் உரிய விடயப் பரப்பில் இரண்டு வெளிக்கள மீளாய்வு நிபுணர்களின் கருத்துக்கள் பெறப்பட்டு, ஆராய்ச்சி அறிக்கைகளை தயாரிக்கின்ற விவசாயப் பணிப்பாளரினது அவதானிப்பின் பின்னர், பிரிவுத் தலைவர்களின் கருத்துரைகள் உள்ளடக்கப்பட்டு, ஆராய்ச்சி

அறிக்கையை தயாரிப்பது தொடர்பான பின்வரும் மூன்று கட்டங்களினால் ஆராய்ச்சி அறிக்கையின் நிலை இற்றைப்படுத்தப்படுகின்றது. அதன் பின்னர், அந்த ஆராய்ச்சி அறிக்கைகள் முறையே பதிப்புக்காக அனுப்பப்பட்டு, செவ்வைபார்க்கப்படுகின்றன. இறுதியாக, அவற்றுக்கு ISBN இலக்கங்கள் பெறப்பட்ட பின்னர், உள்ளடக்கப் பக்கங்கள் அரசாங்க அச்சீட்டுக் கூட்டுத்தாபனத்தினால் அச்சிடப்படுகின்றன. மேற்குறித்த ஒவ்வொரு அறிக்கையையும் தயாரித்து அச்சிடுவதற்கு கணிசமான காலம் எடுக்கின்றது. ஒரு ஆராய்ச்சி அறிக்கையை வெளியிடுவதற்கு நீண்டகாலம் எடுப்பதற்கான காரணங்கள் மேலே கூறப்பட்ட காரணிகள் என்பதை இறுதியாக குறிப்பிட்டாக வேண்டும்.

(b) மீளாய்வு செய்யப்பட்ட செயல் திட்டத்திற்கு இணங்க, மீளாய்வு ஆண்டு காலத்தில், நிறுவகத்தினால் ஏழு விடயங்களின் கீழ் 136 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துவதற்காக 12.05 மில்லியன் ரூபா நிதியை பெறுவதற்கு எதிர்பார்க்கப்பட்டாலும், 76 அத்தகைய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு மாத்திரமே திறைசேரி நிதியின் கீழ் 4.4 மில்லியன் ரூபா நிதிகள் ஒதுக்கப்பட்டிருந்தன.

எனினும், மீளாய்வு செய்யப்பட்ட செயல் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் ஊழியர்களுக்கான திறன்கள் அபிவிருத்தி பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் கமத்தொழில் அமைச்சு விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டு, 60 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துவதற்காக கமத்தொழில் அமைச்சிலிருந்து 7.5 மில்லியன் ரூபா நிதியைப் பெற்றுக் கொள்வதற்கு அந்த நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்டது. அங்கீகாரமும் தேவையான நிதிகளும் இல்லாதிருந்ததால் அந்த நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொண்டு நடத்த முடியவில்லை. எனினும், அந்தப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான பிரேரணைகள் அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. அந்த நிகழ்ச்சித்திட்டங்களுக்கான பயிற்சி மொடியூல்களும் தயாரிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளன.

அதற்கிணங்க, மீளாய்வு செய்யப்பட்ட செயல் திட்டத்தின் பிரகாரம் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன. தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சித்திட்டத்தை (2016-2018) வலுப்படுத்தும் பொருட்டு பணிப்பாளர் வழங்கிய அனுமதியின் கீழான நோக்கெல்லைக்கு இணங்க, T-421, T-422 மற்றும் T-423 ஆகிய நிகழ்ச்சித்திட்டங்கள் விஷேட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களாக செயற்படுத்தப்பட்டன.

'ஆரோக்கியமான ஓர் பரம்பரைக்கான விவசாயம் (T-420)' என்ற தலைப்பில், மொனராகல் மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் நடத்துவதற்காக முப்பது பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் திட்டமிடப்பட்டிருந்தன. குறித்த ஆண்டின் நான்காவது காலாண்டு முடிவடைவதற்கு முன்னர், மொனராகல் மாவட்டத்தின் 18 கமநல அபிவிருத்திப் பிரிவுகளிலும் மற்றும் நுவரெலியா மாவட்டத்தில் 12 கமநல அபிவிருத்திப் பிரிவுகளிலும், இந்த நிகழ்ச்சித்திட்டம் நடத்தப்பட்டது. இந்தப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தில் 2803 விவசாயத் தலைவர்கள் வெற்றிகரமாக பயிற்றுவிக்கப்பட்டனர்.

இது தவிர, ஒரு விஷேட பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் புத்தள மாவட்டத்தில் நடத்தப்பட்டது. இந்தப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தில் 66 விவசாயத் தலைவர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர்.

அதற்கிணங்க, மீளாய்வு ஆண்டு காலப் பகுதியில் 81 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் வெற்றிகரமாக நடத்தப்பட்டன.

(C) தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கு (2016/2018) இணையாக செயற்படுத்தப்பட்ட 'விவசாயத் தலைவர்களை வலுவூட்டும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் (T-421)' கீழ், தேர்ந்தெடுக்கப்பட்ட சில மாவட்டங்களில் ஒரு பயிற்றுவிப்பாளர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டமாக செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டாலும், இந்த நிகழ்ச்சித்திட்டம் தேசிய உணவு உற்பத்தி

நிகழ்ச்சித்திட்டத்தை (2016/2018) வலுப்படுத்துவதற்கான ஒரு விஷேட பயிற்சி நிகழ்ச்சித்திட்டமாக, பணிப்பாளரின் அனுமதியுடன் பொலன்னறுவை மாவட்டத்திலுள்ள 14 கமநல அபிவிருத்திப் பிரிவுகளில் நடத்தப்பட்டது. இந்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தில் கமக்காரர் அமைப்புகளின் 1337 விவசாயத் தலைவர்கள் வெற்றிகரமாக பயிற்றுவிக்கப்பட்டனர்.

(d) சந்தைப்படுத்தல் விஸ்தரிப்பு தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் (T-422) கீழ், விவசாய வர்த்தக சந்தைப்படுத்தல் துறைகள் தொடர்பான கோட்பாடு மற்றும் செயன்முறை ரீதியான அறிவு, மனோபாவங்கள் மற்றும் திறன்கள் என்பவற்றை விருத்தி செய்யும் நோக்கில், யழ்ப்பாண பல்கலைக்கழக விவசாய பீடத்தின் மாணவர்களுக்காக, ஹெக்டெர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகத்தில், 2017 ஆம் ஆண்டு முடிவடைவதற்கு முன்னர், 'விவசாய வர்த்தக எண்ணக்கருக்களின் பிரயோகமும் சந்தைப்படுத்தல் விஸ்தரப்பும்' என்ற தலைப்பில் ஒரு மூன்று நாள் வேலையரங்கு நடத்தப்பட்டது. யாழ்ப்பாண பல்கலைக்கழக விவசாய பீடத்தின் 88 பட்டதாரி மாணவர்கள் இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கான முக்கிய பங்குபற்றுநர்களாக இருந்தனர். இந்த நிகழ்ச்சித்திட்டம் தேசிய நல்லிணக்கத்தையும், தேசிய ஒற்றுமையையும் கட்டியெழுப்புவதற்கு பங்களித்தது.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

(a) பணிப்பாளரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் வதிந்தவர்கள் தற்பொழுது அந்த உத்தியோகபூர்வ இல்லத்திலிருந்து வெளியேறியுள்ளனர். மதிப்பட்ட பெருமளவான வாடகைப் பெறுமானம் தவிர, கிடைக்க வேண்டிய ஏனைய நிலுவைகள் மீறவிடப்பட்டுள்ளன.

(b) கமத்தொழில் அமைச்சின் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இந்த நிறுவகத்தின் விடுதி அறைகளிலிருந்து தற்போது வெளியேறியுள்ளனர். விடுதி வசதிகளை பெற்ற காலப்பகுதிற்குரிய விடுதிக் கட்டணங்களை அறவிடும் பொருட்டு அமைச்சுக்கு, ஒரு கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

(c) கமத்தொழில் அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட 2017 ஆம் ஆண்டு மே மாதம் 16 ஆம் திகதிய கடிதத்தினதும் மற்றும் மேற்குறித்த வேலையரங்குக்காக உத்தியோகத்தர்களை பெயரிட்டு அனுப்புவது தொடர்பான அந்த அமைச்சின் கடிதத்தினதும் பிரகாரம், பணிப்பாளர் நாயகத்திற்கான வயதெல்லை 50 வயதுக்கு குறைவானது எனவும், பணிப்பாளருக்கான வயதெல்லை 45 வயதுக்கு குறைவானது எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது.

அதற்கிணங்க, அன்றைய பணிப்பாளரினாலும், மேலதிகப் பணிப்பாளரினாலும் மூன்று சிரேஷ்ட ஆராய்ச்சியாளர்களின் பெயர்கள் மாத்திரமே குறித்து அனுப்பப்பட்டிருந்தன. இலங்கை - சீன நட்புறவின் கீழ், ஏனைய அரசாங்க நிறுவனங்கள் அத்தகைய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை பெற்றுள்ளன. எனினும், இதுவே இந்த நிறுவகத்திற்கு கிடைத்த முதலாவது வாய்ப்பாகும். ஆகையால், அந்த நிறுவனங்களின் 30 நாட்கள் மற்றும் 45 நாட்கள் என்ற கால அளவையுடைய சீனாவுக்கான சுற்றுப்பயணத்தில் கலந்துகொண்ட அந்த உத்தியோகத்தர்கள் தொடர்பான விபரங்கள் வாய்மொழியாக பெற்றுக்கொள்ளப்பட்டன (உ-ம்: விவசாயத் திணைக்களம்).

இந்த சந்தர்ப்ப சூழ்நிலைகளில், எமது நிறுவகத்திற்கு கிடைத்த நான்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் 11 உத்தியோகத்தர்களால் கலந்துகொள்ள முடிந்தது. மேலதிகப் பணிப்பாளரும் மற்றும் பகுதித் தலைவர்கள், இந்த நிறுவகத்திற்கு கிடைத்த வாய்ப்பை நழுவக்கூடாது என எண்ணி, மூன்று சிரேஷ்ட உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் அந்தப் பயிற்சி வாய்ப்பை மட்டுப்படுத்துவதற்கு உத்தேசித்தனர்.

பின்வரும் பிரச்சினை விடயங்கள் கமத்தொழில் அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் செல்வி ஹந்துன்ஹேவா என்பவரிடமிருந்து (அவரால்

அனுப்பப்பட்ட 2017 ஆம் ஆண்டு மே மாதம் 16 ஆம் திகதிய கடிதம்) மேலதிப் பணிப்பாரளரின் மூலம் வாய்மொழியாக தீர்த்துக்கொள்ளப்பட்டன.

a. சிரேஷ்ட உதவி செயலாளரினால் அனுப்பப்பட்ட 2017 ஆம் ஆண்டு மே மாதம் 16 ஆம் திகதிய கடிதத்திற்கு இணங்க, வயதுப் பிரிவுகளும், பதவிகளும் பற்றி கலந்துரையாடப்பட்டு, பட்டத்தை பெற்ற 50 வயதுக்கு குறைந்த வயது அல்லது அனுபவங்களின் அடிப்படையில் விண்ணப்பகாரர்களை தேர்ந்தெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

b. அந்தக் கடிதத்திற்கு இணங்க, குறித்த அந்த நான்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் இரண்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரமே இந்த நிறுவகத்திற்கு பொருத்தமான நிகழ்ச்சித்திட்டங்களாக (அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடுகளுக்கான நவீன விவசாயமும் உணவுப் பாதுகாப்பும் என்ற தலைப்பிலான 2017 ஆம் ஆண்டிற்குரிய கருத்தரங்கு/கடலோரப் பகுதியும் வீதியும் அடங்கலாக நாடுகளுக்கான விவசாய மரபுரிமை ஸ்தலங்களை நிருவகித்தல் மற்றும் பாதுகாத்தல் என்ற தலைப்பிலான கருத்தரங்கு) இருந்தன என விவரிக்கப்பட்டிருந்தது. HARTI நிறுவகத்தின் சார்பாக ஐந்து உத்தியோகத்தர்களும் மற்றும் SLCARP சார்பாக ஐந்து உத்தியோகத்தர்களும் முதலாவது நிகழ்ச்சித்திட்டத்திற்கான பெயர்களாக முன்மொழியப்பட்டிருந்தனர் என இவர் மேலும் தெளிவுபடுத்தியிருந்தார். SLCARP தனது உத்தியோகத்தர்களை அனுப்புவதற்கு தயாரில்லை என்பதால், 'அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடுகளுக்கான நவீன விவசாயமும் உணவுப் பாதுகாப்பும் என்ற தலைப்பிலான 2017 ஆம் ஆண்டிற்குரிய கருத்தரங்கு/கடலோரப் பகுதியும் வீதியும் அடங்கலாக நாடுகளுக்கான விவசாய மரபுரிமை ஸ்தலங்களை நிருவகித்தல் மற்றும் பாதுகாத்தல் என்ற தலைப்பிலான கருத்தரங்கு' முதலாவது நிகழ்ச்சித்திட்டத்திற்கு, HARTI நிறுவகம் 10 உத்தியோகத்தர்களை கூட அனுப்பலாம் என, மேலும் இவர் விளக்கியிருந்தார்.

எமது நிறுவகத்தின் உத்தியோகத்தர்களுக்கு ஆகக்கூடிய வாய்ப்புகளை வழங்கும் வகையில் பகுதித் தலைவர்களுடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம், வயதெல்லையினதும் (50 வயதுக்கு குறைந்த) மற்றும் தகைமைகளினதும் (பட்டமும் அனுபவமும்) அடிப்படையில் பெயர் மனுக்கள் பெற்றுக் கொள்ளப்பட்டன.

1. பகுதித் தலைவர் (புள்ளிவிபரங்கள் மற்றும் தரவுகள் படிமுறைப்படுத்தல், நூலகம் மற்றும் வெளியீடு)
   a. எஸ்.ஏ.சி.யூ. சேனாநாயக்க, சிரேஷ்ட தகவல் மற்றும் வெளியீட்டு உத்தியோகத்தர்
   b. எச்.எம்.ரீ.ஜி.எல். ஹேரத், நூலகர்

2. கணக்காளர்
   a. ஜே.பி. நாணயக்கார, உதவிக் கணக்காளர்
   b. டப்ளியூ.டீ.ஜி. பெரேரா, கணக்குகள் உத்தியோகத்தர்

பகுதித் தலைவர்களினூடாக இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு சகல பிரிவுகளிலிருந்தும் அலுவலர்கள் அழைக்கப்பட்டாலும், ஆரம்பத்தில் மேற்குறித்த நான்கு உத்தியோகத்தர்கள் மாத்திரமே தமது விருப்பத்தை தெரிவித்திருந்தனர்.

இந்த சீன சுற்றுப்பயணம் நிறுவகத்தின் சகல ஊழியர்களுக்கும் நல்லதொரு அனுபவத்தை பெற்றுக் கொடுக்கும் என்பதால், சகல தேவையான தகைமைகளையும் (உடன்பட்ட தகைமைகளுக்கு இணங்க) பூர்த்தி செய்துள்ள நிருவாக பிரிவு உத்தியோகத்தர்கள், ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள், புள்விபரவியலாளர்கள், நூலக ஊழியர்கள். வெளியீட்டு உத்தியோகத்தர்கள் ஆகியோரிடம் அவர்களின் விருப்பம் வாய்மொழியாக வினவப்பட்டு சகல ஆராய்ச்சி உத்தியோகத்தர்களுக்கும், துணை ஊழியர்களுக்கும் இந்த வாய்ப்பு பெற்றுக் கொடுக்கப்பட்டது.

நான்கு உள்ளக ஊழியர்கள் மாத்திரமே முன்வந்திருந்ததால், இந்த நிறுவத்தில் தற்பொழுது 25 வருடங்களுக்கும் மேலதிக காலம் பணியாற்றி வருகின்ற பின்வரும் இரண்டு புள்ளிவிபரவியலாளர்களின் பெயர்கள் உணவு சந்தைப்படுத்தல் கொள்கை மற்றும் விவசாய வர்த்தகப் பிரிவின் தலைவரினால் பரிந்துரைக்கப்பட்டிருந்தன.

1. ஜே.சி.கே.பீ. லயனெல், புள்ளிவிபரவியல் உத்தியோகத்தர் (பதில்), மாத்தளை
2. எச்.எம்.எஸ். ஜயரட்ன, புள்ளிவிபரவியல் உத்தியோகத்தர் (பதில்), நுவரெலியா

இந்த நடபடிமுறையின் போது, இந்த சீன சுற்றுப்பயணத்திற்கு ஒரு நேர்முகப் பரீட்சையை நடத்தும் தேவை எழவில்லை. அன்றிருந்த பணிப்பாளர், மேலதிகப் பணிப்பாளர் ஆகியோரின் மூலமாக விருப்பமும் தகைமைகளும் கேட்டறியப்பட்டதன் பேரில், இந்த நிறுவகத்தினால், அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடுகளுக்கான நவீன விவசாயமும் உணவுப் பாதுகாப்பும் என்ற தலைப்பிலான 2017 ஆம் ஆண்டிற்குரிய கடலோரப் பகுதியும் வீதியும் அடங்கலாக நாடுகளுக்கான விவசாய மரபுரிமை ஸ்தலங்களை நிருவகித்தல் மற்றும் பாதுகாத்தல் என்ற கருத்தரங்கு தொடர்பான முதலாவது பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்குரிய' சீன சுற்றுப்பயணம் தொடர்பில் ஏழு உத்தியோகத்தர்களுக்கு வாய்ப்பை பெற்றுக் கொடுக்க முடிந்தது. அமைச்சு வழங்கிய வாய்மொழியான தகவல்களின் பிரகாரம், ஏனைய நான்கு உத்தியோகத்தர்களுக்கு இந்த வாய்ப்பு இருந்திருந்த போதிலும், தேர்ந்தெடுக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் விரும்பாமையினாலும், குறித்த உத்தியோகத்தர்கள் தேவையான தகைமைகளையும் மற்றும் வயதெல்லையையும் பூர்த்தி செய்யாதிருந்தமையினாலும், அந்த நான்கு வாய்ப்புகளையும் இந்த நிறுவகத்தினால் பெற்றுக் கொள்ள முடியவில்லை.

மேற்குறித்த சுற்றுப்பயணம் தொடர்பாக கமத்தொழில் அமைச்சு வழங்கிய வாய்மொழியான தகவல்களின் எழுத்திலான ஒரு ஆவணத்தை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு நாட்கள் இல்லாதிருந்ததால், மேற்குறித்த ஏழு உத்தியோகத்தர்களினதும் பெயர்களை வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு உரிய அங்கீகாரத்தை கமத்தொழில் அமைச்சு வழங்கியிருந்தமையை, கணக்காய்வில் வினவப்பட்ட விசாரணைக்கான பதிலாக அறிவிக்க முடியும்.

ஆயினும், கமத்தொழில் அமைச்சு வழங்கிய வாய்மொழியான தகவல்கள் அடங்கிய ஒரு உறுதிப்படுத்தும் ஆவணத்தை இந்த நிறுவகம் கோவைப்படுத்தியிருக்க வேண்டும் என்பது தெளிவான விடயமாகும். இது மாதிரியான வாய்மொழியான தகவல்களை இந்த நிறுவகம் எதிர்காலத்தில் நிச்சயப்படுத்திக்கொள்ளும் என்பதை உறுதியாக கூறுகின்றேன்.

(d) அரசாங்கம் வழமையாக வெளியிடுகின்ற வாழ்க்கைச் செலவுப்படிக் கொடுப்பனவு தொடர்பான சுற்றறிக்கையினூடாக சரியான ஆலோசனை வழங்கப்படாததால், வாழ்க்கைச் செலவுப்படிக் கொடுப்பனவின் கீழ் வருகின்ற ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கான பங்களிப்பு தொகை செலுத்தப்படாததன் அடிப்படையில் 1,041,662 ரூபா தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளது. இந்தத் தண்டப்பணம் தொடர்பான சகல விபரங்களும் தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் இந்தத் தண்டப்பணக் கொடுப்பனவுகளுக்கான நிதி ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த நிதியேற்பாடுகளின் அடிப்படையில் குறித்த தண்டப்பணம் தீர்ப்பனவு செய்யப்பட்டுள்ளது.

### 4.3 முரண்பாடுகளுக்கு வழிவகுத்த கொடுக்கல்வாங்கல்கள்

சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயம் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

**4.4 பயன்படாமல் முடங்கிக் கிடந்த சொத்துக்கள்**

சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயம் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

**4.5 பதவியணி நிருவாகம்**

(a) இந்த நிறுவகத்தின் பதிவாளர் பதவிற்கும் மற்றும் ஏனைய சில பதவிகளுக்கும் தற்பொழுது ஆட்சேர்ப்புகள் செய்யப்பட்டுள்ளன. ஏனைய பதவிகளுக்கு ஆட்சேர்த்துக்கொள்ளவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

(b) இந்த நிறுவகத்திற்கு நிருவாக உத்தியோகத்தர் ஒருவரை ஆட்சேர்த்துக்கொள்ளும் முகமாக செய்திப் பத்திரிகை விளம்பரத்திற்கு அதிக செலவு செய்யப்பட்டுள்ளது. எனினும், விண்ணப்பங்களை தேர்ந்தெடுத்து, ஒரு எழுத்துமூலப் பரீட்சையை நடத்துவதற்கு அதிகளவு செலவு ஏற்படும். ஆகையால், தகுதி வாய்ந்த உள்ளக விண்ணப்பகாரர்களுக்கு இடையிலிருந்து ஒரு நிருவாக உத்தியோகத்தரை தேர்ந்தெடுப்பதற்கு அன்றிருந்த பணிப்பளார், நிருவாகிகள் சபையிடமிருந்து அனுமதியை பெற்றுள்ளார். அதற்கிணங்க, ஒரு உள்ளக விண்ணப்பகாரர் 2017 யூன் மாதம் 15 ஆம் நியமிக்கப்பட்டார். எனினும், ஜனாதிபதி விசாரணைக் குழுவின் தீர்மானத்திற்கு இணங்க, அவரின் நியமனம் தொடர்பான ஒரு விசாரணையின் பின்னர் அவர் 2017 யூன் 15 ஆம் திகதி செயல்வலுப்பெறும் வகையில் நியமிக்கப்பட்டார். இவர் முகாமைத்துவ உதவியாளர் பதவியில் மீள சேவைக்கு அமர்த்தப்பட்டார்.

**5 நிலையான அபிவிருத்தி**

**5.1 நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைதல்**

ஆராய்ச்சிகளை மதிப்பிடும் பொருட்டு எமது நிறுவகத்தில் முக்கிய செயலாற்றுகை சுட்டிகள் (மு.செ.சு.) இனங்காணப்பட்டுள்ளன. நிலையான அபிவிருத்தி இலக்குகளையும் குறிக்கோள்களையும் மதிப்பிடும் நிமித்தம் எமது நிறுவகம் தற்பொழுது சுட்டிகளை தயாரித்து வருகின்றது.

**6. வகைகூறும் தன்மையும் நல்லாட்சியும்**

**6.1** வரவுசெலவுத்திட்டத்தை முகாமைத்துவத்தின் பயனுள்ள கட்டுப்பாட்டு சாதனமாக உபயோகிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.

**6.2 2013 5.2 (C)**

வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் பட்டப்பின்படிப்புப் பாடநெறிகளுக்காக வெளிநாட்டுப் புலமைப்பரிசில்களை (வெளிநாட்டுப் புலமைப்பரிசில் கடனாளிகள்) குறித்த ஒப்பந்தங்களை மீறியுள்ள நபர்களிடமிருந்து 2017 திசம்பர் மாதம் 31 ஆம் திகதிற்கு 15,657,898 ரூபா தொகை அறவிடப்பட வேண்டியிருந்தாலும், 2016 திசம்பர் 31 ஆம் திகதிற்கு 19,173,425.10 ரூபா தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. இந்த வித்தியாசத்தை அறவிடும் பொருட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. எஞ்சிய நிலுவையையும் அறவிடுவதற்கு இந்த நிறுவகம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும். இது தொடர்பான தகவல்கள் கணக்காய்வுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

**2015 4.2 (b)**

பதிவாளர் பதவியில் நீண்டகாலம் வெற்றிடம் நிலவியதால், அந்தப் பதவிற்குரிய கடமைகளை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு அன்றிருந்த பணிப்பாளர் திரு கே.டப்ளியூ.இ. கறலியத்த அவர்களினால் இந்த அலுவலர்

நியமிக்கப்பட்டுள்ளார். இந்த அலுவலருக்கு எதிராக விசாரணையின் மூலம் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம், இவருக்கு தண்டனை வழங்கப்பட்டு, தற்பொழுது பதில் பதிவாளர் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். பதிவாளர் பதவியில் நிலவிய வெற்றிடம் தற்பொழுது நிரப்பப்பட்டுள்ளது. புதிய ஒரு உத்தியோகத்தர் பணிக்கு அறிக்கையிட்டுள்ளார்.

**7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

**(a)** முறைமைகளும் கட்டுப்பாடுகளும் திட்டமிடப்பட்டவாறு ஆராய்ச்சிக் கருத்திட்டங்களை செயற்படுத்தும் பொருட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றன. அறிக்கைகள் தாமதமின்றி வெளியிடப்படுகின்றன.

**(b)** பதவியணியிலுள்ள பதவி வெற்றிடங்கள் நிரப்பப்படும் என்பதால் நிறுவகத்தின் செயலாற்றுகை குறிக்கோள்கள் நிறைவேற்றப்படும்.

பணிப்பாளர்/பிரதான நிறைவேற்று அலுவலர்

**பிரதிகள்:**

1. செயலாளர், கமத்தொழில் அமைச்சு
2. செயலாளர், நிதி அமைச்சு